அறிவுப்புனல்

# அண்ணா

( ஒரு வரலாற்று ஓவியம் )

188

934

பெங்களூர்

ப. இளவழகன்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

செல்வராசன் பதிப்பகம்

83, பாசியம் நகர், பெங்களூர். 560 021

முதல் பதிப்பு : சனவரி 1980.

உரிமை : ஆசிரியருடையது.

35820

விலை : ரூ. 2 - 00.

சென்னையில் கிடைக்குமிடம் :

ஸ்ரீ தனலட்சுமி புத்தக நிலையம்,
159, போர்ச்சுகீசு சர்ச் தெரு,
சென்னை - 600 001.

ஒரு மகத்தான தத்துவத்தின் மகத்துவத்தைச் சுற்றிவரும் எளிமை—இனிமை—கம்பீரம் இணைந்த, வளமை—வாய்மை—பெருமை பிணைந்த சொல்லொளிச் சிதறி சுகந்தங்கூட்டும் ஒரு எண்ணத் தேரின் உரைநடை ஊர்வலம்...

'அறிவுப் புனல் அண்ணா!'

தூளைகளற்ற சமுதாய மறுமலர்ச்சி

தடைகளற்ற அரசியல் விழிப்புணர்ச்சி

தள்ளாடுதலற்ற பொருளாதார வளர்ச்சி

—இந்த

தன்னிகரற்ற தத்துவங்களின் வடிவில்

தமிழறிந்த உலகின் நடுவில்...

இளமை தொட்டு... இருந்த வரையில்—

இளைப்பாறுதலற்று இருந்து... இயங்கி

பிறந்ததன் பயனைப் பெற்ற பேராளர்!

ஒரு வீட்டிற்கு மட்டும் வெளிச்சம் தரும் விளக்காயில்லா மல், ஒரு வீதிக்கு மட்டுமே வெளிச்சமிடும் தெருவிளக்காயில் லாமல், உலகிற்கே ஒளி வழங்கும் வெண்ணிலவு போல் ஒட்டு மொத்த சமுதாயத்திற்கே இருளகற்றும் ஞானவிளக்காய்த் திகழ்ந்த திருவுடையார்!

தரமான கொள்கையாயினும் தகுதி வாய்ந்தவொரு தலைவன் அதற்கு உடனடியான பலனை ஒருபோதும் எதிர் பார்த்து ஏமாந்துவிடுவதில்லை.

விதையில் வீர்யமிருந்தாலும் — நாற்று நல்லதேயானாலும் —நடவு முடிந்த நான்கைந்து நாட்களுக்குள்ளாகவே கதிரை எதிர்பார்ப்பவன் விவரமறிந்தவொரு விவசாயியாக இருக்க முடியாது—இந்த உண்மை ஒரு தலைவனுக்கும் பொருந்தும் தானே!

அதிலும், தரமான நிலத்திலேயே அது முடியாதபோது தரிசு நிலத்திலா முடியும்?

தமிழ் நிலம் தகாதனவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து, கேட்டுக் கேட்டு, கெட்டு, கெட்டிப்பட்டுப் போய்விட்டிருக்கும் நிலமாயிற்றே!

அது தன்னையுணரவும் —தலையெடுக்கவும் வெகு சிரமத் தோடு—சிரத்தையோடு தொடர்ந்து உழைத்தப் பெரியாரைத் தொடர்ந்து வாழ்ந்த வல்லாளர்!

கிளிமாஞ்சரோ மலையின் கீர்த்தியினை மறவாத ஆப்பிரிக்கரைப்போல்,

கிரெம்ளின் மாளிகையின் உச்சியில் சிரிக்கும் சிவப்பு நட்சத்திரத்தை எண்ணி சிந்தை மகிழும் இரசியரைப்போல்,

பிரமிக்கத்தக்க பிரமிட்டுகளின் எண்ணிக்கைப் பெருமையில் அமிழ்ந்துபோகும் எகிப்தியரைப் போல்,

பிரம்மாண்டமான வரலாற்று நினைவுச் சின்னங்களால் பெரும் பூரிப்புக் கொள்ளும் உரோமானியரைப் போல்,

அகிலத்தையே கவரும் எங்கள் ஐஃபெல் கோபுரமென்று அண்ணாந்து பார்த்து மகிழும் பிரான்சுநாட்டுக் குடிகளைப்போல்,

த மி ழ் — தமிழினம் — தமிழ்நாடு — ஆகியனவற்றின் தொன்மை, வளமை, சிற்ப, சித்திர காவியக் கலைகளின் பெருமைகளில் மனம் நெகிழ்ந்திடும் எந்தவொருவராலும், நேசிக்கப்படக் கூடிய நேர்த்தியாளர் அண்ணா!

ஏனென்றால்,

முத்தமிழ் நிலத்தின் அத்தனைச் சிறப்புக்களையும் தொகுத்துத் தொடுத்துக் காட்டிய பெருமை அவருக்கே உரியதாகும்.

அந்த அறிவுப் புனல் ஊற்றெடுத்த ஆண்டு 1909.

அந்த ஆண்டின் செப்டம்பர்த் திங்கள் 15 ஆம் நாளில் திருமிகு நடராசன்—பங்காரு அம்மையாரின் அருஞ்செல்வமாக பிறந்தார் அண்ணா.

'பாண்டி நாடு முத்துடைத்து'

'சோழ நாடு சோறுடைத்து'

'சேர நாடு வீரமுடைத்து'—என்று பாட்டு மொழி பகர்வது போல் 'தொண்டை நாடு சான்றோருடைத்து' என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டதாகும்.

அத்தகைய தொண்டை மண்டலத்தின் அழகுத் திருநகர். புத்தன் வந்து சென்ற பூமி; அசோகன் பௌத்தத் தூபிகள் நிறுவிய இடம்; சீன நாட்டுப் பயணி யுவான்சுவாங் பாராட்டி மகிழ்ந்த மண்; பல்லவப் பேரரசர்களின் ஆட்சித் திறனுக்குப் பட்டயமான நகரம்; பட்டாடைக்குப் பெயர் பெற்றதுங்கூட; நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைவராகத் திகழ்ந்த தருமபாலரைத் தந்ததும், தேனும் திருக்குறளுக்குத் தெளிவான உரை தந்த பரிமேலழகர் பிறந்ததுமான பேரூர்;

'எம்மதமும் சம்மத'மென்பதை அன்றைக்கே ஏற்றுக் கொண்டுவிட்டதைப்போல், சமணத்திற்கும் சைவத்திற்கும் பௌத்தத்திற்கும் வைணவத்திற்கும்—வரை முறையற்று—வாயிலைத்திறந்து—வரவேற்பு கூறி வளர்த்துவிட்ட வசையிலா வளநகர்;

கோயில்கள் ஏராளம் அங்கே!—எனவே

கோலாகலங்களும் தாராளமாயிருந்த தரணி;

இயலங்கே தழைத்தது;

இசையங்கே செழித்தது;

கூத்தங்கே கொழித்தது.

—இத்தனைப் பெருமைகளுக்கும் மொத்த உறைவிடமாய், "கல்வியிற் கரையிலாக் காஞ்சி மாநகர்" என திருவாசகத்தின் சுவடியிலும் பெருவாசகம் பதிந்துவிட்ட காஞ்சியம்பதி. அதற்கு மேலும் புகழ் கூட்ட அண்ணா அங்கே பிறந்தார்.

வைரமணித் தொட்டில்,

கனகமணிக் கட்டில்,

பவழமணி வட்டில் என வாழ்ந்த குடும்பத்திலே அல்ல;

மிக மிகச் சாதாரணமான ஒரு குடும்பத்திலே தான் அண்ணா பிறந்தார்.

அதுவென்றும் வியப்பல்ல;

அஃதொரு குறைவுமல்ல; அசாதாரணமான சாதனை களின்மூலம் அளவிடற்கரிய புகழீட்டிய பலபேர் அப்படித் தானே பிறந்திருக்கிறார்கள்?

அடிமைத் தளையெடுத்த ஆப்ரகாம் லிங்கன் யார்? ஒரு விறகு வெட்டித் தொழிலாளியாக இருந்தவர்தானே!

அக்டோபர் புரட்சிக்கு வித்தூன்றிய வித்தகர் ஸ்டாலின் மிகவும் பிற்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்த வகுப்பைச் சார்ந்தவர்தானே!

மறுமலர்ச்சி விதையை துருக்கி முழுவதும் தூவிவிட்ட அத்தாதர்க் கெமால் ஒரு சாதாரணச் குடும்பத்தில் பிறந்து ஒரு சிப்பாயாக வாழ்வைத் தொடங்கியவர்தானே!

ஏகாதிபத்தியம் — நிலப்பிரபுத்துவம் — இந்த இரட்டை நுகத்தடியின் அழுத்ததிலிருந்த சீன மக்களை விடுவிக்கப்

போராடிய சிந்தனையாளன் மாசேதுங் கூட ஒரு எளிய விவசாயக் குடும்பத்தவர்தானே!

ஆக, ஒருவரது தோற்றம் எந்தப் பின்னணியில்? — என்பதல்ல; அவரது தேற்றம் எப்படி?— என்பதே கவனிக்கப் படுவதற்கு உரியதாகிறது.

ஒருவரது உயரம் எவ்வளவு?— என்பதல்ல; அவரது

உள்ளம் எப்படிப்பட்டது?—என்பதே எண்ணப்பட வேண்டியதாகிறது.

ஒருவரது நிறம் யாது?— என்பதல்ல; அவரது

நிறை (எடையல்ல) என்ன?— என்பதே நினைக்கப்பட வேண்டியதாகிறது.

அண்ணாவின் தோற்றம்—உள்ளம்—நிறை— அனைத்துமே அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டவை!

அவர், பெற்றோர்க்குஒரே பிள்ளை, நல்ல பிள்ளை.—எல்லோருக்கும் செல்லப் பிள்ளையும் கூட!

அவரைப் பெற்ற தாயினும், சிற்றன்னையான 'தொத்தா' வுக்கே அவரை எடுத்து வளர்த்த பெருமை அதிகம்.

அவருக்குப் பெற்றவர்கள் இட்டபெயர் அண்ணாதுரை.

மற்றவர்கள் மகிழ்வோடு அழைத்துக் கொண்டது 'அண்ணா' என்பது.

'எங்கள் சூர்யனே!

இந்த...சூர்யகுடும்பத்து நட்சத்திரக் கூட்டங்கள்...

எங்கள் இமயமே!

இந்த...இணைபிரியாத அடிவாரங்கள்...

எங்கள் காவிரியே!

இந்த... இணைய வந்த சிற்றோடைகள்...

எங்கள் சொற்பிரவாகமே!

இந்த...எதிரொலிக்க முனையும் முதிராத மழலைகள்...

எங்கள் அகராதியே!

இந்த... அரிச்சுவடியின் பிரதிகள்...

எங்கள் அழகுத் தமிழ் வடிவமே!

இந்த... வடிவத்தின் படிவங்கள்...

ஆம்; நாங்கள்!

உன் வழியே வாழ்நாள் முழுதும்...முழுவதும் வருவோ' மென வாய்விட்டு முழங்கிய ..முழங்கியபடி செயலாற்றுந் திறன் கொண்ட இலட்சக் கணக்கான தம்பியர்க் குயில்கள்...! —குதூகலம் மேலிட குடும்பப் பாசமுடன் கூவியழைத்த பெயர் 'அண்ணு!'

ஆதாம் ஏவாளின் அருமந்தப் புதல்வர்களாம் ஆஃபெல், காயின் ஆகியோர் போட்டியும் பொருமையும் பொங்கிட அடித்துக் கொண்டு நின்றதைப்போல இங்கே சாதிமத மாறுபாடுகளால் மோதிக் கொண்டு நின்ற மக்களை, அமைதிப்படுத்தி—அறிவுவழிப்படுத்தி—நிலை நிறுத்த முயன்றவரை தொண்ணூறு வயதைக் கடந்த பெரியாரும் இராசாசியும் கூட மெல்லிசை போல் செல்லமாய் அழைத்தபெயர் 'அண்ணு!'

அந்த அண்ணுவுன் வாழ்க்கை பலபேரால் பார்க்கப்பட்டு விட்ட காட்சிதான்!— பலபேரால் படிக்கப்பட்டுவிட்ட பாடம் தான்!

ஆனுலும் அது,

பார்க்கப் பார்க்கவும் சலிக்காத காட்சியே!

படிக்கப் படிக்கவும் திகட்டாத பாடமே!

★ ★

அமைதியும் அடக்கமும், சுறுசுறுப்பும், துறுதுறுப்பும், தன்னுடன் இருந்தவர்களிடம் அன்பும், எவரையும் விரட்டாமையும் வெருட்டாமையும், எவரிடமும் கோபம் கொள்ளாமையும், கூர்த்த மதியும் அண்ணுவிடம் இளமையிலேயே இழைந்திருந்த பண்புகள்.

அண்ணுவின் பிஞ்சுப் பருவத்தின் நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகள் பலஉண்டு. அந்தப் பலவற்றுள் அவரது அறிவுக் கூர்மைக்கு சாட்சியமாகும் ஒரு காட்சி:

அண்ணுதுரை எனும் அந்த இளந்தளிரை தெருப்புழுதியில் நிற்க வைத்துவிட்டு உள்ளே சென்ற சிற்றன்னையார்

வீட்டினுள்ளிருந்து மீண்டும் திரும்பி வந்து பார்க்க அங்கே அந்தப் பிள்ளை நிற்காமல் திண்ணை மீது வந்து ஏறிக் கொண்டு நிற்பதைக் கண்டு கேட்கிறார்:

"துரைக்கண்ணு ... உன்னை தெருவிலே தானே நிற்க வச்சுட்டு உள்ளே போனேன்; எதுக்குடா திண்ணைமேலே வந்து நின்னுகிட்டே?"

"போங்க தொத்தா, ஒரே புழுதி! அசிங்கம்! காலெல்லாம் அழுக்காவுது".

"காலிலே புழுதிபட்டா நீ உயரமா வளர்வேன்னு நேற்று நம்ப வீட்டுக்கு வந்திருந்த அந்தப் பெரியம்மா சொன்னதாலே தான் நான் உன்னை அப்படி நிற்க வச்சேன்"

"ஏன் தொத்தா, நீங்க உயரமாத்தானே இருக்கீங்க?"

"ஆமா துரை, இப்ப என்ன அதுக்கு?"

"அப்போ நீங்ககூட புழுதியிலே நின்னீங்களா?"

—அம்பு போல் வந்தது கேள்வி. அயர்ந்து நின்றார் 'தொத்தா'.

ஐந்து வயது அண்ணா தன் சிற்றன்னை திகைத்து நிற்க கேட்டு வைத்த அறிவு பூர்வமான கேள்வி இது.

ஆம்!

அண்ணாவின் அறிவோட்டத்திற்கு அந்த ஐந்தாம் வயதிலேயே வெள்ளோட்டம் நடந்துவிட்டது.

அவரது அறிவு செல்வம் பல்கிப் பெருக—கல்விச் செல்வம் பெற பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார்.

தொடக்கப்பள்ளி படிப்புக்குப் பின்னர் காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியிலும் படித்தார்.

ஆசிரியர் கூறும் பாடங்களைக் கேட்கும் போதே ஊன்றிக் கேட்டதாலும், கேட்டவற்றோடு ஒன்றிப் போனதாலும் வீட்டில் வந்து படிக்கும் பழக்கம் அவரிடம் படியாமலே போய்விட்டது.

அதனால் பாதகமேதும் ஏற்படவில்லை. மாறாக, பயனுள்ள படிப்பறிவே அவரைப் பற்றியுமிருந்தது.

உருப்போட்டுப் படிக்கும் பலபேர் உருப்படாமல் போன போதும் ஒருமுறை பாடங்கேட்டுவிட்டே ஒப்பரிய நினைவாற்றலால் உருப்படியாய்த் தேறினார் அண்ணா.

ஆனாலும்,

வயது கூடக் கூட, வறுமையான குடும்ப நிலைத் தெரியத் தெரிய, வாட்டம் அவரைச் சூழச்சூழ, படிப்பில் நாட்டம் குறையக் குறைய பள்ளியிறுதி வகுப்பில் இரண்டுமுறை தோற்றார், மூன்றும் முறையே தேர்வில் வென்றார்.

மேலும் படிப்பைத் தொடரவிரும்பினார். பெற்றவர்களுக்கும் விருப்பம் அதுவாகத்தானிருந்தது.

விருப்பம் மட்டுமே விளைவாகிடுமா?

வளமில்லை; வாய்ப்புமில்லை.

வாழ்க்கைப் பிரச்சனையே பெரிதாயிருந்த குடும்பம்.

வேலை அண்ணாவைத் தேட வைத்தது.

எழுத்தர் பணி கிடைத்தது; கிடைத்ததை மேற்கொண்டார்.

அந்த நிலையில், 'பிற்பட்ட வகுப்பினர்க்குச் சலுகை' என்ற அரசாங்கத்தின் ஒரு புது அறிவிப்பு வந்தது. அண்ணாவுக்கும் அது பூரிப்பைத் தந்தது.

அது தனக்காகவே அறிவிக்கப்பட்ட ஒரு சலுகைபோல் மகிழ்ந்துபோன அண்ணா சென்னைப் பட்டினத்தைச் சேர்ந்தார்.

'கல்வியே கரைகாண முடியாத பெருஞ் செல்வம்' என பெருமிதத்துடன் நெடிதுயர்ந்து நின்ற அந்தப் பட்டணத்தின் பச்சையப்பன் கல்லூரி பசுமையான ஒரு வருங்கால வரலாற்றுக்குரிய மாணவனைத் தன்னுள் சேர்த்துக் கொண்டது.

★ ★

அண்ணா படித்தார்.

கல்லூரிப் பாடங்களை மட்டுமல்ல, கணக்கற்ற பலப்பல பாடங்களைக் கால நேரங் கருதாது படித்தார்.

ஓய்வின்றிப் படித்தார்.

கிடைத்த நூல்களை மட்டுமல்ல, கிடைத்தற்கரிய பலப்பல நூல்களையும் தேடித் தேடி படித்தார்.

பி. ஏ ஆனர்சு பட்டப் படிப்புக்கு அவர் விரும்பி எடுத்துக் கொண்ட பாடங்கள் அரசியல், வரலாறு, பொருளியல் ஆகியனவே. ஆனால் அவர் படித்துக் கொண்ட பாடங்களோ அறிவியல், சட்டவியல், சமூகவியல், என பலப் பலவாகும்

நூல்கள்—அவையே அவருக்குத் தோன்ருத் துணை! அற்புத நண்பன்.

ஆகவே, அப்படிப்பட்ட நூல்களைத் தேடிக் கொணர்ந்து துருவி துருவிப் படித்தார்.

பின்னுளில், அவரது பாராட்டுப் பெற்ற ஆங்கில அறிவுக்கும் பக்குவம் வாய்ந்த தமிழ் வளத்திற்கும் அந்நாளில் அவர் படித்த அளவற்ற நூல்களே காரணமாகும்.

அவரது அந்தப் படிப்புத்தான் அவரது அரிய சிந்தனைகளின் தூண்டுகோலாய் இருந்தது.

அந்தச் சிந்தனைகளே இந்த நாட்டின் மறுமலர்ச்சிக்கு விடிவெள்ளியாய்த் திகழ்ந்தன—நன்மைகளாய் முகிழ்த்தன.

துடிக்குந் தமிழில் அடுக்குமொழிப் பேச்சு;

கொஞ்சும் ஆங்கிலத்தில் கோர்வையான சொல்வீச்சு.

புதிய எண்ணங்களை மலர்த்தவும், சோர்வகற்றவுமாய்க் கிளர்ந்த சொல்லடுக்குகள் அண்ணுவின் பேச்சு மாளிகைக்கு கம்பீரத்தைக் கூட்டின.

—இது அண்ணுவுக்கு ஆரம்பகாலத்திலேயே கைகூடிவிட்ட கலை!

பல சொற்போர்களில் அண்ணு பங்கேற்கத் தொடங்கினுர்.

பலரது பாராட்டுதலுக்கும் பலரது முணு முணுப்புகளுக்கும் ஆளானுர்.

பெருமனங்களுக்கிடையே சிறுமனங்கள் எந்தக் காலத்தில் இல்லாமல் போயின அந்தக் காலத்தில் மட்டும் இல்லாமல் போக?

தென்றலையும் புயலையும் தாங்கிக் கொள்ளும் மாமலைபோல் புகழ்தலையும் இகழ்தலையும் ஒன்ருகக் கொள்ளும் பக்குவத்திற்கு அண்ணு அப்போதே அணியமாகத் தொடங்கினுர்.

கல்லூரிப் பேரவையில் கச்சேரிபோல் அவரது சொல்மாரி பொழிந்தது; தொடர்ந்தது.

அவற்றைத் தொடர்ந்து கற்ருேர்கள் கலந்துகொண்டு உரையாற்றிய ஒய். எம். சி. ஏ கட்டிடத்திலும் அது நிகழ்ந்தது புகழ் நிறைத்தது.

'யார் இந்த இளைஞர்?' என்று படித்தோரிடையே — பல

ரிடையே—கிளர்ந்த கேள்விக்குறி 'இவர்தான் அண்ணுதுரை!' —என்று உணர்ச்சிக் குறியாய் நிமிர்ந்தது.

படர்ந்து படர்ந்து, உயர உயர வளர்ந்தாலும் ஆலமரம் தன் விழுதுகளை புறப்பட்ட இடத்தை நோக்கியே இறக்கிக் கொண்டிருப்பதுபோல் எத்துணைப் புகழுக்கு ஆளானபோதும் தன் எண்ணங்களை அடிமட்டத்து மக்களை நோக்கியே செலுத்திக் கொண்டிருந்த அண்ணுவின் வாழ்க்கை ஆதி நாளிலேயே புதுமைத் தணலை விசிறி விட்டதாகும்.

விசிறி வாழைபோல் வெறும் காட்சிக்குரிய மரமாயில்லாமல் குலை தள்ளும் வாழைபோல் பயன்மிகுந்த வாழ்க்கையே அண்ணுவின் வாழ்க்கையாகும்.

வானவில்லின் காட்சி
வளர்நிலாவின் மாட்சி
எரிமலையின் குமுறல்
இடியின் முழக்கம்
அருவியின் நீரோட்டம்

ஆழ்கடலின் அமைதி — அத்தனையும் அண்ணுவின் பேச்சில் அடைக்கலமாகியிருந்ததென்ருல்,

அத்தரின் மணம்
பன்னீரின் குளுமை
மிளகின் உறைப்பு
எலுமிச்சையின் சிறப்பு
தேக்கின் திண்மை

தேனின் தன்மை—இத்தனையும் அவரது எழுத்திலே குழைந்து சிறந்திருந்தன.

அந்த இளமைக் காலத்திலேயே...

ஒயிலாட்டம் நடத்திய அவரது அற்புதப் பேச்சும்,
மயிலாட்டம் நடத்திய அவரது அழகிய எழுத்தும்,

இரசித்தவர்க்கெல்லாம் கிறக்கத்தை உண்டாக்கி அறிவுச் சுனையில் அமிழ்த்தின.

படிப்பிலே அவர் செலுத்திய அக்கறை பல்கலைக்கழக இடைநிலை வகுப்பின் இறுதியாண்டுத் தேர்வில் முதல் வகுப்பு மாணவனுக்கி பெருமையினைத் தந்தது.

—இப்படிப் பல பெருமைகளுக்கும் அண்ணுவின் அந்த வசந்த காலப் பருவமே சுருதி கூட்டத் தொடங்கி விட்டது.

★ ★

கால்பலம் கற்கண்டு, அரைப்பலம் பிஸ்தா, முக்கால் பலம் பாதாம், குங்குமப்பூ குழையக் காய்ச்சிய பசும்பால் ஒரு குவளை அல்லது பழரசம்—இது 'காயமே பொய்யடா' என்று கதைத்து ஊருக்கு உபதேசித்த உண்ணாவிரதிகளின் ஒரு வேளைச் சிற்றுண்டி! கண்டார் அண்ணா. காய்ந்துப்போன கரங்களுக்குரியவர்கள் காலமெலாம் ஏய்க்கப்பட்டு வரும் அவலம் மாற—மாற்ற—வழி காண முனைந்தார்.

வேதாந்த விசாரங்களை விளம்புவதாய்ச் சொல்லியோர் வெற்றோலங்களை சாக்காட்டுக் குருவிகளின் சத்தங்களுக்கும் இழிந்ததாக எழுப்பிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கேட்டு மரமாக மரத்துப்போய்க் கிடந்த மக்களை தன் சங்கீதப் பேச்சால் தலையாட்டித் தாளமிட வைத்த அண்ணாவுக்கு......

ராஜயோகம் சர்ம யோகம் பக்தி யோகம் ஞான யோகம் என்று யோகங்களைச் சொல்லி போகங்களில் பொழுது போக்கிக் கொண்டிருந்தவர்களின் சுய உருவத்தைப் படம் பிடித்துக் காட்டி; வாழ வேண்டிய வாழ்க்கையினை வரட்டுச் சித்தாந் தங்களின் தாக்குதலுக்கு உட்படுத்திக் கொள்ளாமலும், விரக்திப் பள்ளத்தாக்கில் வீழ்ந்துபட்டு தாழ்ந்து பேர்காமலி ருக்கவும் நெறி முறைகளை எழுச்சி முரசமாக்கி மக்களை அதில் இலயிக்கவிட்ட அண்ணாவுக்கு...

பட்டப்படிப்புக்கான பல்கலைக் கழகப் பயணத்தின் போதே வாழ்க்கைத் துணைவியாக திருமதி இராணி அம்மை யார் மணமுடித்து வைக்கப்பட்டார்.

அண்ணாவின் இல்லற வாழ்க்கை நல்லற வாழ்க்கையாகத் தொடர்ந்தது.

"கல்வி எதற்காகக் கற்கிறோம்? பகுத்தறிவு பெற; புதிய பொருளைக் காண கல்வி கற்கிறோம். நாட்டிலே நல்லறிவைப் பரப்பக் கூடிய கல்வி வேண்டும்" என்ற அண்ணாவின் சிந்தனை மொழிக்கு ஏற்பவே அவரது கல்வியும் அமைந்தது.

வேலை தேடுவதற்கென்று படிக்காமல் விவேகத்தை வளர்த்துக் கொள்ளவே படித்த அண்ணா தன் படிப்புக்கு—பட்டப் படிப்புக்கு— ஒரு முற்றுப் புள்ளி வைத்தார். 1934 ஆம் ஆண்டில் அண்ணாவின் அறிவுக்கு எம். ஏ. பட்டம் ஒரு அலங் கார முத்திரையிட்டது. அந்த அலங்காரத்துடன் பல்கலைக் கழகத்தின் தலைவாயிலிருந்து வெளிப்பட்ட அண்ணா பொது வாழ்வின் நுழைவாயிலில் ஒரு அரிமாவைப்போல் அடி யெடுத்து வைத்தார்.

★ ★

பிச்சாண்டி—பேயாண்டி—காளி—கருமாரி—திரிசூலி—மோகினி—முனீசுவரன்—பன்றிக்கடவுள்—நந்தித் தெய்வம்—பிரம்மா—விஷ்ணு—சிவன்—இலட்சுமி—சரசுவதி—பார்வதி ... நூற்றுக்கணக்கில் சாமிகள்—மனைவிகள்—வைப்பாட்டிகள்—பெண்டு பிள்ளைகள்—சண்டை சச்சரவுகள்—அறிவுக்குக் கேடான இந்த 'ஆரிய மாயை'களை நம்பிக் கிடந்த நாட்டிலே,

இருநூற்று ஐம்பத்தேழு சாதிகள்—அவற்றுக்குள் பத்தொன்பதாயிரத்து நாற்பத்து நான்கு ஜாதிப் பிரிவுகள்—இது ஆயிரத்தொளாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்றில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரக் கணக்கு. சமுதாயக் கேடான இந்த குழப்பக் குட்டையிலே மட்டையாக ஊறிக் கிடந்த நாட்டிலே,

அண்ணாவின் புதிய சிந்தனைகளின் சிறகு வெகுவாய் விரிந்தது—வேகமாய் விரிந்தது.

மூளையைப் பறிகொடுத்து மூடத்தன புதரில் முடமாகத் தடுமாறிக் கொண்டிருந்த சமுதாய நலன்களைக் காப்பதற்கான திட்டங்களில் அவரது எண்ணங்கள் வட்டமிட்டன.

உரிமைகள் என்பதென்ன?

'பாரதம்' காலத்து பாரிஜாத மலரா? கிடைக்காதென்பதற்கு!

சமத்துவம் என்பதென்ன ?

கதைகளில் மட்டுமே படித்த கற்பகத்தருவா?—காண முடியாதென்பதற்கு!

அல்ல.

அவை,

புதுமை எண்ணங்களின் பூப்பிலே...

போராட்டங்களின் சுழற்சியிலே...

வியர்வைத் துளிகளின் பெருக்கத்திலே...

சிவந்த கரங்களின் சேர்க்கையிலே...

—கிடைக்கக் கூடியதும் காணக்கூடியதுமான சிறப்புக் காட்சிகளே!

—இவை விடிய விடிய அண்ணா நடத்திய நடைசோராத எண்ணப் பயணங்களில் கிடைத்திட்ட கீர்த்திமிகும் முடிவுகளாயின.

தொடாத வானத்தின் தோற்றத்தை தொடுவானமென்று கூறிக் கொண்டிருப்பது போல், செறிவான உருவங் காட்டி

செல்லரிக்கச் செய்த சமூகக் கேடுகளை மேம்பாடுகளென்று நம்பிக் கிடந்தோருக்காக—நியாயங்கள் அல்லாதனவற்றை நீதியின் நிறைவுகள் என்று நெகிழ்ந்து போய்க் கிடந்தவர்க்காக உழைக்க உறுதி யெடுத்த அண்ணு நீதிக்கட்சியின் நடவடிக்கைகளில் பங்கேற்ருர்.

நிறத்தால் வேறுபடாத இரத்தத்திற்குரியவர்களாயிருந்தும் தரத்தால் தாழ்ந்தோர் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர் பார்ப்பனரல்லாத மக்கள்.

அந்தக் கொடுமையினைக் களைய 1916 ஆம் ஆண்டில் உதயமான ஒரு அமைப்பே தென்னிந்திய நலவுரிமைச் சங்கம். படுசுத்தமாகத் துடைக்கப்பட்டிருந்த திராவிடர் தம் புகழை—நலனைக் காக்க வெள்ளுடை வேந்தர் தியாகராயர் அவர்களின் தலைமையில் இயங்கியது அந்தக் கட்சி. அந்தக் கட்சியின் நோக்கங்களை தெளிவுபடுத்துவதற்காக வெளியிடப் பெற்ற ஏட்டின் பெயர் ஜஸ்டிஸ். அந்த ஏட்டின் பெயராலேயே நாளடைவில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்—நீதிக்கட்சி என்று அழைக்கப் பெற்றது.

ஏராளமான சொத்துக்களும் ஏவல் செய்ய ஆட்களுமாக ஒரு சிற்றரசைப் போல் வாழக் கூடிய வசதியிருந்தும் பொதுச் சேவையே புனிதச் சேவை என்று புறப்பட்டவர் தியாகராயர். அவரைத் தொடர்ந்து டாக்டர். சி. நடேச முதலியார், பனகல் அரசர், பி. டி. இராசன், ஏ. இராமசாமி முதலியார், உமாகேசுவரம் பிள்ளை, தஞ்சை வாண்டையார் போன்ற பலரும் ஈடுபட்டனர். ஈர்க்கப்பட்டார் அண்ணு.

துடிப்பும் தூய்மையும் துரைத்தனம் நடத்திக் கொண்டிருந்த அண்ணுவை அப்போதே கவர்ந்து விட்டார் பெரியார். பெரியாரது சிக்கலற்ற சிந்தனைகள்—தன்னலமற்ற உணர்வுகள் ...புரட்சிகரமான போக்குகள் அண்ணுவை ஆக்ரமித்துக் கொண்டன என்ருல் அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது?

ஆழ்கடலைக் கிழித்துச் செல்லும் நாவாய்போல் அரசியலில் அண்ணு எனும் பூப்பல்லக்கின் பவனி தொடர்ந்தது.

அந்த பவனியிஞல்—அவரது பிரச்சார மேன்மையிஞல்—பெருமையுற்ற நீதிக்கட்சி தனது வேட்பாளராக சென்னை மாநகராட்சித் தேர்தலுக்கு பெத்துநாய்க்கன் பேட்டையில் நிறுத்தியது.

அண்ணு போட்டியிட்ட முதல் தேர்தல் அதுவே. 1935 ஆம் ஆண்டில் நடைபெற்ற அந்தத் தேர்தலில் அவருக்கு எதிரான பிரசாரத்தை முன்னின்று நடத்தியோருள் குறிப்பிடத் தக்கோர் சத்யமூர்த்தி, திரு. வி. க. வி.சி. கோபாலரத்னம், சீனிவாசராவ் போன்ருேரெனில் அது எத்தகைய கடுமையான போட்டியாயிருந்திருக்குமென்பதை கணக்கிட்டுக் கொள் ளலாம்.

காங்கிரசின் மிகப்பெரும் பிரச்சார பீரங்கிகளின் சத்தம் அண்ணுவின் அடக்கமான 'கச்சேரி'யை ஒரே அழுத்தாய் அழுத்திவிட்டது. அண்ணு தோல்வியைத் தழுவினுர்.

தொண்டுசெய்ய வந்தவருக்குத் தோல்வியொரு தடையா? —தொடர்ந்தார் அண்ணு.

மரங்களும், மடுக்களும், மதில்களும், மலைகளும் தடுத் தாலும் காற்று தன் கடமையிலிருந்து விலகிட முடியுமா?

கத்தலும், கதறலும், கர்ச்சித்தலும் கரைதலும் கதிரவன் வரவுக்குத் தடையாக முடியுமா?

முடியாதே!

அது முடியாத போது அண்ணுவும் துவளுதலுற்று தொண்டு செய்வது தொடருந்தானே?

★ ★

தமிழின உணர்வுக்கு வித்து பெரியார் என்ருல் அதன்வேர் அண்ணுவே!

தமிழின நலத்திற்கு மருந்து பெரியார் என்ருல் அதன் உயிர்ச்சத்து அண்ணுவே!

தமிழின காப்புக்கு எச்சரிக்கையூட்டியவர் பெரியார் என்ருல் அதன் காவலராய் நின்றவர் அண்ணுவே!

தமிழினத்தில் ஊடுருவிய நம்புதலுக்கு நன்மையற்ற—நச்சுத்தன நம்பிக்கைகளை சுட்டிக்காட்டியவர் பெரியார் என் ருல் அந்த நச்சுக்கு முறிப்பானவர் அண்ணுவே!

தமிழினத்தைச் சொற்களால் கீறி சொரணையூட்டியவர் பெரியார் என்ருல் சொற்களால் நீவி விழிப்புணர்ச்சி பெறச் செய்தவர் அண்ணுவே!

அந்த அறிவுப்புனல் அண்ணுவின் அற்புத வாழ்க்கை யிலே—புகழொளியிலே புரட்சிக்கனல் பெரியாரின் பங்கும்

பண்பாடுகளும் சற்றேறக்குறைய சமவிகிதாச்சாரம் பெறுமென்பது சரித்திரத்தின் கணிப்பாகும்,

யுரேனியமும் புளுட்டோ'னியமும்கொண்டசேர்க்கையிலே தான் அணுசக்தி உருவாகிறது என்பது அறிவியலின் முடிவு.

அழுத்தமும் அடக்கமும்,

அறிவும் செறிவும்,

அழகாய்ச் சேர்ந்ததன் வடிவங்கள்தான் பெரியார் அண்ணா என்பது ஒருமித்த எண்ணங்களின் ஒப்பற்ற முடிவு.

அப்புறமுமென்ன, அரியதொருசக்தி தலையெடுக்காதிருக்க முடியுமா?

எடுத்தது!

அந்தச் சக்தியே,

1926 ஆம் ஆண்டில் 'சுயமரியாதை இயக்க'மாகச் சுடர் விட்ட தீபத்தை திராவிடர் கழகமாக்கியது.

''நான் ஏற்றுக் கொண்ட ஒரே தலைவர் பெரியார்'' என்று அண்ணாவால் ஒப்புதலளிக்கப்பட்ட அவரது முதல் சந்திப்பு 1935 ல் நிகழ்ந்தது.

மலரும் மணமுமாகப் பரிணமம் பெற்ற அந்த சந்திப்புக்குப் பின்னர் விளைந்த சாதனைகள் — சமுதாய மாற்றங்கள் — அளவிடற்கரியன.

ஒன்றுமேயில்லாமல் 'ஓகோ' வென உயரப்பார்த்த இந்தியின் செருக்கழிக்க ஒன்று கூடிய தமிழினத் தலைவர்கள் போர்க் கொடி உயர்த்தியபோது அந்தப் போராட்டக் களத்தில் தளபதியாக நின்றார் அண்ணா.

1938 ஆம் ஆண்டில் தமிழர் தொடுத்த அந்தத் தன்னிகரற்ற போரில் அண்ணாவுக்குக் கிடைத்தது நான்குமாத சிறைத் தண்டனை.

தந்தை பெரியார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், நாவலர் சோமசுந்தர பாரதியார், தமிழ்க்கடல் மறைமலையடிகளார், பூவாளூர் அ. பொன்னம்பலனார், மூவலூர் மூத இராமாமிருதம்மையார், டாக்டர். தருமாம்பாள், திருவ நீலாம்பிகையம்மையார், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, தி. பொ வேதாசலம் போன்றவர்களையெல்லாம் ஒருங்கிணைத்த அந்தப் போராட்டம் 1000க்கும் மேற்பட்டவர்களை சிறைத் தண்டனைக்கு ஆளாக்கியது.

அந்த மொழிப்போரில் இராசாசி அவர்களின் அடக்குமுறை ஆட்சியினால் சிறைப்பட்டிருந்த சிங்கங்கள் இருவர் தாளமுத்து —நடராசன்—பிணமாயினர்.

இத்தனைக்கும் பின்னர்தான்—ஏகோபித்த தமிழ்மக்களின் கிளர்ச்சி காரணமாக—1940 ல் 'கட்டாய இந்தி' எனும் கடை மூடப்பட்டது.

தன்மான இயக்கம் கண்டு தனிவழியில் செயலாற்றிக் கொண்டிருந்த பெரியாரை நீதிக்கட்சியின் தலைமையேற்க அழைத்தனர்.

செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியார் போன்றோரின் கருத்துக்கிணங்க ஒப்புதலளித்தார் பெரியார்.

24-2-1940.

திருவாரூரிலே நீதிக்கட்சி மாநாடு.

'தென்புலம் தீமைகளிலிருந்து விடுபடவும், தேயாது நிற்கவும் ஒரே வழி பிரிவினைதான். அடிமை வாழ்வு இருக்கும் வரையில் ஆதிக்கமும் திணிப்பும் இருக்கவே செய்யும். இதற்கு மாற்றுமருந்து பிரிவினை; —'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதே அது. திராவிட இனம் நலம் பெறவும் —உயரவும்— உலகத்தோரால் மதிக்கப்படவும் அவர்களுக்குரிய நாட்டை அவர்களே ஆளவேண்டும்' என்பதை அந்த மாநாட்டிலே அண்ணா அவர்கள் தீர்மானமாக முழக்கமிட்டார்.

தெளிவுமிக்க அந்தத் தீர்மானம்,

தெம்பூட்டிய அந்தத் தீர்மானம்,

பலரைத் திக்கு முக்காடச் செய்தது.

தனது எண்ணங்களை தான் துணையாசிரியராய் இருந்த விடுதலை ஏட்டின் மூலம் கட்டுரைகளாக்கினார் அண்ணா.

அவர் படித்த படிப்பும்—நூல்களும்—சிந்தனைகளும்—அவருக்குப் பக்கபலமாய் நின்றன.

இந்நிலையில்,

நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராயிருந்த முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. அவர்களுக்கும் பெரியாருக்கும் இடையே நேர்ந்த மனவேறுபாடு கி. ஆ. பெ அவர்களை பதவிப் பொறுப்பிலிருந்து விலகச் செய்தது. அந்தப் பொறுப்புக்கு அண்ணா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் பொறுப்பேற்றுக் கொண்ட அந்தக்காலம் நீதிக்கட்சி நிலை தடுமாறிக் கொண்டிருந்த காலமாகும். வசதிமிக்கப் பலர் அந்தக்கட்சியின் முன்னணித் தலைவர்களாய் இருந்தமையால் வறிய மக்களிடம் அவர்களுக்குத் தொடர்பென்பதே அரிதாயிருந்தது.

ஒரு இயக்கம், எந்தத் தரப்புமக்களுக்காகப் போராடுவதாகக் கூறிவிட்டு அந்தத் தரப்பு மக்களை அரவணைத்துச் செல்லவில்லையோ அது அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாகவே பொருள்படும். நீதிக்கட்சி அந்த நிலையிலேதான் நின்று கொண்டிருந்தது.

அதுவுமன்றி,

"சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்தே துஞ்சிடோம்; இனி அஞ்சிடோம்" என்றும்;

"சுதந்திரம் எமது பிறப்புரிமை" என்றும் வீரமுழக்கமிட்டு ஏழை எளியோர் என்றில்லாமல் எல்லாத்தரப்பு மக்களையும் ஈர்த்துக் கொண்டிருந்தது காங்கிரசுக் கட்சி.

வீரக்கனல் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் போது விளக்கெண்ணெ விளக்கங்களால் எந்தவித விளைவும் ஏற்படாது என்பது அண்ணாவுக்கா தெரியாது? ஆகவே காங்கிரசுக் கட்சிக்கு ஈடுகொடுத்து நீதிக்கட்சியை நிலை நிறுத்த நினைவோட்டம் நடத்திய அண்ணா 1942 ஆம் ஆண்டு 'திராவிட நாடு' இதழைத் துவக்கினார்.

உள்ளூர் நிகழ்ச்சிகள்.

உலக வரலாறுகள்,

உன்னத இலக்கியங்கள்,

உயரிய கற்பனைகள்,

உரமிகு தத்துவங்கள்,

அண்ணாவின் அற்புத நடையில் எழுத்தோவியங்களாயின.

வசையாடலற்ற,

இசையாடல் மிக்க அவரது கட்டுரைகள் இளைஞர் முதியோர் என்ற வேறுபாடற்று எல்லோரது இதயங்களையும் நெருடியது; நெகிழ்வித்தது.

"மனிதன் தன்னைச் சுற்றிலும் ஆராய்ந்து சூழ்நிலையைத் தெளிந்து தெரிந்து நடந்திடத் தூண்டும் ஏடுகளை எழுதியாக

வேண்டும் தமிழில்'' என்ற அவரது எண்ணப்படியே அவரும் எழுதினுர்.

நீதிக்கட்சியின் தலைவர் பெரியாரும் பொதுச் செயலாளர் அண்ணுவும் அதை நடத்திச் செல்பவர்களாக இருப்பார்கள் என்று எதிர் பார்த்த அதன் பிரமுகர்கள், அவர்கள் அதை மக்களின் மையத்தில் வைத்து அந்த மக்களே நடத்த வேண்டுமென்பது போல் செயல்படக் கண்டு மனம் வெதும்பினர். வேறு வழியறியாதும் புலம்பினர். எப்படியும் இந்நிலை மாற்றப்பட வேண்டுமென்றும் வேளைபார்த்து நின்றனர்.

நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான அடிப்படைக் காரணமும் தன்மான இயக்கத்தின் வேர்க்கொள்கையும் நசித்து விடாமல் காக்கும் பொறுப்பை அண்ணு மேற்கொண்டார். தளராத நெஞ்சுரம் கொண்ட பெரியாரும் தனக்கு மாபெரும் எதிர்ப்பு உட்கட்சியிலேயே உருவாகி நிற்பதைக்கண்டு உளமுடைந்து நின்ருர். அண்ணு அவருக்கு ஆறுதலாய் நின்ருர்.

அடுத்து, 1944 ஆம் ஆண்டில் நடைபெற்ற சேலம் மாநாட்டில் நீதிக்கட்சி என்ற பெயரைமாற்றி 'திராவிடர் கழகம்' என்று அழைக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானம் கொண்டு வந்தார்.

அதைத் தீயென எண்ணித் துள்ளியோர் அடங்கவும் அமைதியுறவும் அண்ணு அந்த மாநாட்டில் அளித்த விளக்கங்கள் காரணங்களாயின.

அந்த மாநாட்டில் அண்ணு கொண்டு வந்த தீர்மானங்களுள் மற்ருென்று, தங்கள் பெயர்களுக்குப் பின்னுல் ஒட்டியுள்ள சாதி வால்களை நீக்கிவிட வேண்டுமென்பதும்; இன்னென்று, வெள்ளையர் நிர்வாகம் அளித்துள்ள 'கௌரவ மாஜிஸ்ட்ரேட்' 'உள்ளாட்சி மன்றத் தலைவர்' போன்ற பதவிகளைத் துறக்க வேண்டுமென்பதும், மீண்டும் பெறக் கூடாதென்பதும்; அடுத்தது தங்கள் பெயருக்கு முன்னுல் போட்டுக் கொள்ளும் ஏகாதிபத்ய வெகுமதிகளாம் 'சர்', 'இராவ்சாகிப்', 'திவான் பகதூர்' பட்டங்களை விட்டுவிட வேண்டுமென்பதும் ஆகும்.

நீதிக்கட்சியை மக்கள் சார்ந்த இயக்கமாக மாற்ற அண்ணு மேற்கொண்ட நடவடிக்கைகளின் துணிவான எதிரொலியே அந்தத் தீர்மானங்களாகும். மாநாட்டுப் பொது மேடையிலேயே வாதிக்கப்பட்டு மக்களால் வரவேற்கப்பட்டு வாகை சூடிய பெருமை அவற்றிற்கே உண்டு.

அதனால் 'பெரிய' மனிதர்கள் பலரது எதிர்ப்பை அண்ணா ஏற்கவேண்டியிருந்தது.

அதனாலென்ன?

அந்த காலக்கட்டத்தில் தான்...

நடுத்தர மக்கள் மட்டுமல்லாமல் கடைநிலையிலுள்ள மக்களும் அண்ணாவைப்பற்றி நினைக்கவாரம்பித்தனர்; தத்தம் நெஞ்சில் நிலை நிறுத்தத் தொடங்கினர்.

மொத்தத்தில் நாட்டு மக்களிடையே 'அண்ணா' என்னும் அந்த மோகன மூன்றெழுத்து ஒரு மோகத்தையே கிளறி விட்டது.

நமது நாடு — நமது இனம் — நமதுமொழி என்றொரு தாகத்தை ஏற்படுத்தி அதைத் தணிக்கும் தடயங்களைக் காட்டி ஒரு வேகத்தையே முடுக்கிவிட்டது.

விசித்ரமான நிலையில்... நிர்க்கதியாய் நின்றிருந்த சமுதாயக் களத்தில்,

விவேக மின்னல் அடித்தது;

வீர இடி இடித்தது;

விளக்கச் சாரல் அடித்தது;

விழிப்பு முளை விட்டது.

* *

அரண்மனையில் இருந்து கொண்டு அப்பத்தின் விலையுமறியாத அரசனைப்போல்...தந்தக் கோபுரத்திலிருந்து தரைமீது நின்று கொண்டிருக்கும் மக்களைப் பற்றிய முடிவுகளுக்கு வாராமல் அந்த மக்களிருந்த இடத்திலிருந்தே அவர்களைப் பற்றிய முடிவுகளை எடுத்து அவர்கள் முன்னேறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார் அண்ணா.

பெரியாரின் பேரறிவிலே முகிழ்த்த முற்போக்குப் போராட்டத்தின் முன்னணிப் படைத்தலைவராக முனைந்து நின்றவர் அண்ணா!

பெரியார்—அண்ணா!

—ஒன்றுபட்ட அவர்களின் உறவிலே ஆரியத்தின் வேர்கள் ஆட்டங் கண்டன.

—ஒன்றுபட்ட அவர்களின் உறவிலே பணத்திமிங்கிலங்கள் பதறித் துள்ளி கரையொதுங்கிப் போயின.

—ஒன்றுபட்ட அவர்களின் உறவிலே ஆதிக்கத் திமிர்கள் அந்திப்பொழுது வெளிச்சமாய் அடங்கவாரம்பித்தன.

அவர்களது உறவு உதட்டளவிலல்ல; உள்ளத்தளவில் படிந்திருந்தது.

பாலோடு நீர் சேர்ந்தது போன்றல்ல; பாலோடு பால் சேர்ந்தது போல்...

பூவோடு நார் சேர்ந்தது போன்றல்ல; மணத்தோடு மணம் சேர்ந்தது போல்...

பணத்தோடு பணம் சேர்ந்தது போன்றல்ல; இனத்தோடு இனம் சேர்ந்ததுபோல்...

பெரியார் ..அண்ணாவின் உறவு இதயபூர்வமான இணைப்பாயிருந்தது.

இயலோடு இசையோடு — இனிமையோடு — மென்மையோடு — தன்மையோடு — தொன்மையோடு அழகொளிரும் அற்புதமான வட்டத்திற்குள் சிறந்தோங்கி நிற்கும் செந்தமிழைப் போல்,

துணிவோடு — தூய்மையோடு — தொண்டோடு— பண்போடு—பணிவோடு-பாசத்தோடு பயன் கூட்டும் பரந்தவொரு வட்டத்திற்குள் பெரியார் அண்ணாவின் உறவு செழித்தது.

பெரியாரிடம் போனவர்கள் பேரற்றுப் போவார்கள் என்று பேசப்பட்டதை மாற்றி பெயர் பெற்று விளங்கியவர் அண்ணா.

ஆயிரம் பேருக்கும் நிழல்தரும் ஆலமரமானாலும் அதனடியில் ஒரு செடியும் காய்க்காது என்பது போல, ஆயிரங்கணக்கானவர்களைப் பெரியார் வழி நடத்திச் சென்றாலும் அவரது தலைமையின் கீழ் மற்றொரு தலைமை தலையெடுக்க முடியாது எனக்கூறப்பட்டதை மாற்றியது மட்டுமல்ல; பெரியாரே பெரிதும் போற்றத்தக்க தலைவராக வளர்ந்தார் அண்ணா.

பெரியாரிடம் பெயர்பெறுவதன்பது கல்லிலே நார் உரிப்பது போலாகும் என்று கருதப்பட்டது. ஆனால் அண்ணாவின் அறிவும் ஆற்றலும் பெரியாரிடத்து அவருக்குரிய மதிப்பைப் பெற்றுத் தந்தது.

இருளிலிருந்து ஒளியை நோக்கி...

பொய்மையிலிருந்து மெய்மையைக் காண...

மரண வாழ்விலிருந்து புகழ்வாழ்வைச் சேர...

வறிய மக்களை வறுமைக் கோட்டிற்கு அப்பால் வலித்துச் சென்று...

வளமாக அவர்களை வாழ்விக்கும் வலிவு அண்ணாவிடம் அடைக்கலமாகியிருந்ததை தந்தை பெரியாரால் புறக்கணிக்க முடியவில்லை என்பதை விட புரிந்து கொள்ள முடிந்தது என்பதே பொருத்தமாகும்.

அண்ணாவின் பயணம்...

அமைதியான பயணம், அறிவார்ந்த பயணம்!

நியாயத்தின் பயணம். நீதியை நாடிய பயணம்!

நேர்மையின் பிரவாகத்தை நெஞ்சத்தின் ராகமாக்கிய பயணம்!

தமிழர் துள்ளும் வெள்ளாடுகளல்லர்; பகைமையைக் கொல்லும் வேங்கைகள் என்பதை முரசடித்துப் பாருக்குப் பகிரங்கப் படுத்திய பயணம்!

கரடு முரடான பாதையிலே...

கடுமையான இருளிலே... தொடர்ந்த பயணம்!

இதயத்தில் எரிந்து கொண்டிருந்த இலட்சிய தீபமன்றி வேறு எதன் துணையுமின்றி அண்ணா அந்தப் பயணத்தை மேற்கொண்டார்.

★ ★

பொறாமையின் நெருடல்,

பொல்லாங்கின் வருடல்,

புறம்பேசித் திரிவாரின் உருவில் எந்தவொரு இயக்கத்திலும் தலையெடுக்குமென்பதற்கு தக்க எடுத்துக்காட்டுகளாய் சிலர் திராவிடர் இயக்கத்திலும் தலையெடுத்தனர்.

திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழகத்தின் முதல்

மாநாட்டில் 'கறுஞ்சட்டைப் படை' ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்பது நிறைவேறிய தீர்மானம்.

'திராவிடர் கழகத்தின் தொண்டர் படை' என்றுதனிமைப் படுத்திக் காட்டுவதே கறுப்புச் சட்டையை ஆடையாக அணிய வேண்டுமென்று நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர் மானத்தின் குறிக்கோளாகும்.

ஆனல் அதே தீர்மானம் 'எல்லோருமே கறுப்புச்சட்டை அணிய வேண்டும்' என்று பெரியாரின் கட்டளையால் உருமாறி யது.

அந்தக் கட்டளையின் வலியுறுத்தலால் கறுஞ்சட்டை அணிய வேண்டுமென்ற அடிப்படை நோக்கமே அடிபட்டுப் போகுமென்பது அண்ணுவின் வாதமானது.

—இதுவே பெரியாரின் கட்டளையில் கருத்து மாறுபாடு கொள்ளவும் காரணமானது.

—இந்தக் கருத்து மாறுபாட்டைத்தான் சில சுயநலமிகள் பெருத்தவொரு வேறு பாடாக்க முயன்றனர்—பெரியாருக்கும் அண்ணுவுக்குமிடையில் பெரும் பிளவையுண்டாக்க முனைந்தனர்.

'கறுப்புச் சட்டை அணிய அண்ணு கதி கலங்குகிருர்' என்று கண்ணுக்கு மறைவாகப் பேசவும் முற்பட்டனர்.

1946 ஆம் ஆண்டு; சென்னையில் திராவிடர் கழகத்தின் மாநாடு. இந்தி ஆதிக்கத்தின் கொடுமைகளைக் களைய தான் சார்ந்திருக்கும் காங்கிரசுக் கட்சி கண்ணிமை அசைவுப் பொழுதும் பயன்படாது என்ற முடிவோடு அதிலிருந்து விலகி வந்திருந்த ஆற்றல் மறவர் அருமை என். வி. நடராசன் அவர்கள் அந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கினுர்.

அந்த மாநாட்டில் அண்ணு தனக்கு ஓராண்டுக் காலம் ஓய்வு வேண்டுமென்று பகிங்கரமாகவே பேசினுர். அந்த ஓய்வு தனக்கும் தந்தைக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் பிணக்கைப் போக்கும் என்று அவர் உளமார நம்பினுர்.

பெரியாருக்கும் அண்ணுவுக்குமான அந்த கருத்து முரண் பாட்டிலேயே காலப் பேரேட்டில் சில கிழமைகள் கிழிந்தன.

அண்ணு — பெரியார் — அன்பால் பிணைக்கப்பட்டிருந்த அவர்களது உறவுப் பாலத்திற்கு உண்மையில் அதுவொரு கருமைக் காலமேயாகும்.

பெரியாரைப் போலவே அண்ணாவும் பிடிவாதக்காரரோ என்று இயக்கத் தோழர்களிடம் ஒரு கருத்து தலையெடுக்கத் தொடங்கிய போது, அது உண்மையல்ல என்பதை அண்ணாவின் அடுத்த நடவடிக்கையே அறிவித்து விட்டது.

திராவிடர் கழகத்தின் தலைமைச் செயற்குழு சென்னையில் கூடியது. பெரியாரின் கட்டளைப்படி கழகத்தவர் அனைவருமே கறுஞ்சட்டை அணிந்து அங்கே திரண்டிருந்தனர்.

எவரும் எதிர்பாரா விதமாக அண்ணா அங்கே வந்தார். தனக்கென்று கறுப்புச் சட்டை தைத்துக் கொள்ளாத அவர் தனக்குக் கொஞ்சமும் பொருந்தாத நாவலரின் பெரிய அளவு சட்டையை வாங்கிப் போட்டுக் கொண்டு வந்திருந்தார்.

கருத்து மாறுபாடு கொள்வது உரிமை; தலைவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிதலென்பதோ கடமை. அண்ணாவின் செயல் இதை அழகுற உணர்த்தியது.

அண்ணாவின் வரவு அங்கிருந்த எல்லோருக்கும்—பெரியார் உட்பட—பெரும் மகிழ்வை யூட்டியது.

அன்று மாலை நடந்த கூட்டத்தில் நீண்ட நாட்களுக்குப் பிறகு அண்ணாவும் பெரியாரும் ஒன்றாக அமர்ந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

'உடைந்த மண்பாண்டங்கள்'—'இனி இவர்கள் ஒன்று சேர மட்டார்கள்' என்று மனதுக்குள்ளாகவே மகிழ்ந்து கொண்டிருந்தவர்கள் மருகிட அண்ணாவும் பெரியாரும் சேர்ந்தனர்.

—திராவிடர் இயக்கமெனும்...

—ஒரு மரத்துக் கிளைகளாக உயர்ந்து நின்றனர்;

—ஒரு மலையின் அருவிகளாகப் பெருக்கெடுத்தனர்;

—ஒரு விளக்கின் திரிகளாக ஒளி பரப்பினர்;

—ஒரு முழவின் நாதங்களாக ஒலி முழக்கினர்.

ஆனால், இது நிலைத்ததா ?

நிலைத்து விட்டால் ஆடிக்காற்றில் ஆட்டங்கண்ட நெடுமரம் போல் ஆதிக்க உணர்வுகள் சாய்ந்து விடாதா?

விழித்துக் கொண்டிருந்த அதன் விழிகள் மேலும் விரிந்

தன. அதன் வீரிய பார்வையின் அனல் அண்ணு பெரியாரின் தங்கப் பாளம் போன்ற உறவைத் தாக்கின.

அடுத்தடுத்து நடந்த நிகழ்ச்சிகளால் அந்த உறவு மெல்ல மெல்ல உருகத் தொடங்கியது.

கசப்பான காட்சிகள்—ஆனுல், காலம் அவற்றைக் காணவே வேண்டியிருந்தது.

★ ★

1947 ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டிற்கு அண்ணு போகவில்லை. அது அவரை ஆவலுடன் எதிர் பார்த்திருந்த இயக்கத் தோழர்களிடம் துயரத்தை தூவி விட்டது என்பதையும் மறுப்பதற்கில்லை.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ஆம் நாள்.

இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்ற அந்த நாளை பெரியார் 'துக்க நாள்' என்று அறிவித்தார்.

'ஆகஸ்டு 15 ஆம் நாள்—வெள்ளையர் ஏகாதிபத்யத்திலிருந்து விடுபட்ட நாம் வடநாட்டுக் கொள்ளையர் ஆதிக்கத்திற்கு நாம் என்றென்றும் அடிமைகளாக பட்டயம் எழுதிக் கொடுத்துவிட்ட நாள்; எனவே இது துக்க நாளே' என்ருர் பெரியார்.

"இல்லை, அது துக்க நாள் அல்ல" என்ருர் அண்ணு.

'அறுபதாண்டுகால பாரம்பர்யமுடைய இயக்கமாம் காங்கிரசின் போராட்டத்திற்காகப் புறமுதுகு காட்டி வெள்ளை ஏகாதிபத்யம் சுதந்திரம் வழங்கிடவில்லை- உலக நாடுகளின் முன்னே உரிய மதிப்போடு இனி முகங்காட்டி நிற்க வேண்டுமானுல் தனது காலனியாதிக்கப் போக்கை கைவிட்டேயாக வேண்டும் என்ற முடிவெடுத்துத் தான் சுதந்திரம் வழங்கப்பட்டது. எது எப்படியாயினும் ஒரு முனையில் விலங்கு உடைபட்டது என்பதை நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

—அது மட்டுமல்ல; ஆங்கில ஆதிக்கத்தின் அடிவருடிகள் என்று நம்மைப் பழித்து நிற்போர்க்கு பெரியாரின் முடிவு பெரும் வலிவை யூட்டிவிடும். அதற்கு நாம் அணுவளவும் இடந்தரலாகாது. ஆகவே, ஆகஸ்டு 15 ஆம் நாள் வரவேற்கப்பட வேண்டிய உரிமைத் திருநாளே' என்று வாதிட்டார் அண்ணு.

'அதுதான் சரி' என்றனர் பலர்.

'தான் மெத்தப் படித்தவர் என்பதை அண்ணா அழகுற உணர்த்தி விட்டார்' என்றனர் சிலர்.

'அண்ணாத் துரையின் போக்கு பாராட்டத் தகுந்தது' என்று காங்கிரசுக்காரர்களாலும் பாராட்டப்பட்டார் அண்ணா.

பெரியாரின் கண்ணோட்டத்தில் அண்ணா ஐயத்திற்குரிய வரானார். அடுத்தவர்களால் போற்றப்படுவதில் அப்படியொரு சங்கடமும் விளைவது உண்டு. விளைந்தது, அண்ணாவுக்கு.

வைரக்கல்லிலே ஒரு கீறல்.—விழ முடியாதுதான், ஆனால் விழுந்தது!

தங்கத் தட்டிலே ஒரு சொட்டை—ஏற்படக் கூடாதுதான், ஆனால் ஏற்பட்டு விட்டது.

பளிங்குச் சிற்பத்தில் ஒரு மூளி—நேரக் கூடாததுதான், ஆனால் நேர்ந்து விட்டது.

பெரியார் அண்ணா உறவில் ஒரு சறுக்கல்—நிகழக் கூடாததுதான், ஆனால் நிகழ்ந்தது.

அப்புறமும் அவர்கள் இணைந்தே இருந்தனர்; இயக்கப் பணியினைத் தொடர்ந்தனர்.

ஓமந்தூரார் அமைச்சரவை கொண்டு வந்த இந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டி திட்டம் தீட்ட திராவிடர் கழகத்தின் அவசர மாநாடு ஈரோடில் கூடியது.

விசித்ரமான விளக்கங்களைத் தந்தவாறே வெகு சாதுரியமாய் தேசியப் போர்வையில் நுழைந்து கொண்டு வந்து கொண்டிருக்கும் ஆதிக்கச் சனியனைக் குறித்த விளக்கம் தரவும், வேண்டிய முடிவுகளை மேற்கொள்ளவும் விரைந்து கூடிய அந்த மாநாட்டிற்கு அண்ணா தலைமையேற்றார்.

"எழுபதாம் வயதில் நிற்கும் நான் இனி பெட்டிச் சாவியைப் பிள்ளையிடம் தருவதே முறை" யென்று பெருமையோடு பெரியாரும்,

"பெட்டிச் சாவியை என்னிடம் தந்தாலும் தந்தையைக் கேட்டுக் கொண்டுதான் ஒவ்வொரு முறையும் இந்தப் பிள்ளை அந்தப் பெட்டியைத் திறப்பான்" என்று தன்னடக்கத்தோடு அண்ணாவும்,

"ஆகா...இதுவல்லவா குதூகலத்திற்குரிய குணம்" என்று அவர்களின் பேச்சை வரவேற்றுப் பொது மக்களும் நின்ற காட்சி அந்த மாநாட்டின் நிகழ்ச்சியேயாகும்.

எடுப்பார் கைப்பிள்ளையோ இந்த நாடு?—

இனியது நடவாது என்றே நீ பாடு!

கெடுப்பார் முகத்திரை கிழித்திடுவோம்!

கேடுகள் நீங்கிடப் போராடுவோம்!—இது போன்று அண்ணாவும் இயக்க முன்னணியினரும் முழக்கமிட்டு இந்தித் திணிப்பை இல்லாமலாக்கிட பிரச்சாரம் மேற்கொண்டு அணி திரட்டினர்.

ஆங்கில துரைத்தனம் அந்நியம் என்று அகற்றினோமென்றால் அந்த இடத்திலே வந்து இந்தி துரைத்தனம் அமர்ந்திட அல்ல. எங்கள் அன்னைமொழி அந்த அரியாசனத்தில் அமர்ந்திடவே! இதற்குத் தடையென்றால் அந்தத் தளையொடிக்கும் பணிக்கு இந்நாட்டுக் காளையர் எப்போதும் தயார்! என்று ஒருமித்த குரலில் முழங்கினர்.

ஆதிக்க வில்லின் அம்பாக இருந்த ஓமந்தூர் ராமசாமியாரின் ஆட்சி அண்ணாவையும் மற்ற முன்னணித் தோழர்களையும் சிறையிலிட்டது.

இளைஞர்கள்—மாணவர்கள் என்று மட்டுமல்ல; தாய்மார்கள் மீதும் தடியடிப் பிரயோகம் நடத்தியது. இந்திக் கெதிராக மறியல் செய்தவர்களை காவல்துறை வண்டிகளில் ஏற்றி நள்ளிரவில் காட்டுப்பகுதிகளில் கொண்டுபோய் விட்டுத் திரும்பியது.

இயக்கத்தைச் சார்ந்த தனலட்சுமி என்ற எட்டுமாத கர்ப்பிணித்தாய்க்கு காட்டாட்சித் தர்பாரின் யோக்கால் கருச்சிதைவே ஏற்பட்டது.

தாய்மொழியைக் காக்க மண்ணின் மைந்தர்களால் மனமுவந்து மேற்கொள்ளப்பட்ட அந்தப் போரில் பலரின் மண்டையுடைந்தது; கைகால்கள் முறிந்தன; கண்கள் பறிபோயின.

அண்ணாவின் இளகிய மனத்தில் இத்தனையும் ஒரு பெரும் நெகிழ்ச்சியை உருவாக்கின. என்றாலும் ஒரு இலட்சியத்தின் நிறைவுக்காக அத்தனையும் ஏற்கப்பட வேண்டியனவே என்பதில் அவர் உறுதியாகவே நின்றார்.

சாரமிக்கத் தமிழோடு மோதிப்பார்க்க மோகங் கொண்டு வந்த இந்தி வந்தசுவடு தெரியாமல் ஓரமாக ஒதுங்கியோடியது.

புயலுக்குப் பின் அமைதி.

போராட்டத்திற்குப்பின் சிறிது நிம்மதி.

போர்க்கள மறவர்கள் தங்களை ஆசுவாசப் படுத்திக் கொண்டிருந்த அந்த இடைக்காலத்தில் எவரும் எதிர்பாராததொரு சந்திப்பு நேர்ந்தது.

அரசியல் நிபுணரென்றும், சாணக்கியர் என்றும் அழைக்கப்பட சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் — பெரியார் அந்தச் சந்திப்பிற்குரிய தலைவர்கள்!

"இருவேறு துருவங்களாய் நின்றவர்களின் சந்திப்பா?" —என எல்லோரது புருவங்களும் வியப்பால் மேலேறி நின்றன.

அந்தச் சந்திப்பிற்கான காரணத்தைக் கழகத்தவர் கேட்ட போது 'அது தனிப்பட்ட பிரச்னை' என்றார் பெரியார்.

பொதுவாழ்வில் வழிகாட்டும் தங்கள் ஒரே தலைவரென்று எண்ணப்பட்டவர்க்கு தனிவாழ்வுப் பிரச்சினையா?— என்ற கேள்வி இயக்கத்தவர்களின் இதயத்தைத் துளைத்தது; துடிக்கச் செய்தது.

'தனக்கொரு துணை தேவை. தன் பொதுவாழ்வு எந்தவொரு குந்தகமும் இல்லாமல் மேலும் செம்மையாய் அமைய அந்தத் துணை முக்யமானவொருதேவை. ஆகவே, என்னுடன் இருந்துவரும் மணியம்மையை மணம் செய்து கொள்ளப்போகிறேன்' என்றொரு முடிவை அறிவித்தார் பெரியார்.

மூளை சிதிலமடையாதவர்களை அந்த முடிவு அதிர்ச்சிக்கு ஆட்படுத்தியது.

அண்ணா அயர்ந்து போனார்.

ஆண்டாண்டுக் காலமாய் அப்பாவி மக்களிடம் அறியாமையை விதைத்து, அந்த அறியாமையை அணுக்கள் தோறும் பயன்படுத்தி, அல்லும் பகலும் அனைத்துச் சுகபோகங்களையும் அமோகமாய் அனுபவித்துவரும் கூட்டத்தின் ஒட்டுமொத்த எதிர்ப்புகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து ஆடாமல் அசையாமல் நின்ற அண்ணாவே ஆடிப்போனார் — பெரியார் தம் சேதி கேட்டு.

எந்த வெடிமருந்தைப் பயன்படுத்தி ஏகாதிபத்ய எத்தர் தம் இருண்ட கோட்டையைத் தகர்க்கலாமென்றிருந்தார்களோ அந்த வெடிமருந்து, பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே வெடித்து வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தியது போல இயக்கத் தோழர்கள் பலரும் பதறிப் போனார்கள்— பெரியாரின் முடிவு கேட்டு.

'இதுதான் விதியென்று' வேதாந்தம் பேசலாம்,

'காலத்தின் கோல'மென்று கை பிசைந்து நிற்கலாம்,

'நடப்பது நடக்கட்டு'மென்று நம்பிக் கிடக்கலாம்.—
ஆனால் இது எவருக்குரிய குணம்?

எதிலும் பிடிப்பற்றவர்களுக்குரியதாயிற்றே! இலட்சிய வாதிகளால் இருக்க முடியுமா அப்படி?

கழகத்தின் முன்னோடிகள் வரட்டு வேதாந்திகளல்லர்; தமக்கு முன்னுள்ள பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போக்கினரு மல்லர். திராவிடர் கழகத்தவர் என்றாலே தெளிவுடையோர் குழுமம் என்பதல்லவா முடிவாயிருந்தது? எனவே, இனியும் பொறுமிக்கொண்டிருப்பதில்பொருளேதுமில்லை என்ற கருத்தால் ஒன்றுபட்ட அவர்கள் அண்ணாவிடம் வந்து நின்றனர்.

கழக வளர்ச்சிக்குப் பெரியாரின் திருமணத்திட்டம், கோபுரத்தின் அழகுக்கு குந்தகம் விளைந்ததுபோல்; கொடிமரத்தின் கம்பீரத்திற்கு பழுதொன்று நேர்ந்ததுபோல் ஒரு தடைக்கல்லாக மாறிவிட்டதே என்று மனங் கலங்கிக் கொண்டிருந்த அண்ணா அவாகள் திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்களையும் எஸ். வி. லிங்கம் அவர்களையும் மாநிலம் முழுவதும் கழகத் தோழர்களின் கருத்தறிய பயணம் மேற்கொள்ளச் செய்தார்.

அண்ணா ஒரு அற்புதமான சனநாயகவாதியல்லவா'

அவருக்கென்று ஒரு முடிவிருந்தாலும் அந்த முடிவோடு எத்துணைப்பேரின் முடிவுகள் ஒத்துவருமென்று பார்க்கவும்; அந்தப் பெரும்பான்மையினரோடு ஒத்துப்போகவும் கூடிய உயரிய நெறியாளரல்லவா!

தனக்கென்று ஒரு தத்துவச் சுவரை எழுப்பிக் கொண்டு அதற்குள்ளாகவே அடைபட்டிருந்து அடங்கியொடுங்கிப் போகாத ஆற்றலாளரல்லவா!

ஆகவே, அவரது எந்த முடிவும் செயலும் குறைப் பிரசவங்களாய் குன்றியிருந்ததில்லை.

அண்ணா ஒரு சோதிடரல்ல, அவருக்கு அதில் நம்பிக்கையும் கிடையாது. ஆனால் அவரது மதிநுட்பம், வருங்காலக் கணக்கை வகையாகவே போட்டுக் காட்டும்—நாட்டுத் தொடர்பில்!

அவரது கணக்குகள் பொய்த்துப் போனதுமில்லை.

நிதானமான சிந்தனை—நிலையான முடிவு என்பது அவரது முறையாக இருந்தது.

அவர் பெரியார் தம் போக்குத் தொடர்பாக பயணம் மேற்கொள்ளச் செய்து சேகரித்த முடிவுகள் பெரியார் தம் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே இருந்தன.

★ ★

திராவிடர் கழகத்தின் அப்போதைய பொதுச் செயலாளர் திரு. தி. பொ. வேதாசலம் அவர்கள் அவசர செயற்குழுவைக் கூட்டினார். எல்லோரும் ஒருமனதாக எதிர்ப்புத் தெரிவித்து பெரியாரின் முடிவை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானமும் நிறைவேற்றினர்.

திருச்சியிலே அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளையிலே சென்னையிலே பெரியாரின் திருமணம் நிறைவேறிய சேதி வந்து சேர்ந்தது. மின்னலாக—மின்னலைத் தொடர்ந்த இடியாக —இடியின் விளைவான சேதாரமாக அந்தச் சேதி வந்து சேர்ந்தது. வெந்த புண்ணிலே வேலாகப் பாய்ந்தது.

வரக்கூடாத எண்ணம் வரக்கூடாத ஒருவருக்கு வந்துவிட்டது. நேரக்கூடாத நிலை நேரக்கூடாத ஒரு இயக்கத்திற்கு நேர்ந்துவிட்டது.

இனி, வாய்ப் பேச்சுக்கும் வழியில்லை.

வேறு வழியென்ன? வருங்கால திட்டமென்ன?

நிறையச் சிந்தித்து—நிறையவே வாதிட்டு — நிறையவே பொறுமையை மேற்கொண்ட பின்னர் ஒரு நிறைவான முடிவுக்கு வந்து நின்றார் அண்ணா.

குடந்தை கே. கே. நீலமேகம், பெத்தாம் பாளையம் பழனிச்சாமி, தி. பொ. வேதாசலம், நாவலர் நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், கலைஞர் கருணாநிதி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கே. ஏ. மதியழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சேலம் சித்தையன், கே. வி. கே. சாமி, மதுரை முத்து, சி. பி. சிற்றரசு, தங்கப்பழம், காஞ்சி கல்யாணசுந்தரம், மா இளஞ்செழியன், எம். எஸ். இராமசாமி, டி. எம். பார்த்தசாரதி. சத்யவாணிமுத்து, எம். எஸ். மணி போன்று பல முன்னணியி

னர் அண்ணாவின் புதிய முடிவுக்கு உறுதுணையாய் — உந்து சக்தியாய்—நின்றனர்.

அவர்களின் ஒருமித்த எண்ணத்தில் உதயமானதே தென்னகத்தின் தீப ஒளியாய்த் திகழும்—திராவிட முன்னேற்றக் கழகம்.

அண்ணாவுடன் அணிவகுத்து நின்ற அறிவியக்கத்தைச் சார்ந்த பலர் பெரியாரின் ஏக உடமையாய் எண்ணிக் கொண்டிருக்கும் திராவிடர் கழகத்திலிருந்தே அவரை நீக்கிவிட்டு, திராவிடர் கழகம் நமக்குரியதாக ஆக்கப்பட வேண்டுமென்று கூறியபோது அது கூடாதென வெறுத்தும் முறையற்றதென மறுத்தும் அண்ணா 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் தி. மு. க. வைத் தோற்றுவித்தார்.

பெரியாரோடு மாறுபட்டுவிட்ட காரணத்திற்காகப் பெருந்தன்மையை விட்டுவிட அண்ணா முனைந்தாரில்லை.

நீவி விடவேண்டியதைக் கீறி விடுவதிலோ,

தாவிச் செல்லக் கூடியதை தட்டிச்செல்வதிலோ அண்ணா எப்போதும் நினைவைச் செலுத்தினாரில்லை.

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து பிறிதொரு இயக்கம் கண்டபோதும் இருந்த இடத்தைப் பழிக்காத பண்பாடு அண்ணா விடம் குடிகொண்டிருந்த மேம்பாடு.

தி. க.—தி. மு. க— இரண்டும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்ற அவரது அறிவுத்தொடர் அவரது சீரிய குணத்திற்கொரு சிங்கார முத்திரை.

காட்டிக் கொடுப்பதும் கடுஞ்சொல்லைத் தெறிப்பதுவுமே புதியதாய்த் துவங்குமொரு கட்சி வளர்ச்சிக்குரிய வழிகள் என்று கனவிலும் கருதாமல் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் இருவேறு கூறுனாலும் 'குறிக்கோள்' ஒன்றே என்பதை நிலைநாட்டுவதில் அண்ணா குறியாகவே நின்றார்? முடிவாகவே இருந்தார்.

'சந்தனச் சிலை மீது கொள்ளிக்கட்டை விழுந்தது, இனி சாம்பல் தான் மிச்ச'மென்று எண்ணுவார் போன்று, 'கழகத்தவர் பிளவு பட்டுப் போனார்கள் இனி பெருமைக் குன்றி அழிவார்கள்' என்று குதூகலித்தோர் அறிவுப் புனலாம் அண்ணாவின் முடிவு வெள்ளத்தில் மூழ்கித் திணறலாயினர்; திக்கு முக்காடினர்'

ஆட்டம் போட எண்ணி கூட்டமாய்க் கூடிக் கத்திய ஓநாய்கள் அரிமாவின் முழக்கம் கேட்டு அடங்கிய நிலையானது.

வஞ்சக வலைகள் கந்தல் கந்தலாயின.

வாய்ச்சவடால்கள் விலாசமற்றுப் போயின.

நெஞ்சத் திராணியில்லார் நினைப்புகள் பொய்த்தன.

அடடா...வோ!

கொஞ்சு தமிழாளர் அண்ணு கோபுரக் கலசமானுர்!

★ ★

அண்ணு தன் அறிவார்ந்த பேச்சாலும் ஆற்றல்மிக்க எழுத்தாலும் அயர்வற்ற தேனீ நிகர்த்த உழைப்பாலும் தி. மு. கழகத்தின் இலட்சியத்தை மக்கள் மனதிலே பதியவைக்க அரும்பாடுபட்டார்.

பட்டபாட்டிற்குப் பலனுக பட்டிதொட்டியெங்கும் பலநூறு கிளைகள் 'மளமள'வெனத் தோன்றின; தொண்டாற்றத் தொடங்கின.

'விறு விறு'வென விரைந்த அதன் வளர்ச்சியைத் தாங்கிக் கொள்ள இயலாதவர்கள்—அதனுல் தங்களது வளமான வாழ்வுக்குப் பங்கம் வருமோ என அங்கம் பதறியவர்கள் எந்தெந்த வகையில் இன்னல்களைத் தரலாமென்று எண்ணமிடத் தொடங்கினர்.

அந்த கீழான எண்ணத்தின் கேடுகெட்டத்தனத்தின் ஒரு கூறுதான் அண்ணு 1943 ஆம் ஆண்டில் எழுதிய 'ஆரிய மாயை' நூலுக்கு 1949 ஆம் ஆண்டில் தடையென்று பாய்ந்த விசித்திரம்!

அதோடு பெரியாரின் 'பொன்மொழிகள்' என்ற நூலும் 'படிக்கத் தகாதது—தடை செய்வதற்குரியது' என்றனர்.

'திராவிட நாடு' இதழில் வகுப்புவாதம் வளர்க்கு[ம்] கட்டுரைகள் எழுதினர் என்று வழக்கு மன்றில் மூவாயி[ரம்] ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு, அந்தத் தொகையை வாசகப் பெருமக்களிடமிருந்தே திரட்டிச் செலுத்தி, உயர்நீதிமன்றத்

தில் அந்த வழக்கு செல்லுபடியாகாமல் செலுத்திய தொகை திரும்பத்தரப்பட்டு, அந்தத் தொகையை திரட்டிய மக்களிடமே திருப்பிச் செலுத்திய அண்ணாவின் 'ஆரியமாயை' நூலுக்குத் தடையென்றதோடு; அதனை எழுதியதற்காக அறுநூறு ரூபாய் அபராதமென்றும், செலுத்தத் தவறினால் சிறைத் தண்டனை நான்கு மாதமென்றும் தீர்ப்பு வந்தபோது அண்ணா சிந்தனையாளர்களுக்குரிய முடிவை மேற்கொண்டார்— சிறைத் தண்டனையை ஏற்றார்.

'பொன்மொழிகள்' நூலுக்காகப் பெரியாருக்கும் சிறை!

தந்தையும் தனயனும் சிறையில்!

இருவருக்கும் ஒரே நாளில் தீர்ப்பு!

இருவரும் எண்ணப் பிணக்குக் கொண்டிருந்த நிலையில்...

இருவரும் பக்கத்துப் பக்கத்து அறையிலேயே அடைப்பு!

தனக்குவந்த பிஸ்கட்டுகளை பக்கத்து அறையிலிருந்த அண்ணாவுக்கு அனுப்பி வைத்தார் பெரியார். மனம் நெகிழ்ந்து போனார் அண்ணா.

மற்றபடிக்கு அங்கே இருவருக்கிடையேயும் எந்தவித மாற்றமும் நிகழவில்லை.

—சிறைச்சாலைக்கு உள்ளே இது. வெளியே?

பெரியாரின் உறுதியோடு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஊட்டியிருந்த உணர்வுகள் உளுத்துப் போய்விடவில்லை.

வீறு கொண்டெழுந்த இயக்கப் படையின் நாடு தழுவிய கிளர்ச்சியில் கிடு கிடுத்து நின்ற ஆட்சி பத்தே நாளில் பெரியாரையும், அண்ணாவையும் விடுதலை செய்துவிட்டது.

சட்டமாம் —வழக்காம்— வாதமாம்—தீர்ப்பாம்—தண்டனையாம்!

அத்தனையும் வாலறுந்த பிராணிகளாய் முடங்கிப் போயின.

'Laws Die, Books Never' . — 'சட்டங்கள் சாகும்; புத்தகங்கள் அப்படியல்ல' என்று பூரிப்போடு சொன்னானே புல்வேர் (BULWER) என்ற அறிஞன்—அது மெய்ப்பிக்கப் பட்டது.

அண்ணாவின் எழுத்துப் பணி ஒரு அற்புதமான — ஆக்க பூர்வமான —சாதனைக்குரிய கருவியாய் விளங்கியது.

திராவிட முன்னேற்றக் கழகம் துவங்குவதற்கு முன்பு மட்டுமல்ல, துவங்கிய பின்னரும் – தன் ஆயுளின் இறுதி வரை அண்ணா அந்தப் பணியைத் தொடர்ந்தார்.

விடிய விடியப் படித்ததின் விளைவாக,

விடிய விடியச் சிந்தித்ததின் பரிணாம வளர்ச்சியாக,

விடிய விடிய எழுதிய எழுத்தோவியங்களாக,

விடிய விடியப் படிக்கும் படைப்புக்களாக,

— அண்ணாவின் சிந்தனைகள் ஏடுகளில் வடிந்தன.

இத்தனைக்கும் அவர் முழுநேர எழுத்தாளராக இருக்கவில்லை.

அவரது வாழ்க்கையின் பெரும் பகுதியை அரசியல் களமே ஈர்த்துக் கொண்டிருந்தது. இருந்தும், அண்ணா ஒரு ஈடற்ற இலக்கிய வாதியாகவே திகழ்ந்தார்.

பொருளடக்கமில்லாத புத்தகங்களெல்லாம் புற்றீசல்களாய்க் கிளம்பியபோது அண்ணாவின் எழுத்தோவியங்கள் பொன் சிறகு கொண்ட பூங்குயில்களாக இலக்கிய வானில் வட்டமிட்டன.

ஒரு காலகட்டத்தில்,

எந்த எழுத்துக்கள் ஏற்கப்படவில்லையென தான் துவங்கிய 'நவயுகம்' ஏட்டை மதின்மூன்று இதழ்களோடு நிறுத்திக் கொண்டாரோ அதே எழுத்துக்களுக்குரிய அண்ணனின் எழுத்துக்கள் பின்னாளில் அமோகமாய் வரவேற்கப்பட்டு ஆலோலம் பாடின.

மூடத்தனங்களும்—முடங்களும்-முகம் போனவைகளும்—முனகல்களும் அழகு ராசாக்களாக பதிப்பகங்களின் தேரிலேறி 'பராக்கு'க் குரலோடு பவனி நடத்தியபோது அண்ணாவின் எழுத்துக்கள் முற்போக்கின் முன்னுரைகளாக முறுவல் முகங் காட்டி அச்சேறின.

எந்தவொரு உள்ளடக்கமும் இல்லாத இரண்டொரு நூல்களை எழுதிவிட்டு இலக்கிய 'ஜாம்பவான்'களாக கால்மேல் கால்போட்டு கம்பீரங்காட்டிய பழைய வார்ப்படங்களை அண்ணாவின் எழுத்துக்கள் ஊதித் தள்ளின; ஒன்றுமில்லாததாக்கின.

ஏளனம் செய்வதாய் எண்ணிக் கொண்டோர் ''என்னத்தை எழுதிவிட்டார்'' என்று சலித்துக் கொண்டு தங்கள் பொருமையை வெளியிட்டுக் கொண்டதுண்டு. —இது இன்றுமுண்டு.

ஆனால், இன்றைக்கும் என்றைக்கும் படித்துப் பயன் பெறத்தக்க பாங்குடையவை அண்ணாவின் நூல்கள்.

அவரது படைப்புகளிலே எதிர்காலச் சிந்தனையும் — தன் சமகாலச் சிந்தனையும் சரிசமமாய்க் கைகோர்த்து நின்றன.

அவரது எழுதுகோல் சமுதாய உணர்வுகளையே பிரதிபலித்துத் திட்டியது.

'இதுதான் நடை—இதைத்தான் எழுத வேண்டும்' என்று கட்டப்பட்டு நைந்துபோயிருந்த மரபுக் கயிற்றை அறுத்துக் கொண்டு தமிழின மரபைக் காத்த வலிவான எழுத்துக்கள் அண்ணாவுடையது. எனவே தான் வெற்றி அவரைத் தழுவியது.

உலக இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காட்டிக் கொள்வதற்காக அவர் ஒன்றையும் எழுதவில்லை; அவருக்கு அதற்கான நேரமுமில்லை. ஆனால் உள்நாட்டு மக்களுக்காக —தன் உடன்பிறந்த சமூகத்தோரின் மேம்பாட்டிற்காக அவர் எழுதினார் எழுதியெழுதிக் குவித்தார்.

அந்தக் குவியல்களின் பட்டியல்:

ஆரியமாயை, அறப்போர், இலட்சிய வரலாறு, பணத்தோட்டம், பார்வதி பி. ஏ., பவளபஸ்பம், மாஜிகடவுள்கள், மாடிவீடு, மேதினம், குமஸ்தாவின் பெண், குமரிக்கோட்டம், கம்பரசம், கலிங்கராணி, கற்பனைச் சித்திரம், கபோதிபுரக் காதல், காதல்ஜோதி, வர்ணாஸ்ரமம், வளம்காண வழி, வந்தது விபத்து, எமிலிஜோலா, ஏ தாழ்ந்த தமிழகமே!, உலகப் பெரியார் காந்தி, ஓர் இரவு, விடுதலைப்போர், வேலைக்காரி, வெள்ளை மாளிகையில், ராஜபரர்ட் ரங்கதுரை, ரங்கோன்ராதா, ரோமாபுரிராணிகள், புராணமதங்கள், நாம், சாது, செவ்வாழை, சந்திரோதயம், சிறுகதைகள், சொற்செல்வம், சொர்க்கவாசல், மக்கள் கரமும் மன்னன் சிரமும், தேன்துளிகள், தேவலீலைகள், தீ பரவட்டும், நிலையும் நினைப்பும், தமிழரின் மறுமலர்ச்சி, முத்துக் குவியல், தாய்மகளுக்கு கட்டிய தாலி, 1858, ஜமீன் மாளிகை, ஜமீன் இனாம் ஒழிப்பு, நல்லதம்பி, சிவாஜி கண்ட இந்து ராஜ்யம், கல் சுமந்த கசடர், வண்டிக்காரன் மகன்...

தொடரும் இந்தப் பட்டியலில் சில நூல்கள் பேச்சுக்களின்

தொகுப்புக்களாலானவை; சில நாடகங்களாக எழுதப் பெற்றவை, சில திரைப்படங்களாக உருப் பெற்றவை.

இவற்றோடு 'சௌமியன்' என்ற புனைபெயரிலும் 'பரதன்' என்ற புனைபெயரிலும் நாள், கிழமை, திங்கள் ஏடுகளில் அவரால் எழுதப் பெற்றவை ஏராளமானதாகும்.

அழகு தமிழ்போலவே அவரது பேனா முனையில் ஆங்கிலமும் கொஞ்சி விளையாடியது.

'ஹோம்லேண்ட்', 'ஹோம்ரூல்'— இவ்விரு ஆங்கிலவார இதழ்களும் அண்ணாவின் எழுத்தோவியங்கள் மிளிர்ந்த அரங்கங்களாகும்,

இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் இடைக்காலத்தில் இலக்கியத் திறனும் நிரம்பிய ஒரு தலைவரென்றால் அவர் அண்ணாவே என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

அண்ணாவின் எழுத்தோவியங்களை ஊன்றிப் படிக்கும் போது ஒரு வரலாற்று ஆசிரியனின் ஆற்றல், ஒரு படைப்பாசிரியனின் பண்பு, ஒருசிறந்த விமர்சகனின் விவேகம், ஒரு விரிவுரையாளனின் நுட்பம், ஒரு வழக்கறிஞரின் வாதத்திறன், ஒரு கவித்துவம் நிறைந்த கற்பனையாளனின் நயம் நூலின் தலைப்பிற்கேற்ப பளிச்சிடக் காணலாம்.

அவர் எழுதிய நாடகங்கள் பலவற்றில் அவரே நடித்தார்.

'சந்திரமோகன்' நாடகத்தில்காகபட்டராகவும், 'சந்திரோதய'த்தில் துரைராஜாகவும், நீதிதேவன்மயக்கத்தில் இராவணனாகவும் நடித்து தான் நடிப்புக் கலையிலும் வல்லவர் என்பதை நிருபித்ததோடு, அதன் மூலம் நிராகரிக்கப்பட்டிருந்த நியாயங்களையும் மக்கள் மனதில் நிலைக்க வைத்தார். நடிப்புக்கலை உயர்வானவொன்று என்பதற்கு மக்களிடம் ஒப்புதலையும் உண்டாக்கினார்.

நாடகக் கலைஞர்களை 'கூத்தாடிப் பசங்க' என்று கூறப்பட்டதை மாற்றி அவர்கள் மதிக்கப்பட அண்ணாவின் பணி பெருந்துணையானது.

அண்ணாவின் அருந்தம்பிகளாம் கலைஞர் மு. கருணாநிதி ஏ. வி. பி. ஆசைத்தம்பி, அரங்கண்ணல், கண்ணதாசன் போன்றோர் கலைத்துறையில் ஈடுபாடு கொள்ளவும் — இயக்கப் பணி தொடரவும் அண்ணா ஒரு முன்னோடியாய்த் திகழ்ந்தார்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனும், நடிப்பிசைப்புலவர் கே. ஆர். ராமசாமியும், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்

திரனும், நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், புரட்சிநடிகர் எம். ஜி. ஆரும் அண்ணா கண்ட இயக்கத்தில் ஈடுபாடு கொண்டார்கள்.

அண்ணாவின் அறிவு அனைத்துத் திறத்தாரையும் இயக்கத்தின் பால் ஈர்த்தது.

'அறிவுப் புனல்' என்ற புகழாரம் அந்த அண்ணனுக்கன்றி 'அட்சரசுத்தமாக' வேறு எவருக்குப் பொருந்தும்?

★ ★

பிறப்பால், மக்களிடம் மருவியுள்ள வேறுபாடுகள் அகன்று சமுதாயக்களத்தில் அவர்களெல்லோரும் சமநீதி பெற்றவர்களாகத் திகழ வேண்டும்—இந்த நோக்கத்தின் நிறைவேற்றத்திற்காகத் தோன்றிய நீதிக்கட்சியின் அமைச்சரவைகண்ட பனகல் அரசர் 1921 ஆம் ஆண்டில் ஒரு உத்தரவைப் பிறப்பித்தார்.

நூற்றுக்கு மூன்று சதவிகிதம் மட்டுமேயுள்ள பார்ப்பன இனத்தவர் ஒன்றுக்குப் பலமடங்காக உத்யோகங்களைப் பெற்று வந்தனர். கல்வித்துறையை அவர்கள் ஆக்ரமித்துக் கொண்டு பட்டப் படிப்புக்களுக்குரிய வாய்ப்பையெல்லாம் தமதாக்கிக் கொண்டிருந்ததே இதற்குக் காரணமாகும்.

படிப்பதற்கான வசதியும் வாய்ப்பும் குறைந்த பார்ப்பனரல்லாதார் பெரும் முயற்சியெடுத்து படித்து வந்தாலும் பட்டப்படிப்புக்களுக்கான வாய்ப்புக்கள் அவர்களுக்கு திட்டமிட்டு மறுக்கப்பட்டு வந்தன:

அந்தக் கால கட்டத்தில் 157 பார்ப்பன மாணவர்கள் எம். ஏ பட்டப்படிப்பில் சேர முடிந்தது: அதில் 67 பேர் தேற முடிந்தது. பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கோ 20 பேருக்கே இடம் கிடைத்தது. அதில் 4 பேருக்கே வெற்றி கிடைத்தது.

எல். டி. படிப்பில் பார்ப்பன மாணவர்கள் 104 பேர் சேர்ந்து 94 பேர் தேர்ந்தார்கள். பார்ப்பனரல்லாத மாணவர்களோ வெறும் பதினொரு பேர் மட்டுமே சேரவும் அதில் 10 பேர் மட்டும் தேறவும் முடிந்தது.

வகுப்பு விகிதாச்சாரத்திற்கேற்ப இடம் வழங்கப்படாத நிலை.

பட்டப் படிப்பில் சேர்வதற்கு பார்ப்பனருக்கு அதிக இடம்; படித்து முடித்த பின்னர் படித்தவர்கள் என்பதால் உத்தியோகத்தில் அவர்களுக்கே அதிக இடம்!

—இந்த ஓரின நியாயம் மாறி, எந்தவொரு வகுப்பை சார்ந்தவர்களானாலும் எந்தத் துறையிலும் ஆதிக்கம் செலுத்தும் நிலை இருக்கக் கூடாது; 'எல்லாம் எல்லோர்க்கும்' என்ற சம நிலை உருவாக வேண்டுமென்றும் பனகல் அரசரால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் கூறியது.

அந்தத் தீர்மானத்தால் பதவிபோகும்—பண வருவாய் போகும் — பரம்பரைச் சுகம் பறிபோகும் — பாதிப்பு நேரும்— என்று பதை பதைத்தவர்கள் பலத்த எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.

சில்வண்டுகளின் கூச்சலுக்கு செவிகொடாத சிங்கம்போல் பனகல் அரசர் சிறிதும் அஞ்சாமல் அந்த வகுப்பு வாரி பிரதிநிதித்துவ தீர்மானத்தை நிறைவேற்றினர்.

ஆயினும், அதை நடைமுறைக்கு வரவிடாமல் ஆங்கிலேயர்களோடு—பார்ப்பனர்களும் சேர்ந்து கொண்டு தடையாய் நின்றனர். அந்தத் தடையை 1928 ஆண்டில் திரு சுப்பராயன் அமைச்சரவையில் பங்கேற்றிருந்த திரு முத்தையா முதலியார் அவர்கள் சட்ட வடிவம் தந்து உடைத்தெறிந்தார்.

மக்கள் தொகை அடிப்படையில்—100க்கு மூன்று இடங்களை மட்டுமே பெறவேண்டியவர்கள் 158 இடங்களை ஆக்ரமித்துக் கொண்டிருந்த அவலநிலை மாறவும் மற்ற பார்ப்பனரல்லாத வகுப்பைச் சார்ந்தவர்கள் தத்தமக்குரிய நியாயமான பங்கீட்டைப் பெறவும் பிறப்பிக்கப்பட்ட அந்த ஆணையே கம்யூனல் ஜீ. ஓ.வகுப்புவாரி பிரதிநிதித்துவம்—என்பதாகும்.

இப்படிப் போராடிப் பெற்ற சமூக நீதிச் சட்டத்தை அப்புறமும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் எதிர்த்துக் கொண்டிருந்த பார்ப்பன சமூகத்தவர் காங்கிரசு ஆட்சி வந்தால் இதற்கொரு முடிவேற்படுமென்று காத்திருந்தார்கள்.

1949 ஆம் ஆண்டில் குமாரசாமி ராஜா அமைச்சரவை அமைந்தது.

அடிபட்ட நாகங்களைப் போல் காத்திருந்தவர்கள் சீறத் தொடங்கினர்கள். கம்யூனல் ஜி. ஓ. வை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராயிருந்த பிரகாசம் எதிர்த்தார். அதை உடனே இரத்து செய்ய வேண்டுமென்று முன்னாளைய அமைச்சர் பாஷ்யம் ஐயங்கார் குரல் கொடுத்தார். சட்டத்திற் கெதிராக— வழக்குமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டது. வழக்குதாரர்களுக்காக முன்னாள் நீதிபதி சீனிவாச ஐயங்காரும், முன்னாள் அட்வகேட் ஜெனரல் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும் அரசாங்கத்தரப்பில் அட்வகேட் ஜெனரல் குட்டி கிருஷ்ண மேனனும் வாதிட்டனர்.

35820

MARAIMALAI ADIGAL

தீர்ப்பு : கம்யூனல் ஜீ. ஓ. சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என்பதாக இருந்தது.

அந்தத் தீர்ப்பு ஒடுக்கப்பட்டிருந்த மக்களின் தலையில் ஓங்கி அடிக்கப்பட்ட சம்மட்டியாக இருந்தது.

1921 ஆம் ஆண்டிலேயே போராடிப்பெற்ற நீதி 28 ஆண்டுகளின் இடைவெளியில் — நீதிமன்றத்தில் நடுவர்கள் மூவர் வழங்கிய சில வரிகளின் தீர்ப்பால் —முடக்கப்பட்டு விட்டது.

குளிர்ந்து நின்றனர் பிராமணர்.

கொதித்துப் போயினர் பிராமணரல்லாதார்.

மூண்டெழுந்தது போராட்டம்! முடுக்கிவிடப்பட்டது கிளர்ச்சி!

அந்தப் போராட்டத்திற்குப் பச்சைக் கொடி காட்டி துவக்கி விட்ட பெருமை பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்குரியதாகும்.

பெரியார்—முத்தையா முதலியார் போன்றோர் பலத்த எதிர்ப்பைக் காட்டி பாதிக்கப்பட்டோருக்குத் துணை நின்றனர். இந்திய அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டுமென ஆட்சிக் கெதிராக முழக்கமிட்டார் அண்ணா.

அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் எதிர்ப்புக் குரலும் கண்டனமும் எதிரொலித்தன.

அப்படியும் தங்களது இனத்தின் உயர்வுக்காக இந்து, எக்சுபிரசு, தினமணி, ஆனந்தவிகடன், கல்கி, பாரததேவி போன்ற ஏடுகள் வரிந்து கட்டி வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டரத்துக்கு வக்காலத்து வாங்கின.

விடுதலை, திராவிட நாடு, சண்டே அப்சர்வர், தனியரசு, தினத்தந்தி, போர்வாள், பொன்னி, தமிழ்நாடு, மாலைமணி போன்ற பார்ப்பனரல்லாதார் நடத்திய ஏடுகள் மேற்கண்ட ஏடுகளுக்கு எதிரணியில் நின்று சட்டரத்துக்கு கண்டனக் குரலெழுப்பின.

வெற்றி கிட்டியது.

அண்ணாவின் இடையறாப்பணியும்—எழுத்தும் — பேச்சும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவச் சட்டம் நிலைபெற பெருந் துணையாகியது.

தி. மு. கழகம் தோன்றிய மறு ஆண்டிலேயே அது மற்றெரு களத்தில் இறங்க வேண்டியதாயிற்று.

இலக்கண வளமும் இலக்கிய நயமும் கொண்ட தமிழுக்குரிய இடத்தில் தான் அமரவேண்டுமெனக் கனவு கண்ட இந்தி, அதிகாரத்தின் ஆலவட்டத்தோடு நுழைந்தது, அதைக் கட்டாய பாடமென்று அப்போதைய தமிழகத்தின் கல்வியமைச்சர் திரு. மாதவமேனன் அறிவித்தார்.

கட்டாயம் அதனை நாங்கள் ஏற்பதற்கில்லை—இப்போதும், எப்போதுமென கழகம் சீறி எழுந்தது· களபலி தந்தும் எங்கள் கனித் தமிழைக் காப்போமென கடும் சூருவளியென சுழன்றெழுந்த அதன் தோற்றங் கண்டே அரசு பணிந்தது.

அவசிய மற்றவொரு அல்லலுக்குத் தான் ஆட்பட விரும்பாத அரசு தன் உத்தரவை திரும்பப் பெற்றுக் கொண்டது.

'இந்தி கட்டாயப் பாடமல்ல, விருப்பப் பாடமே' என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டு தமிழுக்குரிய நியாயம் கிட்டியது.

இந்த வெற்றிக்குரியவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்து மகிழ்ந்தார் அண்ணு.

இரும்புக் கோட்டையின் எஃகுக் கதவம் போன்ற நியாயங்களின் கனத்த வாயிலைத் திறப்பதென்பது கடுமையான பணிதான். ஆனல் அந்த எஃகினும் உறுதி வாய்ந்தோர் இமயம் போல் எழுந்து நிமிரும்போது—நிதானமாயினும் — அது திறக்கப்பட்டே தீருமென்பதை பிற்படுத்தப்பட்டோரின் பாதுகாப்பிற்கென நடைபெற்ற போராட்டத்தின் வெற்றியும்; 'இந்தி கட்டாயப் பாடமல்ல' என 18-7-1950 ல் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையும் மெய்ப்பித்து நின்றன.

★ ★

1951 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள்.

தி. மு. கழகம் தன் வளர்ச்சியைக் காட்டவும்; மேலும் தன் வலிவைக் கூட்டவும்; வருங்கால திட்டத்தைத் தீட்டவும் சென்னை மாநகரத்திலே முதல் மாநில மாநாட்டைக் கூட்டியது.

மாற்ருர்தம் எதிர்பார்ப்புக்கும் மேலாக மக்கள் அதன் பக்கம் நின்ற காட்சியை அந்த மாநாடு தெள்ளத் தெளிவாக்கியது. டிசம்பர்த் திங்கள் 13 ஆம் நாளன்று துவங்கிய—முதல்

நாள் ஊர்வலத்தில் அறிஞர் அண்ணா அரசர்க்கரசரைப் போல் அன்புத் தம்பியர்தம் படை புடைசூழ அழைத்து வரப்பட்டார்.

சமுதாயத்தின் இழிநிலையைக் குறிக்கும் கறுப்பு வண்ணத்தையும் அதை மாற்றியமைக்கும் மறுமலர்ச்சியைக் குறிக்கும் சிவப்பு வண்ணத்தையும் கொண்டதான இருவண்ணக் கொடி தாங்கியோரின் அந்த எழுச்சி ஊர்வலம் 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற மணித்தமிழின் மனோன்மணிய வரிகளுக்கு மற்றொரு அற்புதச் சான்றாகக் களைகாட்டியது.

'அண்ணா வாழ்க! அண்ணா வாழ்க!' என்ற முழக்கம் அலைகடலெனப் பேரோசை எழுப்பி உணர்ச்சி முரசமாய் அதிர்ந்தது.

அண்ணா இப்படியொரு புகழ்நிலை எய்திட எது காரணம்?

பணமா, பதவியா, பட்டமா, பரம்பரைச் சிறப்பா?— அல்ல!

—அன்றைய தமிழகத்தில் இவற்றையெல்லாம் ஏராளமாய்ப் பெற்றிருந்தோர் எண்ணிக்கையற்றோர்.

ஆனால்,

அவர்களையெல்லாம் விட அண்ணா, மக்களால் தங்கள் தலைவராக வரிக்கப்படவும் வாழ்த்தப்படவுமான ஒரே காரணம்...

"I am the friend of the un friended poor"

—'நண்பர்களற்ற ஏழைக்கு நான் நண்பன்' என்றானே ஆங்கிலக் கவியரசன் ஷெல்லி... அந்த சந்தமொழிக்கு ஒரு சத்தான உதாரணமாய் அண்ணா திகழ்ந்ததுவேயாகும்.

சுரண்டல் வர்க்கத்தின் சூழ்ச்சி வலையினை அறுத்து, ஏழை எளியோர்களின் காவலனாய்—அவர்கள் ஏற்றம் பெற வழிகாட்டியாய் நின்றார் அண்ணா.

ஆதரவற்றிருந்த அந்த மக்கள் தங்களின் ஆதாரத் துணைவராக அவரை அள்ளிக் கொண்டனர்.

அண்ணா தான் கண்ட இயக்கத்திற்கு சென்னையில் ஒரு தலைமை நிலையமாக, முப்பதாயிரம் ரூபாயில் 'அறிவகம்' கட்டடத்தைப் பெற்ற விழாவினையடுத்து நடந்தது அந்த முதல் மாநில மாநாடு.

பெரியாரிடமிருந்து பிரிந்த பின்னர், 'வேதனையோடு— கண்ணீரோடு பிரிகிறோம்' என்று அண்ணா பேசியதையும்; பிரிந்து வந்தவர்களின் பெயர்ப் பட்டியலை 'கண்ணீர்த்துளிகள்' என்று தலைப்பிட்டு பத்திரிகையில் வெளியிட்டு வந்ததையும் கண்டு பெரியார், தமது எழுத்திலும் பேச்சிலும் கழகத்தவரைக் கேலி செய்வதுபோல் 'கண்ணீர்த் துளிகள்' என்றே குறிப்பிட்டு வந்தார்.

'நீரடித்தா நீர் விலகும்?'

—இதை நினைப்பை விட்டு நீக்காதவராம் அண்ணா, பெரியார் அடிக்கடி கழகத்தோரை ஏளனப்படுத்தும் போக்கில் குறிப்பிட்டு வந்த அதே சொல்லை மாநாட்டுப் பந்தலில் பல்லாயிரக்கில் கூடியிருந்த மக்களைப் பார்த்து "கண்ணீர்த் துளிகளே, கண்ணின் மணிகளே, கழகக் காவலர்களே" என்று தனது உரையைத் தொடர்ந்தபோது எழுந்த பெரும் கரவொலி அடங்க ஐம்பது அல்லது அறுபது நொடிகள் ஆயின.—தன்னை நோக்கி வரும் தாக்குதல் கணைகளையும் தனக்குச் சாதகமாகக் கொள்ளும் திறனுடையவராக அண்ணா திகழ்ந்தாரென்பதற்கு இதுவொரு துளிச் சான்றாகும்.

★ ★

கதராடை தரித்து, காந்தியம் பேசி, காசு சேர்ப்பதொன்றையே நோக்கமாய்க் கொண்டு, விடுதலை வாங்கித் தந்த காங்கிரசின் புகழுக்கே களங்கத்தை விளைவிப்பவர்களாய் காலத்தைத் தள்ளிக் கொண்டிருந்த பல தலைவர்களுக்கிடையில்...

சிந்தையில் செருக்கும், சீற்றமும், சீர்கெடுக்கும் சிறுமையும் குடியிருக்கவிட்டு; 'மனையென்றும் மனைவியென்றும், மகனென்றும், சொத்தென்றும், சுகமென்றும் பாராதவர்' என்று பலரறியப் பாராட்டு மொழிகளைப் பெற்று பவனி வந்து கொண்டிருந்த பல தலைவர்களுக்கிடையில்...

ஒன்றுமறியா மக்களை 'உப்பரிகையில் ஏற்றிவைப்பேன்' என்று உசுப்பி விட்டு விட்டு, உறுதுணையாய் நிற்க வேண்டிய நேரத்தில் ஒதுங்கிப் பதுங்கிக் கொண்ட பலதலைவர்களுக்கிடையில்...

தமிழகம், தன்னலமற்றவராக —தன்னிகரற்றத் தலைவராக அண்ணாவைக் கண்டது; கொண்டது.

தமிழினத்தின் தன்மான உணர்வுகளைத் தீண்டி விடவும்;

தீண்டிவிடப்பட்ட உணர்வுகளைத் தூண்டிவிடவும்;

தூண்டி விடப்பட்ட உணர்வுகளைத் தொடர்ந்து காத்திடவும்

அறிந்திருந்த ஆற்றலாளர் அண்ணா தி. மு. கழகத்திற்கென ஒரு நாளேட்டின் தேவையை உணர்ந்தார். முயற்சியெடுத்தார்; அந்த முயற்சியின் நல்வடிவமாக — நல்லிதழாக— 'நம் நாடு' எனும் பெயரில் ஏடொன்று தொடங்கப் பெற்றது.

1952 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் வந்தது. தி. மு. கழகம் தேர்தலில் பங்குகொள்வதில்லையென்ற முடிவில் நின்றது

மக்களின் மகத்தான வரவேற்பைப் பெற்று வளர்ந்து கொண்டிருக்கும் தி. மு. கழகத்தின் ஆதரவே தங்களுக்கு வெற்றியைத் தருமென்று கருதிய - காங்கிரசுக் கட்சியல்லாத - சிலர் அண்ணாவிடம் ஆதரவு கேட்டனர். கழகத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கழக இலட்சியங்களுக்கு உறுதுணையாய் இருப்போமென்று கையழுத்துப் போட்டுக் கொடுத்தனர்.

நானூற்றுக்கும் மேற்பட்ட அவர்களுள் நாற்பத்தைந்து பேருக்கு மட்டுமே ஆதரவு தரமுடியுமென அண்ணா முடிவெடுத்தார்.

அண்ணாவின் முடிவுக்கிணங்க கழகத் தொண்டர்கள் கண்ணயராது பாடுபட்டு பலருக்கு வெற்றியை ஈட்டித் தந்தனர். அந்தப் பலருள் சிலர், சில நாட்களுக்குள் வேறு திசையை நாடி ஓடிப் போனது இங்கு விவரிக்கப்பட வேண்டியதல்ல அவர்கள் பண்பையறியாதவர்கள், நன்றியெனும் பண்ணின் நயமறியாதவர்கள், மண்ணின் சுவை நாடி நெளியும் மந்தப் புழுக்களைப் போன்றவர்கள்-எனவிட்டொதுக்கப்பட வேண்டியவர்களாவர்.

மக்களுக்காக இயங்குவதாகக் கூறிக்கொள்ளும் எந்தவொரு இயக்கமும் அந்த மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதிலும் அவர்தம் பிரச்னைகளில் தீர்வு காண்பதிலும் முன்னின்றேயாக வேண்டும். இது மறக்கப்பட்டால் அந்த இயக்கம் மக்களால் மறுக்கப்பட்டதாகிவிடும். மாமேதை அண்ணா இதனைத் தொடுமுனையிலிருந்து விடுமுனை வரைஅறிந்திருந்தார்

ஆகவே, அவர்தம் இயக்கம் அடித்தள மக்களின் உரிமைக்காகவும்-உயர்வுக்காகவும் பல போராட்டக் களங்களைச் சந்திக்க வேண்டியதானது.

அண்ணா நடத்திய எந்தவொரு போராட்டமாயினும் தனது இயக்கம் இருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்வதற்காக

நடத்தப் பெறவில்லை. அதைத் தவிர வேறுவழியே இல்லை என்ற நிலையிலேயே அவை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அறியாமைகளின் நிமிர்வும், ஆதிக்கத்தின் திமிரும், அர்த்தமற்ற மொழித் திணிப்பும் தி. மு. கழகத்தின் மீது போராட்டத்தைத் திணித்தனவேயன்றி, தனது அரிப்புக்களைத் தணித்துக் கொள்வதற்காக தி. மு. கழகம் என்றுமே போராட்டத்திற்குள் தன்னைத் திணித்துக் கொண்டதில்லை. இதனை அண்ணா நடத்திய ஒவ்வொரு போராட்டத்தையும் ஊன்றிப் பார்ப்போர் ஒப்புக் கொள்ளவே செய்வார்.

போராட்டம் குறித்து அண்ணா அழகுபட தமக்கேயுரிய பாணியில் பலமுறை குறிப்பிட்டார்:

'நான் போராட்டத்தைத் தேடி அலைபவனல்ல; ஆனால் நடத்த வேண்டிய நேரத்தில் நடத்த வேண்டிய போராட்டத்தை நழுவ விட்டுவிட்டு ஒதுங்குபவனுமல்ல' என்று.

ஒரு குறிக்கோளின் கரையை அடைய போராட்டமெனும் படகில் ஏறித்தானாக வேண்டுமென்றால் அதைப் புறக்கணிப்பது புத்திசாலித்தனத்தின் பாற்பட்டதன்று.

அப்படிப்பட்டவொரு அவசியமான போராட்டத்தை நடத்த வேண்டிய கட்டத்தில் தி. மு. கழகம் நிறுத்தப்பட்டது.

★ ★

'ஆறுவயது முதல் பதினொருவயது சிறுவர் வரை அரை நாள் பள்ளிக்கூடம் போனால் போதும், அடுத்து அவர்கள் அப்பன் தொழிலையே செய்ய வேண்டும்'—இது அன்றைய முதலமைச்சர் இராசாசி அவர்கள் கொண்டு வந்த குலக்கல்வி திட்டம்.

தமிழெல்லைப் பாதுகாப்பிற்காகப் போராட்டம் நடத்திய தமிழர்களின் செயலை 'முட்டாள்தனம்' என்றார் அன்றைய தலைமையமைச்சர் நேரு.

'கல்லக்குடி' என்ற அமுதூறும் அழகுதமிழ்ப் பெயரை அகற்றிவிட்டு தொழில் நடத்தி ஆதாயம் பெற்றுக் கொண்டிருந்த ஒரு 'சிமென்ட்' தொழிற்சாலையின் அன்றைய முதலாளியாம் 'டால்மியா'வின் பெயரை அந்த ஊருக்கு வைக்கப்பட்டது.

—தன் 'சாதி'யைக் காக்க சாணக்கியத்தனத்தோடு திரு இராசாசி அவர்களால் கொண்டுவரப்பட்டசதித் திட்டம் குலக் கல்வி திட்டம்!

—மாபெரும் மேதைகள் கூட சிலநேரங்களில் மடமைத்தனத்திடம் மண்டியிட்டு விடுகிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டானபண்டித நேருவின் அந்தக் கோணல் வார்த்தை!

—சொந்த ஊரில் கேட்பதற்கு ஆளற்றுப்போன ஒரு வரட்டுப் பாடகனுக்கு வந்த ஊரில் வரவேற்பு-வாழ்த்துமடல் பெயர் நிலைக்க நிரந்தர கச்சேரி!—நாதசுவரத்தை எறிந்து விட்டு ஒரு பேதசுவரத்திற்குப் பெருமை தருவது போலான பெயர் மாற்றம்!

—இந்த கொடுமைகளைக் களைய பொதுச் செயலாளர் அண்ணா கழகத்தின் செயற்குழுவைக் கூட்டினார்.

**அடக்கத்தின் உறைவிடமாம், "அமைதியின் நிறைவிடமாம்" அண்ணா** அரிமாவென போர் முழக்கமிட்டார்.

குலக்கல்வி திட்டம் கொண்டு வரக் காரணமான இராசாசி அவர்கள் வீட்டின் முன் திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் மறியலைத் தொடங்குவதென்றும்.

'டால்மியாபுரம்' எனும் பெயரை அழித்து 'கல்லக்குடி எனும் பழம் பெயரை நிலை நிறுத்தும் போராட்டத்தை இரயில் நிலையத்தில் கலைஞர் கருணாநிதி தலைமையில் நடத்துவதென்றும்;

இழிச் சொல் கூறிய நேருவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாடு முழுவதும் கழகத்தவர் இரயில் நிறுத்தக் கிளர்ச்சியை மேற் கொள்வதென்றும் 1953 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 13 ஆம் நாளன்று முடிவெடுக்கப்பட்டது.

முடிவெடுக்கப்பட்ட அன்றிரவே—முன்னெச்சரிக்கை என்ற நினைப்பில்—மும்முனைப் போராட்ட மூலவராம் அண்ணாவுடன் நாவலர் நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரை ஆட்சியாளர்கள் கைது செய்து விட்டனர்.

அதனாலென்ன? நின்றுவிட்டதா போராட்டம்?

தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் மட்டுமே கட்டிக் கொண்டழும் கட்சியல்லவே கழகம்!

—மக்கள் தழுவிய மகோன்னதமான இயக்கமன்றோ!

மௌனத்தைப் புரிந்து கொண்டே ஒரு மாக்காவியத்தைப் படைத்துவிடக் கூடிய திறனுளர்களாம் கழகத்தின் கண்மணிகள் அரசின் அறை கூவல் போன்ற நடவடிக்கைகளால் அயர்ந்து போய்—அசைவற்று—அமைதியாக இருந்துவிட முடியுமா என்ன ?

அண்ணனின் ஆணை அக்கினிப் பிரளயமாக எழுந்தது.

—அநீதியை எரிக்க; ஆணவத்தை கருக்க!

கோடைக்கு விடை கொடுத்திருந்த அந்த ஜுலைத் திங்களின் 14—15 ஆம் நாட்கள் 'கொடுமைக்கு விடை தருவோம்' என்பது போல் வீறுடன் விடிந்தன.

திட்டமிட்டபடி போராட்டம் நாடு முழுக்க நடந்தது.

திணறிப் போன ஆட்சி ஐயாயிரத்திற்கு மேற்பட்டவர்களைக் கைது செய்தது. சிறையிலடைத்தது. 'கொடுங்கோன்மை' தன் தொழிலைக் குறையின்றிச் செய்தது.

கலைஞர் தலைமையில் நடந்த போராட்டக் களமாம் கல்லக்குடி இரயில் நிலையத்தில் தடியடிப் பிரயோகம் தடையின்றி நடந்தது. தொடர்ந்து துப்பாக்கிச் சனியனும் வாய் பிளந்தது, நான்கு பேரைக் கொன்று தீர்த்தது. ஒரு புல்லின் இதழைக் கூட உருவாக்க முடியாதவர்கள் பொன்னான நான்கு நல்லுயிர்களைப் பறித்த பயங்கரவாதிகளாய் நின்றார்கள்.

ஆங்காங்கே இரண களத்தை உண்டாக்கி வேடிக்கைப் பார்த்தார்கள்.

அதிகார ஆட்சி!

—கூறியது இராமாயணம்;

—கேட்டது கீதை;

—படித்தது பாரதம்;

—நடத்தியது படுகொலை!

'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்ற அண்ணாவின் இயக்கம் எல்லாக் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டது.

கழகத்தின் வலிவை மாற்றார் அறிந்திட அதுவொரு வாய்ப்பானது.

குலக்கல்வி திட்டப் போராட்டம், இரயில் நிறுத்தப் போராட்டம், கல்லக்குடிப் போராட்டம் — இந்த மும்முனைப் போராட்டத்திற்குரிய பலன் உடனடியாகக் கிடைத்துவிடவில்லை.

அண்ணா மும்முனைப் போராட்டத்தைத் தூண்டி விட்டார் என்ற குற்றச்சாட்டுக்குரியவராக மூன்றுமாத சிறைத்தண்டனை பெற்றார்.

கலைஞருக்கு ஆறுமாத சிறை. கழக முன்னணியினர் கணக்கற்றோர் சிறை வாசமேற்றனர்.

இத்தனைக்கும் பிறகு—கழகத்தின் கோரிக்கைகள் உடனடியாக இல்லையென்றாலும் ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக வெற்றி பெற்றன.

★ ★

குலக்கல்வி திட்டம் கொண்டு வந்த காரணத்தால் காங்கிரசுக் கட்சிக்குள்ளாகவே எதிர்ப்பு வலுத்து திரு. இராசாசி அவர்கள் முதலமைச்சர் பதவியையே கைவிட நேர்ந்தது.

காமராசர் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார். ஏற்பதற்குத் தகுதியற்ற குலக்கல்வித் திட்டத்தைத் திரும்பப் பெற்றார். அதற்காக காமராசரை அண்ணா பாராட்டினார்.

கூட்டத்தைக் கூட்டிவிடலாம்; கோலாகலமாய் ஊர்வலத்தையும் நடத்திவிடலாம்; கொதிப்பையுண்டாக்கி போராட்டங்களையும் தூண்டிவிடலாம்;—வெட்டவெளியில் நின்றுகொண்டு இவற்றையெல்லாம் செய்வதென்பது பெரிதல்ல; இந்த கழகத்தவர்களால் சட்டமன்றத்திற்கு வரமுடியுமா?— சாதனைகளைச் செய்யமுடியுமா?— என்று அறை கூவல் விடுவதுபோல் காங்கிரசார் பேசத் தலைப்பட்டனர்.

அதோடு, 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தி. மு. கழகத்தின் கொள்கைகளுக்கு ஆதரவாக இருப்போம் என்று கூறி வெற்றி பெற்றுச் சென்றவர்களுள் பலர் சுயநலச் சுருக்களாக சுழன்று வந்து கொண்டிருப்பதையும்; ‘தெற்கே’ பார்ப்பார்கள் என்று நம்பி தம்மால் ஆதரிக்கப்பட்டவர்களுள் சிலர் ‘வடக்கே’ முகந்திரும்பி நிற்கும் கோலத்தையும் கண்டார் அண்ணா.

ஆதரிக்கப்பட்டவர்கள் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்க, ஆதரித்தவர்கள் அனுதாபத்திற்குரியவர்களாக அடித்தளத்திலேயே நின்று கொண்டிருக்கலாமா?

ஏணிப்படியாய் இருக்கலாம், ஆனால் எந்நாளும் ஏமாந்த படியாய் இருக்கலாமா?

தி. மு. கழகம் சுத்தியலாகிறது;

தொண்டர்கள் உளியாகிறார்கள்.

—உடைவதும் உருவாவதும் ஊரை ஏய்ப்பவர்களுக்காகிற தென்றால் அதனை ஒப்புக் கொள்வது எப்படி சாத்தியமாகும்?

—எண்ணத் தலைப்பட்டார் அண்ணா.

'தி. மு. கழகமே ஏன் தேர்தலில் நிற்கக் கூடாது?'

மக்களாட்சி நெறிமுறையில் மதிப்புடையவர் அண்ணா.

சனநாயக அமைப்பில் பெரும்பான்மையே எதையும் சாதிக்கும் வல்லமையுடையதாகும் என்பதில் சற்றும் தளராத நம்பிக்கையுடையவரான அண்ணா புதிய கண்ணோட்டத்தில் தம் நினைவோட்டத்தை நடத்தினார்.

''எதிர்ப்போர்—ஏளனம் செய்வோர் தம் திட்டத்தைத் தகர்த்தெறிய வழிவகை காணமட்டுமன்று, 'நமது வரலாறு' பற்றிய ஆய்வுரையை நாட்டினர் அறியச் செய்ய மட்டுமன்று; சீரிய நம் கொள்கை வெற்றிபெறத் தக்க செயல்திட்டம் காணக் கூடுகிறோம்'' என்றெலாம் செந்தூரத் தமிழில் எழுதி அண்ணா அழைப்பு விடுத்திருந்த—1956 ஆம் ஆண்டு மே திங்கள் 17 ஆம் நாளன்று துவங்கிய—அந்தத் திருச்சி மாநாட்டில்......

'கட்டளைக்குக் கீழ்ப்படியக் கற்றவனே கட்டளையிடத் தகுதி வாய்ந்தவன்' என்ற நெப்போலியனைக் கற்றறிந்த அண்ணா ''தம்பி! வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்கு நாங்கள் அனைவரும் அடங்கி நடப்போம் தலைமையேற்று நடத்த வா!'' என்று பெருந்தன்மையோடு அதிமதுரத் தமிழில் அழைப்பு விடுத்து நாவலர் நெடுஞ்செழியனுக்குப் பொதுச் செயலாளர் பொறுப்பைத் தந்து மகிழ்ந்தாரே அந்த இரண்டாவது பொது மாநில மாநாட்டில்...

தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று தொண்ணூற்றைந்து சதம் பேர் வாக்களித்தனர்.

வாக்கெடுப்பின் பெரும் பான்மை முடிவு தி. மு. கழகத் தீர்மானமானது.

தீர்மானம் செயல்வடிவம் பெற்றபோது திரும்பிய திசை யெல்லாம் எதிர்ப்பு புழுதியென எழுந்தது. ஏடுகள் பலவும் படபடப்போடு எழுதவாரம்பித்தன; சில இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக்கட்டி திரிக்கவாரம்பித்தன.

தி. மு. கழகம் முதன்முதலாக நேரடியாகப் பங்கேற்கும் பொதுத்தேர்தல்; புது அனுபவம்.

'கடவுள் இல்லை என்பவர்கள்—வழிவழிவந்த வழக்கங்களை மறுப்பவர்கள்,—சமயங்களை வெறுப்பவர்கள்—சாதி இல்லையென்பவர்கள்' என்றெல்லாம் வெறுப்புணர்வோடு எறிந்து கொண்டிருந்த துருப்பிடித்த ஆயுதங்களை கசப்பு எண்ணெய் தடவி காரக்கனலில் காய்ச்சி கயமைக் கல்லில் தீட்டி தி. மு. கழகத்தை நோக்கி முழுமூச்சாக வீசத் தலைப்பட்டனர்.

கழகம் அந்தத் தாக்குதல்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும்—கண்ணியம் தவருத—பிரச்னைகளிலிருந்து விலகாத—பிரச்சாரத்தைத் தொடரவும் அண்ணு வழிகாட்டியாய் நின்ருர்.

தமிழகத்தின் வரலாற்றுத் தேர்வீதியில் ஒரு திருப்புமுனைக் குரிய தீர்மானம் வடிவெடுத்த இந்த சிறப்புக்குரிய ஆண்டில் ஒரு கரும்புள்ளியும் விழுந்தது.

ஆம்,

காலமெலாம் இயக்கம் இயக்கமென கண்ணயராது ஓடியாடி உழைத்த உத்தமன்—தென்பாண்டிக் கடலின் ஒளிமுத்து—தூத்துக்குடி சீமையின் சிங்கம்— கே. வி. கே. சாமி துரோகிகளால் துடிக்கத் துடிக்க வெட்டிக் கொலை செய்யப்பட்டார். தி. மு. கழகத்தின் கொள்கைக் குன்றமொன்று குணக்கேடர்களால் சாய்க்கப்பட்டது.

அந்த மாவீரன் கல்லறையின் மீது மலர்வளையம் வைத்து கண்ணீர் சிந்திய கழகம் அவன் இதயக் கனவுகளை நனவாக்க மேலும் உறுதி பூண்டது.

★ ★

எதிலும் அவசரமற்ற—ஆழ்ந்த போக்கை மேற்கொள்ளும் அண்ணு அவர்கள் எல்லாத் தொகுதிகளிலும் கழக வேட்பாளர்களை நிறுத்த விரும்பவில்லை;— 'அகலக் கால் வைப்பதை விட அழுத்தமாய்க் கால்வைப்பது அவசிய'மென்பதை அவர் அறிந்திருந்தார்.

205 சட்டமன்ற தொகுதிகளுக்கு 124 தொகுதிகளுக்கும்—41 நாடாளுமன்ற தொகுதிகளில் 11 தொகுதிகளிலும் மட்டுமே தி. மு. கழக வேட்பாளர் நிறுத்தப்பட்டனர்.

1957 ஆம் ஆண்டில் நடைபெற்ற அந்தத் தேர்தலில்...

'நாட்டைத் துண்டாட எண்ணும் பிரிவினைவாதிகள்' என்ற பிரச்சாரத்திற்கான விளக்கத்தைத் தந்து, 'இந்திய நாட்டிற்கே விடுதலை வாங்கித் தந்த கட்சி' என்ற விருதுப் பட்டயத்தோடு நிற்கும் காங்கிரசுக் கட்சியினை எதிர்த்து...

தன்னலமற்றவர்—தகுதியானவர் — பச்சைத்தமிழர் என்றெல்லாம் பலபடப் பாராட்டுப் பெற்றிருந்த முதலமைச்சர் காமராசரின் முழு பலத்தையும் சந்தித்து...

பதவி—பணம்—படை எனும் மூன்றும் ஒன்றாகச் சேர்ந்தமைந்த பெரும் சக்தியின் தாக்குதலைத் தாங்கி...

தி. மு. க வேட்பாளர்கள் 15 பேர் சட்டமன்றத்திற்கும் 2 பேர் நாடாளுமன்றத்திற்குமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்

அந்தப் பதினைந்து பேர்களுள் அண்ணாவும் ஒருவராவார். அவரை எப்படியும் தோற்கடிக்க வேண்டுமென்று ஆட்சியின் அதிகாரம் அனைத்து முயற்சிகளை மேற்கொண்டும் அவையத்தனையும் முனை முறித்து முறியடிக்கப்பட்டது.

பெருத்த அளவில் இல்லையென்றாலும் பெருமிதங் கொள்ளத் தக்க அளவில்—முதல் முறையாக—தி. மு. க. கம்பீரத்தோடு காலடி வைத்தது சட்ட மன்றத்தில்.

சட்ட மன்றத்தையும் அதன் நிகழ்ச்சிகளையும் அதுவரை அறியக்கூட அக்கறைகூட காட்டாதிருந்த ஏழை—எளிய—நடுத்தர மக்களின் பார்வை ஆவலோடு சட்டமன்ற நிகழ்ச்சிகளில் படரவாரம்பித்தது.

கழகத்தின் சட்டமன்ற கட்சித் தலைவரான அண்ணா முதல் முறையாக அந்த சட்டமன்றத்தில் தமக்கேயுரிய...ஆம், தமக்குமட்டுமேயுரிய நடையில் அனைத்துப் பிரச்சனைகளையும் தொட்டு, தொகுத்து அற்புதமானவொரு உரையாற்றினார்.

அந்த ஆண்டு மே திங்கள் 6 ஆம் நாள். அண்ணா கொண்டு வந்த முத்தனைய முதல் தீர்மானத்தையே 'நீயென்ன சொல்வது, நாங்களென்ன கேட்பது' என்று மறுத்தனர், மறு நாள் தங்கள் பெரும்பான்மை பலத்தால் அந்த தீர்மானத்தையே தோற்கடிக்கவும் செய்தனர் காங்கிரசார்.

என்ன அந்தத் தீர்மானம்?

'சுதந்திரம் பெறுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட காங்கிரசு கட்சியின் பணி முடிந்து விட்டது; இனி அது கலைக்கப்

பட வேண்டியது' என்று காந்தியார் கூறிய வாக்கை செயற் படுத்த வலியுறுத்திய தீர்மானமா?

அல்ல.

கடலைத் தூர்க்க வேண்டுமென்பதா, காவிரியைத் திருப்பி விடச் சொல்லியதா?

தென் மாநிலங்களில் இருக்கும் வட மாநிலத் தலைவர்களின் பெயர்போல் வடமாநிலங்களின் பகுதிகளுக்கு தென்னகத் தலை வர்களின் பெயர் வைக்கப்பட வேண்டுமென்று வேண்டிய தீர் மானமா?

அல்லவே அல்ல!

அண்ணா கொண்டுவந்த அந்த தீர்மானம் தமிழ்பேசி தமிழ் வளர்த்து—தமிழர்கள் வாழும் வாலாற்றுப் பூர்வமான தமிழ் நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டக் கோரியதாகும்.

அண்ணா கொண்டுவந்த தீர்மானத்திற்கு ஆதரவாக நின்ற 42 'தமிழ்நாடு மக்களை' எதிர்த்து 127 'சென்னை ராஜதானிகள்' வாக்களித்தார்கள்.

சூடு சொரணையற்றவர்கள்—அதனால் அந்தத் தீர்மானத் தைமறுத்து தோற்கடித்துவிட்டார்கள் என்று சொல்லலாமா?

அது சரியல்ல.

'இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் தகுதி காங்கிரசுக் காரர்களாகிய எங்களுக்கில்லை. அண்ணாதுரை! எதிர்காலத்தில் நீதானே இந்த நாட்டின் முதலமைச்சனாக வரப் போகிறாய். அப்போது இப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றி அந்தப் புகழையும் நீயே பெற்றுக்கொள்' என்று எண்ணியோ என்ன வோதான் அண்ணாவின் தீர்மானத்தை அன்று தோற்கடித் திருக்கக்கூடும்!

தங்கம் தன்னோடு வைரத்தைப் பதித்துக் கொள்ளலாம்;

தகரத்திற்கு அந்தத் தகுதி இல்லைதானே?

எவையெவற்றை எவரெவர் செய்ய வேண்டுமோ அவையவ் வற்றை அவரவர் செய்வதுதானே அழகு?—மதிப்பு?

★ ★

"அர்த்தமில்லாத போராட்டங்களை நடத்துபவர்"

"பைத்தியக்காரர்"

"நாட்டைவிட்டே விரட்டப்பட வேண்டியவர்"

—மேற்படி கருவாசகங்களை பெருங் கூட்டமொன்றில் திருவாசகமெனக் கொட்டினர் இத்தியப் பிரதமர்—'ரோஜாவின் ராஜா' பண்டித நேரு.

ரோஜாப்பூ அரளிப்பூவானது போல்—'ஆசிய ஜோதி' எனவும் அழைக்கப்பட்ட—மோதிலால் நேருவின் திருமகனர் தான் இப்படிப் பேசினர்.

யாரைக் குறித்து?

அர்த்தமற்ற சாத்திர சம்பிரதாயங்களின் ஆணிவேர்களில் அனலாகக் கொதித்த அறிவு நீரைக் கொட்டி ஆட்டங்காணச் செய்த பெரியாரை... "அர்த்தமில்லாத போராட்டங்களை நடத்துபவர்" என்று,

சாதி—சனாதனப் பைத்தியம் தெளிய சமூகத்திற்கே வைத்தியம் பார்த்துக் கொண்டிருந்த பகுத்தறிவு மருத்துவராம் தந்தை பெரியாரை "பைத்தியக்காரர்கள்" என்று,

பணத்தாலும் பதவியாலும் நாட்டுமக்களை அடக்கி, அவர்களை அறிவிலிகளாகவும் ஆக்கி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த சுரண்டல் பேர்வழிகளை விரட்டப் போராடிய பெரியாரை... "விரட்டப்பட வேண்டியவர்" என்று,

—நேருபிரான் பழித்தார்.

நிலவை நெருப்பென்றும்...

நித்திலத்தைக் கல்லென்றும்...

சொல்லும் மதியுடையார் சொல்லி நின்றாலும் கேட்பவர்க்கு மதியென்ன கீரைத்தண்டு ஆய்வா நடத்திக் கொண்டிருக்கும்?

கிளர்ந்தெழுந்தனர் தமிழர்!

'கேளப்பரா'னர் அறிவுப்புனல் அண்ணா!

பெரியாரைப் பழித்தது தமிழைப் பழித்ததாகும். தமிழைப் பழிப்பதென்பது தமிழ்நாட்டையே பழித்ததாகும்; தமிழ்நாட்டைப் பழிப்பதென்பது தமிழினத்தின் தன்மானத்தையே பழிப்பதாகும்.

இருக்கும் பொறுப்பின் சிறப்பை மறந்து—தன் தகுதிக்குத் தாழ்வாக—தலை குனிவுக்குரிய வகையில்—பேசிய நேருபிரான் இனி சென்னைக்கு வரும் நாளில் கருப்புக் கொடி காட்டுவது கழகத்தின் கடமையாகும்—என்று முடிவெடுத்தார் அண்ணா.

அந்த முடிவு குறித்து முழுவிளக்கம் தர 1958, சனவரித் திங்கள் மூன்றாம் நாளில்—சென்னை கடற்கரையில் பொதுக் கூட்டம் நடைபெறுமென முறைப்படி அறிவிக்கப்பட்டது.

அந்த நாளும் வந்தது.

அவனி புகழ் பண்டிதர், நாற்பதுகோடி மக்களின் நாயகராம் இந்தியப் பிரதமர் நேருவுக்கு எதிராகக் கூட்டமா?—நடக்கலாமா?—என்று கொதித்துப்போன அதிகாரம் கூட்டத்திற்கு வந்து கொண்டிருந்த மக்களையெல்லாம் வரும் வழியிலேயே நிறுத்தியது. தடிகளைக் காட்டி தடுத்தும், கண்ணீர்ப்புகை குண்டுகளை வெடித்து மிரட்டியும், விரட்டி விரட்டியடித்தது.

கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று அண்ணாவுக்கு தடையே விதிக்கப்பட்டது.

'அதற்கு வேறு ஆளைப்பாருங்கள்' என்பதுபோல் தடையை மீறிப் புறப்பட்டு வந்த அண்ணா கடற்கரைக்கு வரும் வழியிலேயே கைது செய்யப்பட்டார். அவருடன் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஈ. வெ. கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன் ஆகியோரும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களைத் தொடர்ந்து கலைஞர், நாவலர், சி. பி. சி, மதியழகன், சத்யவாணிமுத்து, அரங்கண்ணல், அன்பில் தர்மலிங்கம், என். வி. நடராசன், இரா. தர்மலிங்கம், ஏ. கோவிந்தசாமி, ப. உ சண்முகம், போன்ற கழக முன்னணியினரும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, நடிகமணி டி. வி நாராயணசாமி, இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், எம். ஜி. ஆர் ஆகிய கழகத்தைச் சார்ந்த கலைமணிகளும் காவலில் வைக்கப்பட்டனர்.

அவர்களோடு சந்தேகப்பட்டவர்களையெல்லாம் கைது செய்த காவல்துறை முன்னெச்சரிக்கை நடவடிக்கையை முழுதும் எடுத்துவிட்டதாக எண்ணி பெருமிதப்பட்டுக் கொண்டிருக்கையில்...

அந்த சனவரித் திங்கள் 6 ஆம் நாள் சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பிரதமர் நேரு இறங்கிப் புறப்பட்டபோது எதிரே கண்டது இருபதினாயிரத்துக்கும் மேற்

பட்ட மக்களை! அவர் கண்கள் சிவக்கக் கண்டது அவர்களின் கையிலிருந்த கறுப்புக் கொடிகளை!

அண்ணா சிறைக்குள்ளிருந்த போதும், வெளியே எது நடைபெற வேண்டுமென்று விரும்பினாரோ அது நடந்தது.

விமான தளத்திலிருந்து சென்னை நகருக்கு வரும் வழியை மாற்றிக் கொண்டுவந்த போதும், எது நடைபெற்றுவிடக் கூடாது என்று எதேச்சதிகாரம் நினைத்ததோ அதுநடைபெற்று விட்டதால் ஆத்திரம் கண்ணை மறைக்க மக்களை அடித்துத் துவைக்கும் அநியாயத்தில் இறங்கியது. குதிரைப் படைக் காவலர்குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்துமக்களை மிதிபட வைத்தனர். தாறுமாருகத் தாக்குதலுக்குட்பட்ட மக்களுள் சிலர், சில இடங்களில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கினர்.

எங்கு பார்த்தாலும் கலவரம்; அதிர்ச்சி, அலறல்!

அதிகாரத்தின் அடக்குமுறை ஆணவத்தால் மூன்று இளைஞர்கள் தம் இன்னுயிரை இழந்தனர். எண்ணிக்கையற்றோர் படுகாயமுற்றனர்.

அண்ணா கலந்து கொள்ளவிருந்த கடற்கரைக் கூட்டம் அனுமதிக்கப்பட்டிருந்தால் —அவர் கைது செய்யப்படாமலிருந் திருந்தால் அந்தக் கருப்புக்கொடி நிகழ்ச்சி அமைதியாகவே நடைபெற்றிருந்திருக்கும், கசப்பான சம்பவங்கள் தவிர்க்கப் பட்டிருக்கும்.

ஆனல், அறிவு முடமாகிப் போனவர்கள் அவசரப்பட்டு அமளி துமளியை உண்டாக்கியதோடு, அதற்கு காரணம் கழகம் என்றும் கற்பித்து 'கட்டுப்பாடு இல்லாதவர்கள்' என்று களங்கத்தையும் சுமத்தினார்கள்;

ஒன்பது கோணலையுடைய ஒட்டகம் உருவம் சரியில்லை யென்று கரியைப் பார்த்து பழித்த கதையை எழுதினார்கள்!

கைது செய்யப்பட்டிருந்த அண்ணா காவலிலிருந்து விடுவிக்கப்பட்ட அடுத்த கிழமையே மீண்டும் கடற்கரையிலே மிகப்பெரியதொரு கூட்டத்தை கூட்டினார்.

**'விலங்குக'ளைக் கண்டு வீரர்கள் விலகி விட்டால் 'விடுதலை'யது எப்போது தோன்றும்?**

பல்லாயிரக்கணக்கில் அங்கே கூடியிருந்தவர்களிடம் பாகமைய உரையாற்றி, அந்த மக்களைப் பார்த்து 'நான் உங்களை கட்டுப்பாட்டுடன் வைக்கத் தெரியாதவனாமே! எனது கட்டளைக்கு நீங்கள் கீழ்படியாதவர்களாமே! — கட்டிப்பாடிலாதவர் களாமே!—கழறுகின்றனரே காங்கிரசார். அது உண்மைதான்

என்பதை நான் இப்போது தெரிந்து கொள்ள வேண்டும். எல்லோரும் எழுந்து நில்லுங்கள்!'—என்ருர். ஒருவரும் மிச்சமின்றி அந்த உயர்ந்தோன் கட்டளைக்கேற்ப நின்ருர்கள். 'எல்லோரும் உட்காருங்கள்!' என்ருர். எழுந்து நின்ற அவ்வளவுபேரும் அப்படியே அமைதியாக அமர்ந்தார்கள்.

ஒரு குடும்பத் தலைவனுக்குரிய பாசம் மட்டுமன்று; ஒரு இராணுவத் தலைவனுக்குரிய கம்பீரமும் அண்ணுவிடமிருந்ததை அந்தக் காட்சி மெய்ப்பித்தது.

அன்பான வேண்டுகோளுக்கு மட்டுமன்று; தனது அழுத்தமான கட்டளைக்கும் அடங்கி நடக்கக் கூடியவர்களாக தனது தங்கத் தம்பியரை அணியப் படுத்தியிருந்தார் அறிவுலகின் வேந்தராம் அண்ணு!

★

சென்னைப் பட்டினத்தில் வெள்ளையர் தம் அரசின் பிரதிநிதியாக விளங்கிய சார்லசு ஆர்டிங்சு அவர்களால் 11-6-1913 ஆம் நாளன்று திறந்து வைக்கப்பட்டது ஒரு கட்டிடம்.

நகராட்சி மன்றங்கள் தோன்றுவதற்கு காரணமாயிருந்த ரிப்பன் பிரபு அவர்களின் பெயர் தாங்கி இன்றைய சென்னை மாநகரத்தின் தொன்மைச் சிறப்புக்குரிய கட்டிடங்களில் ஒன்ருக விளங்கும் அதுதான் ரிப்பன் மாளிகை—சென்னை மாநகராட்சி மன்ற கட்டிடம்.

நகரத்தின் வளர்ச்சி, துப்புரவு, சிறப்பு ஆகியனவற்றுக்கு திட்டமிடவும் செயற்படவுமாக இருக்கும் அந்த கட்டிடத்தில் 1919 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் நகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்று தலைவராக அமர்ந்த பெருமை நீதிக்கட்சியின் தலைவராகத் திகழ்ந்த வெள்ளுடைவேந்தர் தியாகராயர் அவர்களுக்கே உரியதாகும்.

அவருக்குப் பின்னர் பல் சான்ருேர்கள் — காங்கிரசல்லாதவர்கள், காங்கிரசுக் கட்சியை சார்ந்தவர்கள் தலைமையேற்று நிர்வாகத்தைத் திறம்பட நடத்தினர்.

பத்து தலைவர்களும் 25க்கும் மேற்பட்ட 'மேயர்'களும் அமர்ந்த சிறப்புக்குரியதாய்த் திகழ்ந்த சென்னை மாநகராட்சி மன்றத்திற்கான தேர்தல் 1959 ஆண்டு ஏப்ரல் திங்களில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. அதில் தி. மு. கழகமும் பங்கேற்பதென தீர்மானிக்கப்பட்டது.

அப்போது மிகப்பெரியதொரு சக்தியாக விளங்கிய காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுவதே ஒரு வியப்புக்குரிய சாதனையென்று எண்ணப்பட்டது. தி. மு. கழகம் வெற்றிபெறலாம், ஆனல் அந்த வெற்றி காங்கிரசை வீழ்த்துகின்ற அளவில் அமையாது என்பதே அண்ணுவின் கருத்தாயிருந்தது.

யானைக்குத் தன்பலம் தெரியாது என்பதுபோல் தான் வளர்த்திருக்கும் இயக்கத்தின் சக்தி—வேகமான வளர்ச்சி—தனக்கே தெரியாமலிருந்தது என்பதை அந்தத் தேர்தலின் முடிவுக்குப் பின்னரே அறிந்தார் அண்ணு.

கலைஞர் கருணுநிதி முன்னதாகவே கணக்கிட்டுக் கூறியது போல் வெற்றி கழகத்தைச் சார்ந்தது; பெரும்பான்மை கிட்டியது. அண்ணு தான் அறிவித்திருந்ததுபோல் கலைஞருக்கு கணையாழி ஒன்றையும் பரிசாக அணிவித்தார்.

மேட்டுக் குடியினருக்கு மட்டுமே மேயர் பதவி என்றிருந்த நிலையை தி. மு. கழகத்தின் நகரமன்ற நுழைவால் மாற்றி வைத்தார்.

மக்களுக்குப் பணியாற்றும் மனமுடைய எவரும் மாண்புமிகு மேயராகப் பொறுப்பேற்கலாம் என்பது நிலைநாட்டப்பட்டது.

சென்னை நகராட்சியின் முதல் தலைவராகப் பதவியேற்றவர் நீதிக்கட்சியின் தலைவர் தியாகராயர். அடுத்து நாற்பதாண்டுகளின் இடைவெளிக்குப் பிறகு அதே பாரம்பர்யத்தில் வளர்ந்த இயக்கமாம் தி. மு. கழகத்தின் முதல்மேயராக—ஒரு சாதாரணக் குடும்பத்தைச் சார்ந்த திரு. அ. பொ. அரசு அவர்களை அண்ணு மேயராக்கி மகிழ்ந்தார்.

விஞ்ஞானத்தின் சாதனைகளுள் ஒன்று விமானம். அது எந்தவிதப் பிடிப்புமற்ற-தாங்குதலுமற்ற —விண்வெளியில் பறப்பதற்குக் காரணம் விமானியின் பலமல்ல; விஞ்ஞான பூர்வமான திறமை!

அது போன்றே,

அண்ணுவின் திறமையே தி. மு. கழகத்தை அறிவு பூர்வமாகச் செலுத்திக் கொண்டிருந்தது!—ஆக்கபூர்வமான பாதையில்!

★ ★

மனித சமுதாயத்தை வாழ்விக்கும் வளியாய் — ஒளியாய் —வெளியாய் — தெளிவாய் — விளங்குவதென்பது ஒரு உன்னதத் தலைமைக்குரிய ஒப்பிலக்கணம்.

இந்த இலக்கணத்தை விட்டு மாத்திரையளவும் மாறுமல் நின்ற காரணத்தாலேயே மதிக்கப்பட்ட மாமேதை அண்ணு!

எவரெவரிடம் எந்தெந்தத் திறமைகளிருந்தனவோ அந்தந்தத் திறமைகளை இனங்கண்டு தூண்டிவிட்டு இயக்கம் வளர்த்த பெருமை அண்ணுவுக்குண்டு.

அவர் எழுதிய 'தம்பிக்கு' கடிதங்களில் அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டு மக்களிடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டோர் ஏராளமானேர். அவர் பேசும்பொழுது குறிப்பிடப்பட்டு பிரபலமானேர் எண்ணிக்கையற்ருேர்.

—இந்தப் போக்கால் கழகத்திற்கு புதிய உறவுகளின் வரவுகள் பெருகின.

தன் தம்பியொருவனிடம் 'வேகம்' கண்டால் அது 'விழலுக்கிரைத்த நீராகிவிடக் கூடாது' என்றெண்ணி அதனை விவேகமாக மாற்றிய பாங்கு;

—ஒரு தம்பியிடம் 'கோபம்' கண்டால் அது கொதிப்பில் போய் முடிந்துவிடக் கூடாதே என்று குளுமைப்படுத்திய குணம்;

—ஒரு தம்பியிடம் 'மெத்தனம்' கண்டால் அது வெகுளித்தனமாகி விடக்கூடாதே என்று விபரம் சொல்லி வீறு கொள்ளச் செய்த சிறப்பு—அண்ணுவின் அரும் பண்புகளாகும்.

சாகசத்தைக் கையாண்டு-சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தங்களைத்தவிர எவரையும் தலையெடுக்கவிடாமல் தட்டிவைத்து தகுதிக்கு மீறிய தலைமையை தக்கவைத்துக் கொண்டிருக்கும் சில கட்சிகளின் தலைமைகளைப்போல், அண்ணுவின் தலைமை ஒருபோதும் இருந்ததில்லை; ஒருவரது வளர்ச்சிக்கும் குறுக்காக நின்றதில்லை.

தாராளமனத்தோடு தன்னருகே நின்றவர்களையெல்லாம் அண்ணு அழைத்தார்.

'உன்னைத்தான் தம்பி!' என்று உரிமையோடு அழைத்தார்; பயிற்சி கொடுத்தார்.

அறியாதவர்களை அறியவைத்தார்;

அறிந்தவர்களைப் பேச வைத்தார்;

பேசத் தெரிந்தவர்களை எழுதவைத்தார்;

எழுதத் தெரிந்தவர்களை நடிக்க வைத்தார்;

நடிக்கத் தெரிந்தவர்களை நடத்த வைத்தார்.

நடத்தத் தெரிந்தவர்களை நடத்தி வைத்தார்.

ஒரு ஞானச்சுடர் பல்லாயிரம் சுடர்களை ஏற்றிவைத்தன.

எத்தனைச் சுடர்கள் எரிந்தபோதும் அண்ணாஎனும் ஒரு நந்தா விளக்காகிடவில்லை;

ஆக முனையவுமில்லை.

பாண்டவ கௌரவர்களுள் பார்த்தனைப்போல் பல வீரர்கள் உருவாகக் காரணமாயிருந்தவர் துரோணர். அவரது நேரடிப் பயிற்சியற்றபோதும் ஒரு ஏகலைவன் உருவானதற்கு அந்த இதிகாசமாம் பாரதத்தில் சில பக்கங்களுண்டு. அண்ணாவுக்கோ ஆயிரமாயிரம் ஏகலைவர்கள் உருவானார்கள்.

அவரது குணமும் கொள்கையும் அந்த சாதனையைச் செய்தன.

அவரால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி அவரது பாணியைப்பின்பற்றி பயிற்சியெடுத்துக் கொண்டவர்களும் கூட அவருக்காக எதைச் செய்யவும் அணியமாயிருந்தார்கள்.

இயக்கத்தின் காவலர்களாக அண்ணா எண்ணிக்கையற்றோரை வளர்த்தார். எத்தனையோ பேர் வளர்ந்தும் அந்தப் பெருமை வளர்த்தவர்க்கே உரியதானது.

பல நூறு கனிகளைத் தந்ததாலேயே பலா பட்டுப் போனதில்லை;

பல்லாயிரம் மாணவர்க்குக் கற்பித்ததாலேயே ஒரு ஆசிரியன் கெட்டுப் போனதுமில்லை.

அண்ணா எடுத்தால் குறைந்திடும் குடத்து நீரல்ல; கொள்ளக் கொள்ள குறையாத ஊற்றுநீர்.

அவரொரு அறிவுக் கடல்!

கார்மேகம் சூல்கொண்டதால் கடல் நீர் வற்றிவிட்டதாகக் கற்பனைக் கதையுமில்லை.

அண்ணாவால், எதையும் எதிர்பாராமல்— பெருந்தன்மை

யோடு—வளர்த்துவிடப்பட்ட ஏராளமானவருள் ஓரிருவர் ஒதுங்கிப்போன துண்டு; பாதை தவறிப் பயணமானதுமுண்டு.

இது கசப்பானதுதான்; ஆனால் கலப்பற்ற உண்மை.

—அதற்குப் பல காரணங்களுண்டு.

'தான்' என்ற நினைப்பும், 'தனக்கே தலைமை தாங்கத் தகுதியுண்டு' என்று தலையெடுத்த தன்முனைப்பும், தன்னை மீறி வளர்ந்த தன்னல விருப்பும் அந்தக் காரணங்களுள் சிலவாகும்.

—இப்படிப்பட்ட காரணங்களுக்கெல்லாம் தன்னை அப்பாற்பட்டவராகக் காட்டிக் கொண்டிருந்த திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கழகத்திற்குள் 'சல சலப்பை' உண்டாக்கத் தொடங்கினார்; சபலப்பட்ட சிலர் அவரோடு சேர்ந்து கொண்டார்கள். சலனமற்ற நெஞ்சங்களின் ஒட்டு மொத்த எதிர்ப்புக்கும் உரியவர்களானார்கள்.

அண்ணாவின் ஒவ்வொரு அடிப்பயணத்திலும் உடனிருந்து ஊன்றிக் கவனித்து வளர்ந்து—புகழடைந்த சம்பத் அவர்கள் தான் காலத்தின் கோலத்தால் புதுக்கோலம் கொண்டார்.

வாலியாய் இருப்பான் என்றெண்ணப்பட்டவன் வழிமாறி சுக்ரீவனாய் மாறியதுபோல,

கும்பகர்ணனுக்கூட இல்லாமல் குலமழித்த கோடரிக் காம்பாம் விபீடணனைப்போல,

அண்ணாவின் ஆசைத்தம்பியெனக் கருதப்பட்ட சம்பத் அவர்கள் தடம் புரண்டார்.

'குறைகளெ'ன்று சொல்லத் தொடங்கியவர் தி. மு. கழகத்தின் மீது 'குற்றஞ்சாட்டுபவரா'கக் குரல் கொடுத்தார்.

'தவறுகள் தவிர்க்கப்பட வேண்டு'மென்பதைவிட 'தண்டனைகள் தரப்பட வேண்டு'மென்ற நோக்கே அவர் போக்கில் மிஞ்சி நின்றது. வாதியாக நின்று வாதிடத் தொடங்கியவர் நீதிபதி தானே என்ற நினைப்பில் நின்றார். 'கழகக் கழனியில் களை நிறைந்து விட்டது' என்று கழறியவர் பயிரையே பதம் பார்க்கும் களைக்கொட்டானார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்பாடுகளில் தீவிரம் வேண்டுமென்று முழங்கியவர் தனியாகப் பிரிந்து சென்று 'தமிழ்த் தேசியக் கட்சி' என்று ஒரு அமைப்பைத் தொடங்கினார்.

எந்தவொருவரையும் தன் இலட்சியத்திற்கு இணக்கமுள்ள வராக மாற்றி இயக்கத்தோடு இணைத்துக் கொண்டிருந்த அண்ணா அவர்கள் — எவரது பிரிவையும் எளிதில் ஏற்றுக் கொண்டுவிடும் இயல்புக்கு மாறான அண்ணா அவர்கள் — சம்பத்தின் நடவடிக்கைகளால் பெரிதும் வருத்த முற்றார். அவரது கண்கள் பனித்தன ;—பாசத்தோடு பழகிவிட்ட காரணத்தால்!

எத்தனையோ ஆண்டுகளின் பழக்கத்தையும் இரண்டொரு நாட்களில் தூக்கியெறிந்து இரண்டொரு கிழமைக்குள் நொறுக்கிவிட்ட சம்பத் அவர்களுடன் அவர் பேசிய அதி தீவிரத்தை நடக்குமென நம்பி, சில நல்லவர்களும் கூட கட்சியை விட்டு வெளியேறினார்கள்.

எனினும்,

சம்பத்தின் விலகலை அண்ணா சகித்துக் கொண்டார்.

தனியொரு நபரைவிட—அவரை நம்பிச் சென்ற சில நபர்களைவிட—இயக்கம் பெரிதல்லவா!

அதைக் காக்க வேண்டிய கடமைக்குரிய கண்ணியராயிற்றே அண்ணா!

'தி. மு. க. உடைந்தது, ஒழிந்தது' என்று தாரை தப்பட்டைகளின் பிரச்சாரம் தடையின்றித் தொடர்ந்தது.

பாய்ந்தோடும் சுழலாற்றின் மீது, பலமிக்க பாலமெனினும் பழுதுபட்டுப் போனவொரு தொங்குபாலத்தில் பயணம் போவதுபோல் அண்ணா எச்சரிக்கையோடு செயல்பட்டார்.

ஒரு முப்பதாண்டு காலத்திற்கு முன்னர் மூதறிஞர் பெருமக்களால் ஏற்றிவைக்கப்பட்ட ஒரு இலட்சியத் திருவிளக்கு ஒரு சிலர் தம் பிடிவாதக் காற்றால் அலைக்கழிக்கப்படவும் அணைந்து போய் விடவும் விட்டுவிடவா முடியும்?

'நரம்புகள் இல்லையென்றால் நாதம் இல்லை'யென்று நாத்திறம் காட்டிய அந்த பிடிவாதக்காரர்களின் நம்பிக்கை பொய்ப்பிக்கப் பட்டது. நாளடைவில், அவர்கள் நரம்புகள் அல்லர் வெறும் துரும்புகள் என்பதும் மெய்ப்பிக்கப்பட்டது.

19—4—1961 அன்று தி. மு. கழகத்திலிருந்து வெளியேறிய திரு. சம்பத் அவர்கள் புதுக்கட்சியினைத் தோற்றுவித்த பிறகு ஜூலைத்திங்களில் தி. மு. கழகத்தின் மூன்றாவது மாநில மாநாடு மதுரையில் நடத்தப் பெற்றது.

அந்த மாநாட்டில் கூடிய மாபெரும் திரள்,

'இடிக் கூட்டத்தின் தொகுப்புக்கள் இங்கே; விலகியோடிய வெத்து வேட்டுகளே நீங்கள் எங்கே, எங்கே?' என்று கேட்பதாக அமைந்தது.

'எரிமலையின் அனற்பிழம்பு இங்கே; இமைப்பொழுதில் எரிந்தணையும் தீக்குச்சி மனங்களே நீங்கள் எங்கே, எங்கே?' என்று எச்சரிப்பதாக இருந்தது.

'கதிரவனின் ஒளிப்பாய்ச்சல் இங்கே; கண்சிமிட்டும் மின்மினிக் கூட்டமே நீங்கள் எங்கே, எங்கே?' என்று முழங்குவதாய்த் திகழ்ந்தது.

தி. மு. கழகமெனும் தருவிலிருந்து பயனற்ற — பழுப்படைந்த—இலைகள் உதிரலாம்; பலமற்ற—பழுதுற்ற கிளைகள் கூட முறியலாம். ஆனுல் அடி மரமாக—ஆணிவேராக அந்த இயக்கத்தைத் தாங்கிக் கொண்டு ஆயிரக் கணக்கானவர்கள் இருக்கும் வரையில் அதன் ஆயுள் கெட்டியே என்பதை வெற்றிகரமாக நடந்தேறிய அந்த மாநாடு விவரித்தது.

அறிவியல் வளர்ச்சி .. திட்டமிட்ட பொருளாதாரம்—ஒழுங்குகுலையாத வாழ்க்கை ஒரு நாட்டின் முன்னேற்றத்தைக் குறிக்கும் அளவுகோல்கள். வலிவான கொள்கை — அறிவுத்திறன்—கட்டுப்பாடு ஆகியன ஒரு இயக்கத்தின் முன்னேற்றத்திற்குரிய திறவு கோல்கள்—என்பதில் தெளிவோடு திகழ்ந்தவராம் அண்ணு அந்த மாநாட்டின் மூலம் தி. மு. க. வளர்பிறையாகி வருவதை மெய்ப்பித்துக் காட்டினுர்.

★ ★

ஒவ்வொரு மனிதனுக்கும் உணர்வுகள் என்பதுண்டு. அந்த உணர்வுகளில் புலமை வெளிப்படலாம்; புதுமை தெரியலாம்; புரட்சி இருக்கலாம்.

அவற்றை இனங்கண்டு அவற்றிற்கேற்ப செறிவு எனும் இறகுகளை செருகி வைத்து சரியான பாதையில் சிறகடிக்க வைப்பவனே ஒரு நாட்டிற்குரிய முறையான தலைவனுவான்.

புதிய எண்ணங்களைப் புறக்கணிப்பதென்பது பொருந்தாச் செயல்.

சிந்தனைகளைச் சிறைப்படுத்துபவன் சிறகுகளை வெட்டி

விடும் வேடனைப் போன்றவனாயிருக்கலாமேயன்றி விவரம் நிறைந்த விற்பன்னனாயிருக்க முடியாது.

எங்கும்,

எதிலும்,

எவரிடத்தும்,

—கட்டுப்பாடு வேண்டுமென்பது நியாயமே!

கண்ணை மூடி வைப்பதென்பது...?

முன்னதைச் சொல்வது 'தலை'

பின்னதைச் செய்வது 'தனை'

...கருத்தைச் சொல்லி கவர்வதென்பது நியாயமே!

—கண்ணி வைத்து ஈர்ப்பதென்பது...?

முன்னது கலை;

அடுத்தது களை.

—அறிந்தவர் அறிவுப் புனல் அண்ணா!

தேவையற்றவைகளைத் தவிர்த்து தேவையானவற்றை வளர்த்து கழகம் காத்த தன்னிகரற்ற தலைவராம் அண்ணாவுக்கு அது ஐம்பத்து மூன்றும் ஆண்டு.

புகழ் மணக்கும் ஒரு பொதுவாழ்வுக்கு பூ மணக்கும் ஒரு புதுநாள்!

ஒரு அகவையின் அடக்கத்திலே மற்றொரு அகவையின் தொடக்கம்!

ஒரு புனித வரலாற்றில் புரண்டு மின்னிய ஐம்பத்து மூன்று ஆண்டுகளைக் குறிப்பிடும் வகையில் அந்த அண்ணனின் அன்புத் தம்பிகள் ஐம்பத்து மூன்று வகையான பரிசுகளை அவர் முன்னே குவித்து வைத்து விட்டு அகமும் முகமும் மலரவணங்கி மகிழ்ந்தபோது அண்ணா அவற்றையெலாம் பார்த்தார்; பொருட் செறிவோடு ஒரு புன்னகை பூத்தார். பூரிப்போடு வந்த தம்பியர் புரியாமல் நின்றபோது கேட்டார்; அவர்கள் கொண்டு வந்திருக்கும் பரிசுப் பொருட்களையெல்லாம்விட உயர்ந்த பரிசென்று தாம் கருதியதைக் கேட்டார்.

கேட்டது அவர்—அவருக்காக அல்ல; அவர் அல்லும் பகலும் எண்ணியிருந்த இயக்கத்திற்காக!

தி. மு. க வின் இலட்சிய வெற்றிக்கு அவர் கேட்ட பரிசு ஒரு பரிகாரமாகுமென்று கேட்டார்:

'வருகின்ற தேர்தலில் தி. மு. க குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றாக வேண்டும். நம்முடைய கொள்கை வலிவானது; நாட்டுமக்களை வாழவைக்கக் கூடியது என்பதனை — மக்களும் புரிந்து கொண்டு விட்டார்கள் என்பதற்கு அடையாளமாக — கழக வேட்பாளர்கள் கணிசமான வாக்குகள் பெற்று வெற்றி பெறுவதன் மூலம் காட்ட வேண்டும்'

—அண்ணா ஆர்வத்துடன் எதிர்பார்த்த பரிசு அதுவே!

அவர் விரும்பி அது நடைபெறாவிட்டால் அவர்தம் படையென்ன இடித்து வைத்த புளியா இருந்த இடத்தை விட்டு அசையாமலிருக்க ?

அப்புறமும் அவர்கள் இருந்தென்ன, இறந்தென்ன?— கேள்வி பிறக்காதா, கேலி கிளம்பாதா?

ஆகவே அவர்கள் கிளர்ந்தெழுந்தனர்.

செந் தேனீக்களாய்ப் பறந்து,

சிற்றெறும்புகளாய் உழைத்து,

சிங்கங்களாய்ச் சிலிர்த்து,

வெற்றிக்கு விரித்தனர் இரத்தினக் கம்பளம்!

அந்த 62 ஆண்டைய சட்டமன்றத் தேர்தலில் தி. மு. கழக உறுப்பினர் எண்ணிக்கை பதினைந்தில் இருந்து ஐம்பதாகப் பெருகியது. நாடாளுமன்றம் இருவருக்குப் பதிலாக எழுவரைப் பெற்றது.

ஆனாலும் அந்தத் தேர்தலில் அதிகார வர்க்கத்தின் அனைத்துக் கருவிகளும் அதிவேகமாக முடுக்கிவிடப்பட்டு, மூர்க்கத்தனத்தோடு மும்முரமாகத் தொடுத்த தாக்குதலின் விளைவு காஞ்சித் தொகுதியில் அண்ணா தோற்றார்.

ஆம்;

'வீர'த்திற்கு தோல்வி விளைந்தது.

'விவேகம்' புறக்கணிக்கப்பட்டது.

—இந்தத் தோல்வியின் மூலம் அண்ணாவை மக்கள் மனத்திலிருந்து மறைத்துவிட முடியுமென்று நம்பியோர் மகிழ்ந்து போயினர்.

"அறிவுளோர் தமக்கு யாதோர் அசடது வருமேயாகில் வெறியரென் றிகழார் என்றும் மேதினி உள்ளோர்தாமே" என்பது விவேக சிந்தாமணி. அறிஞர்க்கு ஏதேனும் குறையது வருமென்ருலும் அதனுல் அகிலத்தோர் அவரை வெறுக்கத் தக்கவர் என்று விளம்பிட மாட்டார்கள் என்பது அதன் விளக்கம். இந்த எளிமையான வரிகளைக் கூட மறந்துபோன அந்த அசடுகளின் மகிழ்ச்சியில் மண்விழுந்தது.

வெண்ணிலாவுக்கு கருப்படிக்க முனைந்த முயற்சியின் முனை முளையிலேயே முறிந்தது.

சட்டமன்ற உறுப்பினர்களால் அண்ணு மாநிலங்களவைக்கே உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ருர்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று.

'நடப்பதெல்லாம் நன்மைக்கே' என்ற நன்மொழிக்கு நல்லதொரு நடைமுறைச் சான்ருயிற்று.

அண்ணுவின் அறிவாற்றலை அவனியோர் அறிய ஒரு அரிய வாய்ப்புக் கிட்டியது

தி. மு கழகத்தின் கொள்கைகள் தென்னகத்தின் ஒரு கோடியில்தான் கொலுவிருக்கிறது; அது விந்தியத்திற்கப்பால் விரையவில்லை என்றவொரு கருத்திற்கு மதிப்புக் கொடுப்பதாக —மாற்ருக—அண்ணுவின் மாநிலங்களவை நுழைவு அமைந்தது.

அந்த மாநிலங்களவை படித்துப் படித்துக்கரைத்துக்கற்ற பட்டதாரிகளும் பட்டறிவாளர்களும் நிறைந்ததாகும்.

அரசியலின் நெளிவு சுளிவுகளையறிந்து எதிர்ப்படும் சுள்ளிக் கள்ளிகளை வளைத்தொடித்துப் போட்டு வென்று வந்திருப்பவர் கள் அந்த விபரமானவர்கள். அந்த விற்பன்னர்களின் சந்தையிலே விவரமில்லாதவர்கள் விலைபோக முடியாது என்பதோடு வேடிக்கைக்குரியவர்களாகவும் ஆகிவிடுவார்கள். ஆனல் அண்ணுவோ தன் நாவின் முனையிலேயே நாநிலத்தின் அரசியலை நிறைத்து வைத்திருந்தார். அதனைத் திறம்பட—திகட்டலற்ற—தேன்மாரியாகத் தேவைக்கேற்ப பொழிந்தார்.

மேதினி போற்றும் மேன்மைத் திருநாளாம் மே முதல் ளன்று மேலாளராம் அண்ணுவின்முழக்கம் மாநிலங்களவையில் சங்கொலித்தது.

அற்புதமான ஆங்கிலத்தின் ஆரோகண அவரோகண ஆலாபனையின் சங்கீதமாக அந்த அவையினில் நிறைந்து வழிந்தது.

[illegible]

வெற்றிலைக் காவி படிந்துபோன அந்த வித்தகரின் நாவில் நர்த்தனமாடிய நளினமான ஆங்கிலத்தைக் கண்டு அந்த அவையிலிருந்தோர் சொக்கிப் போயினர் என்பது மட்டுமல்ல, அண்ணா திராவிட நாட்டு விடுதலைக்காக எடுத்து வைத்த கருத்துக்களும், தொடுத்துரைத்த வாதங்களும், படித்துரைத்த சான்றுகளும் மருண்டுபோய்க் கிடந்த மாற்றுரைக் கூட மயக்கியும் உருக்கியும் ஒரு புதிய சிந்தனைக் கூடாரத்திற்குள் நுழைய வைத்தது என்பதும் உண்மையாகும்.

அன்றொரு நாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'ஆற்றோரம்' என்ற தலைப்பில் தமிழர்தம் நிலைக்கு விளக்கமாக ஆற்றியமைந்த அற்புதமான உரை;

'தலைப்பில்லை' என்ற தலைப்பில் தன் தகுதியினை அடையாளம் காட்டிக் கொண்ட சொற்பொழிவு;

தலை நிமிர்ந்து நிற்க வேண்டிய தாயகம் நிலை குலைந்து நிற்கும் நிலைகண்டு குமுறி 'ஏ, தாழ்ந்த தமிழகமே!' என்று விளித்து ஆற்றிய விளக்கவுரை!

நற்றமிழ்க் காவலராய் விளங்கிய நாவலர் சோமசுந்தர பாரதியாரிடம் பெற்ற பாராட்டு;

கம்பராமாயணம் பற்றிய சொற்போரில் சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளையை தோல்வியுறச் செய்த வாதத்திறன்;

மிகச்சிறந்த ஆங்கிலச் சொற்பொழிவாளர் என்று ஆங்கிலேயர்களாலேயே போற்றப்பட்ட ஆற்காடு சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்களால் பாராட்டுரை பெற்ற நேர்த்தி;

எந்த இராசாசி அவர்களின் திட்டங்களுக்கெதிராக போர்க் கொடி உயர்த்தினரோ அவராலேயே—ஆயிரக்கணக்கான மக்களின் முன்னிலையிலேயே—'ஒப்பற்ற பேச்சாளர்' என்று ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை;

உரையாற்றிய பலவும் நூல்வடிவம் பெற்று விற்பனையில் பெற்ற விறு விறுப்பு.

—அண்ணாவின் வாழ்க்கையில் அணி செய்யும் இது போன்ற குறிப்புக்கள் அவரது சொற்பொழிவுத்திறனுக்கு 'பளிச்'சென வெளிச்சமிடும் விளக்கங்களாகும்.

கிரேக்க அறிஞன் டெமாஸ்தனிசு, ஏதென்சு நகர சாக்ரடீசு, உரோமாபுரியின் சிசரோ, அன்டோனியசு மார்க்சு ஆகியோரின் சொற்பெருக்குத்திறனை நூல்வழியே அறிந்தவர்கள், அந்த வரலாற்றுப் பூபதிகளுக்கு தாங்கள் வாழும் கால இணையாக அண்ணாவைக் கண்டனர்.

அண்ணாவின் மாநிலங்களவைப் பேச்சைக் குறித்து புகழ் பெற்ற 'இந்து' நாளேடும், வடபுலத்து 'இந்துஸ்தான் டைம்சு' 'டைம்சு ஆஃப் இந்தியா' போன்ற ஏடுகளும், மலையாளத்து 'மாத்ரு பூமி' ஏடும் சிறப்புற பாராட்டுவதில் தத்தம் தாராளத்தைக் காட்டின.

உலைக்களத்தில் பக்குவமுற காய்ச்சப்பட்ட இரும்பு போல் அண்ணாவின் உள்ளத்திலிருந்து பதமுறத் தெறித்த கருத்துக்களின் கனல் தாளமாட்டாமல் டில்லி வட்டாரங்கள் பெரிதும் சலனமுற்று சிறிது திசை திரும்பி சிந்திக்கத் தொடங்கின.

மாநிலங்களவை நுழைவால் மற்றொரு மட்டிலாப் புகழுக்குரியவரான அண்ணா தி. மு. கழகத்தின் திறம்—நிறம்—மறம் புறம்—உரம்—தரம்—ஆகியனவற்றை அறியாதார் அறிந்திடதம் கன்னிப் பேச்சு எனும் அந்த எண்ணப் பாய்ச்சலின் மூலம் ஏற்றதொரு வழி கோலினார்.

* *

மலையும் மடுவும்,

மழையும் வெய்யிலும்,

தென்றலும் சூறுவளியும்

—இயற்கையின் விளைவுகளாயிருக்கலாம். ஆனால் மானிடர்களுக்கிடையில்......

ஏற்றமும் இறக்கமும்,

இன்பமும் இன்னலும்,

உழைப்பும் உறிதலும்

—செயற்கையின் வினைகளே!—ஏமாற்றிகளின் ஏற்பாடுகளே! என்பது புரிந்து கொள்ளப்பட்டதா?

'கடுமையாக உழையுங்கள்' என உபதேசிக்கும் அதிகார வர்க்கத்தின் குரலை—அடையாளம் தெரியாமல்—கட்டளை என ஏற்றவர்கள் காலமெலாம் தங்கள் நிலைமாறாமல் நிற்கும் கோலத்திற்கு மூலவர்கள் யார்?

ஒரு காசு நாணயத்திலேயே ஒரு பக்கத்தில் அசோகச் சின்னமிருந்தும் மற்றொரு பக்கத்தில் ஒன்றுமேயில்லாமல் தேய்ந்துமிருந்தால் அது செல்லாக்காசு என்பது ஒப்புக் கொள்ளப்படும்போது; ஒரு புறம் ஐந்து நட்சத்திர 'ஓட்டல்களு'ம்

மற்ருெரு புறம் ஒடுங்கிய ஓட்டைக் குடிசைகளுமென்ருல் இந்த சமூகக் கொடுமை மலிந்து போன நாடு காடே என்பதும் ஒப் புக் கொள்ளப்பட வேண்டியது தானே?

—இந்த இழிநிலைக்கு எவர் காரணம்?

மறுக்கப்படாமல்,

மனதார நம்பி,

மகத்தான விளைவுகளுக்காக,

மாபெரும் அளவில்,

மனித உழைப்பு செலவிடப்பட்டது.

அன்றைய விளைச்சலைவிட இன்றைய விளைச்சல் கூடுதல் என்று புள்ளி விவர முரசு கொட்டி முழக்கப்பட்டது.

ஆனல்,

விளைந்தவை வேண்டிய போது கிடைக்காமல் எங்கே போகின்றன?

கிடைக்கும் போது வாங்க முடியாத நிலையில் அவற்றின் விலை வெகு உயரே விலகியோடும் நிலைமை ஏன்?

—இத்தகைய விபரீதமான விளைவுகளுக்கு யார் பொறுப்பு?

சுதந்திரம் வந்தது. இனி சுகம் வருமென்று சொல்லப்பட் டது; நம்பப்பட்டது; நம்ப வைக்கப்பட்டது.

ஆனல்,

வந்த சுதந்திரத்திற்கு வாரிசுகளானவர்கள் யார்?

இந்த நாட்டிலே,

பாஞ்சாலிப்பதிவிரதையின் பெருமை பேசப்படுகிறது;

சீதாப் பிராட்டிக்கு கோயிலிருக்கிறது;

அகல்யாவுக்கு புராணமே உண்டு.

ஆனலும், வெள்ளையன் காலத்தில் அங்கீகரிக்கப்பட்டி ருந்த ‘சிவப்பு விளக்கு’ப் பகுதிகள் இன்றளவும் அகற்றப்படா மலிருக்கும் அவலத்திற்கு எது காரணம்? யார் பொறுப்பு?

‘பாரதமாதா’ இதையெல்லாம் பார்த்துச் சிரித்துக் கொண் டாயிருக்கிருள்?

பசுவைக் ‘கோமாதா’ என்றும்;

பணத்தை ‘இலட்சுமி’ என்றும்;

படிப்பை 'சரசுவதி' என்றும்;

பலத்தை 'சக்தி' என்றும்

எல்லாவற்றிலும் பெண்ணினத்தை உயர்த்திப் பேசும் இந்த நாட்டில் இன்று நடப்பென்ன?

கொளுத்தும் வெயிலில் கோணியைக் கால்களில் சுற்றிக் கொண்டு கொதிக்கும் தாரை சாலையில் ஊற்றும் வேலையை அல்லவா செய்து கொண்டிருக்கிறார். எட்டுச் செங்கல்லை கூடையில் அடுக்கிக் கொண்டு பதினாறும் அடுக்கு மாடிக்கல்லவா ஐந்து ரூபாய் கூலிக்காக படிகளில் ஏறிக் கொண்டிருக்கிறார்?

பெண்கள் வேலைக்குச் செல்லக்கூடாது என்பது இந்தப் புதுயுகத்தில் புரையோடிப்போன வாதம். ஆனால், வியத்தகு விஞ்ஞான வளர்ச்சி பெற்றிருக்கும் காலத்தில் அவர்களுக்கு இன்னின்ன வேலைகள் என்பதும் அவற்றை இப்படி, இப்படித் தான் செய்ய வேண்டுமென்பதும் நிர்ணயம் செய்யப்படக் கூடாததா?

இதையெல்லாம் சம்பந்தப்பட்டவர்கள் சிந்திப்பதே இல்லையா?

மந்தகாசம் சிந்தும் மாலைப்பொழுதில் 'சாகுந்தலம்' நாட்டிய நாடகத்தைப் பார்க்கப்போகின்றவர்கள்; மங்கிய வெளிச்சத்தில் மேனகா, ஊர்வசிகளின் அரையாடை ஆட்டத்தை இரசிக்க நேரமிருக்கின்ற 'அதிகாரக் கூட்டங்கள்' 'குடும்ப விளக்'கெனப்படும் குணவதிகள் குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு குப்பைத் தொட்டியில் எறியப்படும் வாழை இலையில் விழிவைத்து நிற்கும் கோலத்தை எண்ணிப்பார்க்கவும் நேரமில்லையென்றால் அந்த நிலைமைக்கு யார் காரணம்?

ஆளவந்தவர்கள் தானே? அரசுதானே?

ஐந்தாண்டுகள் ஆள்வதற்கு ஒரேநாளில் உரிமை தரும் வாக்குச்சீட்டு வள்ளல்கள் 'கேக்' செய்ய 'கிரீம்' கேட்கவில்லை.

'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று முழங்கப்படும் நாட்டின் ஒரு சமதர்ம அரசுக் குடிமகன் அப்படிக் கேட்டாலும் தவறில்லை; ஆனாலும் கேட்கவில்லை.

ரொட்டிக்கு முட்டை கேட்கவில்லை. டாட்டா பிர்லா என இருபதுக்கு மேற்பட்டவர்களின் ஏகபோக வாணிபத்திற்கு சந்தையாகிவிட்ட இந்தியாவில்— ஒரு குடியரசு என்று சொல்லப்படும் நாட்டின் குடிமகன் அப்படிக் கேட்டாலும் தவறில்லை; ஆனாலும் கேட்கவில்லை.

அவர்கள் கேட்டதெல்லாம் வயிறாரக் கஞ்சி. அதைக்கூட வடித்துச் குடிக்க முடியாமல் அரிசியும் உப்பும் அன்றாடம்

பயன்படுத்தும் ஏனைய எளியப்பொருட்களும் கூட அநியாய விலையாகி உயர்ந்துயர்ந்து போய்க் கொண்டிருந்தது.

கவனிக்க வேண்டிய அன்றைய காங்கிரசாட்சி கண்மூடிய நிலையிலிருந்தது. மூன்று ஐந்தாண்டுகளின் திட்டம் முடிந்து போன காலகட்டம். கோடி கோடியாய் மக்களின் வரிப்பணத்தைக் கொட்டியும் திட்டத்தின் பலன் சேரவேண்டியவர்களைச் சேராமல் திண்டாடும் நிலைமையே பெருகி நின்றது.

வேண்டிய அளவுக்கு மேலாகவும் வியர்வையைச் சிந்திய மக்கள் வேதனைப் புத்தகங்களை மட்டுமே படிக்க நேர்ந்தது. அவர்கள் மகிழ்ச்சியுற—மாற்றம்பெற—அண்ணு விரும்பினுர்.

"சட்டவல்லுனர்கள் — சட்டமன்ற உறுப்பினர்கள் — பொருளியல் மேதைகள்—ஆகியோர்களைக் கொண்ட ஒருகுழு அமைத்து விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டு"மென்ற கோரிக்கையினை சட்டமன்றத்தில் எழுப்ப வைத்தார்.

ஏற்றுக் கொள்ள மறுத்தது அரசு.

எதிர்க்கட்சி எனும் நிலையில் தி. மு. க தன் கடமையாற்ற முனைந்தது.

1962 ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 19 ஆம் நாள் நாடு முழுவதும் ஆட்சித்தலைவர்களின் அலுவலகங்கள் முன்பாகவிலைவாசி எதிர்ப்பு அடையாள மறியல் நடத்த ஆணையிட்டார் அண்ணு.

அந்த ஆணையினை ஏற்ற அவரது அன்புத்தம்பிகள் ஒரே நாளில் இருபதாயிரத்திற்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். —இந்த எண்ணிக்கை இந்திய வரலாற்றிலேயே முதல் முறையாகும். தொண்டர்கள் மட்டுமன்றி கழகத்தின் முன்னணித் தலைவர்களில் ஓரிருவரைத் தவிர ஏனையோர் அனைவரும் சிறையிலடைக்கப்பட்டனர்.

வேலூர்க்கோட்டை-ஆட்சித்தலைவர் அலுவலகம் முன்பாக ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டோர் கூடியிருந்த நிலையில் 'அண்ணு வாழ்க'வென எழும்பிய பேரொலிக்கிடையில் அண்ணு மறியலில் ஈடுபட்டார். கைதானுர்.

அந்த தியாக தீபத்திற்காக சிறைக்கதவுகள் திறந்தன.

அவரும், அவரைச் சார்ந்த முன்னணியினர் பலரும் சிறையிலிருந்தபோது திருச்செங்கோடு நாடாளுமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. அப்போதைய முதலமைச்சராம் காமராசர் ஒரு மாதகாலம் தொகுதியிலேயே தங்கியிருந்து தேர்தல் பணிகளைக் கவனித்தார்.

நாடுமுழுக்கவெகு ஆவலுடன் எதிர்பார்த்த தி. மு. க. காங்கிரஸ் நேரடிப் போட்டியில் நின்ற அந்தத் தொகுதியின் முடிவு சிறையிலிருந்த அண்ணாவின் கழுத்தில் வெற்றிமாலையாக விழுந்தது.

தி. மு. கழகம் நடத்திய அந்த விலைவாசி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறையிலடைக்கப் பட்டிருந்த செயல்வீரர் கோ. சி மணியும் பொற்செழியனும் பிணமாகத் திரும்பித்தரப் பட்டனர்.

தன்னலங்கருதாத் தொண்டர்களைக் கொண்ட இயக்கம் அண்ணாவின் இயக்கம் என்பதால் அதற்கு மென்மேலும் ஆதரவு பெருகியது.

★ ★

சமுதாய நிர்மாணத்தைப் பற்றிய சராசரி அறிவுகூட இல்லாதார்—சந்தர்ப்பவசத்தால் — சாகசம் செய்திறத்தால்—தகுதிமிக்க தலைவர்களைப்போல் வேடந்தரித்து வீதிவலம் வந்து கொண்டிருந்தவர்கள் காலம் கண்விழித்தபோது கதி கலங்கிப் போனதுண்டு. அத்தகைய போலித் தலைமைகளையும் பூமத்தாப்புக் குணங்களையும்...

இனங்கண்டு எடுத்துச் சொல்லி,
நல்லதொரு நாட்டின் மீட்புக்காக,
நல்லதொரு இலட்சியத்தை நாடி,
நல்லதொரு வழியில் இயங்க,
நல்லதொரு இயக்கம் கண்ட,
நனிசிறந்த நாயகர்—அறிவுப் புனல் அண்ணா!

இடத்தைப் பொறுத்து...
காலத்தைப் பொறுத்து...
சூழ்நிலையைப் பொறுத்து...

ஒரு தலைவன்,

பிரச்னைகளின் கருவாகிறான் — பிரச்னைகளின் கருவியாகிறான்;

பிரச்னைகளின் உருவாகிறான் — பிரச்னைகளை உருவாக்குகிறான்;

பிரச்னைகளை அவன் தொடலாம் — தொடாமல் விட்டும் விடலாம்;

பிரச்னைகளின் பயணம் அவன் வழியே தொடரலாம்— தொடரும்;

பிரச்னைகளின் தீர்வு அவன் வழியிலே முடியலாம் — நீடிக்கலாம்.

—ஒரு தலைவனுக்குரிய மேற்குறிப்பிட்ட பண்புகளில்— இலக்கணங்களில், அண்ணாவிடம் எவையெவை குடியிருந்தன, இல்லாமல் போயின என்றெலாம் குறிப்பெடுத்துக் கொண்டிருப்பதைவிட, அவர் ஒரு 'மக்கள் தலைவர்'ஆகத் திகழ்ந்தார் என்ற மறத்தற்கியலா உண்மையை குறித்து வைத்துக் கொள்ளலாம்.

அவர் எண்ணங்களும் எடுத்துக் கொண்ட பிரச்னைகளும் அப்படிப்பட்டவொரு பெருமையை அவருக்கு நல்கியிருந்தன.

கணக்கற்ற பாறைகளைக் கடந்துபோய்க் காணவேண்டிய உச்சிமலைக் காட்சி போலன்றி கணக்கற்ற பாறைகளை கடந்து வந்து பாயும் வற்றாத அருவியின் வண்ணக் காட்சியாக விளங்கினார் அண்ணா!

அவருக்கு அருகே அரும்பாடுபட்டுச் செல்லவேண்டிய அவசியம் ஆருக்கும் நேரவில்லை. ஏனென்றால் அவரே அனைவருக்கும் அருகில் வந்திருந்தார்—அனைவரோடும் அணுக்கமாயிருந்தார்.

தன்னருகே எப்படிப்பட்டவர்களெல்லாம் இருக்க வேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறையைவிட தான் எப்படிப்பட்ட மக்களின் முன்னே நிற்கவேண்டும் என்பதில் அவர் செலுத்திய ஆர்வம் அதிகம்.

★ ★

அவர் நாள்தோறும் சந்தித்தது நாட்டின் சீமான்களை அல்ல; சிற்பிகளை! —நாளைய மறுமலர்ச்சிக்குக் காரணமாகும் இன்றைய உழைப்பின் சின்னங்களை அவர் நித்த நித்தம் சந்தித்தார்.

அந்தச் சந்திப்புக்கள் தங்களின் தறிகெட்ட சாம்ராச்சியத்திற்கு ஆட்டங்கொடுக்குமென்று நம்பியோர் அண்ணாவுக்கு எல்லா வழிகளிலும் தொல்லை கொடுத்துப் பார்த்தனர். அத்தனை

யையும் தாங்கிக்கொண்டு, அகவிலைப் போராட்டத்தில் ஈடு பட்டதன் விளைவாக வேலூர்ச் சிறையிலிருந்த அந்த காலக் கட்டத்தில்தான் இந்தியத்துணைக்கண்ட எல்லையில் குண்டுகள் வெடிக்கவாரம்பித்தன.

அத்துமீறிய சீனர்கள் ஆக்ரமிப்பாளர்களாகத் தொடங் கினர். எல்லைப்புறத்து காவல்நிலையங்கள் பலவும் கைப்பற்றப் பட்டன. பலர் உயிரிழந்தனர்.

புத்தனின் தம்மபதத் தத்துவங்களை அப்படியே ஏற்றுக் கொண்டிருந்த மண் அந்த புனிதப் புத்தன் பிறந்த மண்ணின் மீதே போர்தொடுத்து நின்றது.

செஞ்சீனாவை நிர்மாணம் செய்வதில் தங்களது செவ்விய செயல்திறன் முழுவதையும் பயன்படுத்திய சௌ—என். லாயும் மாவோவும் சிந்தாந்தச் சறுக்கலுக்கு ஆட்பட்டதன் விளைவாக உருவெடுத்ததே அந்தப் போர்.

சீறிவந்த பகையை எதிர்கொள்ள புதுக்கோலங் கொண்டு நின்றது இந்தியா.

24-10-1962.

இரண்டு மாதகாலம் சிறையிலிருந்த அண்ணாவும் பிறரும் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறைவாயிலின் முன்னே அண்ணாவை வரவேற்க பல்லா யிரக் கணக்கானோர் திரண்டு நின்றனர்.

தி. மு. கழகத்தின் தொண்டர்கள் போராட்டத்தில் பட்ட காரணத்தால் வம்புகள் வளர்க்கப்பட்டும்—வழக்கு தொடுக்கப்பட்டும்-சிறையில் அடைக்கப்பட்டும்—ஆட்சிய களால் எவ்வளவோ கொடுமைகளுக்கு இலக்காகியி போதும் நாடு பெரியதொரு அபாயத்தை எதிர் நோக்கி கின்ற தருணத்தில்—அவையத்தனையையும் மறந்து ம மன்னிக்கவும் செய்தார் அண்ணா! அதன் மூலம் அ பெருந்தன்மை மிக்கப் பேராளர் என்பது விளக்கமுறப்ப

சிறையிலிருந்து வெளிப்பட்ட அண்ணா முழங்கினார்

'நெருக்கடி மிக்க ஒரு நேரத்தில் நாட்டிலுள்ள டைய நினைவுகளும் ஒரு முனைப்படுத்தப்பட வேண்(

நமக்குள் ஆயிரம் பேதங்கள் — பிரிவுகள் இ அவையத்தனையும் மறந்து அயல் நாட்டு ஆக்ரமிப் முறியடிப்பதே நம் முன்னுள்ள முதற் கடமை.

அநியாய முறைகளின் மூலம் இங்கே கம்யூனிசத்திற்கு கால்கோள் விழா நடத்த முற்படுவதை நாம் அனுமதிப்பதிற்கில்லை.

நாம் கம்யூனிசத்தை நேசிக்கிறோம். ஆனால் அந்தப் போர்வையிலே இங்கே சர்வாதிகாரத்தின் கொடிகள் வேரூன்றுவதை நாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்களாகிய நாம் இது மாற்றானுக்கு அடிமையாவதை அங்கீகரிப்பதற்கில்லை.

அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்! தி. மு. கழகம் எந்த விதத் தியாகத்தையும் செய்து இந்த நாட்டைக் காக்கும்!'

உலகில் மிகப் பெரியவொரு சனநாயக நாடு சரிந்து போவதை ஒரு சரித்திர நாயகன் சகித்துக் கொள்ள முடியுமா?

அறிவுச் சங்கம் முழங்கியது!

அந்த முழக்கத்தின் வழியே தி. மு. கழகத்தின் அணி திரண்டது.

'சீன ஆக்ரமிப்புக்கு எதிராக இந்திய அரசு மேற்கொள்ளும் எல்லாவித முடிவுகளுக்கும் தி. மு. கழகம் தோள் கொடுக்கும்' என்று மாநிலங்களவையில் அண்ணா ஆற்றிய பேருரை அன்றைய அரசியல் வாதிகள் அனைவராலும் போற்றி வரவேற்கப்பட்டது.

'ஆகாஷ்வாணி' என்ற அறிவிப்பு அகலும் வரை வானொலி நிகழ்ச்சிகளில் கழகத்தவர் பங்கேற்பதில்லை என்ற முடிவைக் கூட காலத்தின் தேவை கருதி ஒதுக்கி வைத்து ஆங்கிலத்திலும் தமிழிலும் அண்ணாவும், கழக முன்னணியினரும் உரையாற்றினர். போர் அபாயம் நீங்கும் வரை தி. மு. கழகம் நாட்டுப் பாதுகாப்புக்குரிய நடவடிக்கைகளைத் தவிர வேறெதிலும் ஈடுபடாது என்ற முடிவினையும் அறிவித்தார் அண்ணா.

கழகத்தின் சார்பில் கண்டன ஊர்வலங்களும், பாதுகாப்பு விளக்கக் கூட்டங்களும் நடத்தப் பெற்றன. பெருமளவிற்கு நிதி திரட்டியும் தங்கமும் தரப்பட்டன. போர் வீரர்களுக்குப் பயன்படக்கூடிய பொருட்களும் வழங்கப்பட்டன. நிதி வழங்க வசதியில்லாத கழகத்தின் தொண்டர்கள் ஏராளமானோர் தாராளமான குருதிக் கொடை தந்தனர்.

இந்திய நாட்டில் எத்தனைப் பிரச்னைகள் இருப்பினும், அது வெளி நாட்டவர்க்குரிய விளையாட்டுத் திடலாக மாறுவதை

அந்த நாட்டு மக்கள் ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்; உரிய காலத்தில் ஒன்றுபட்டு நிற்பார்கள் என்பதை உலகம் கண்டது.

உணர வேண்டிய ஊடுருவல்காரர்களும் உணர்ந்தார்கள்.

ஆக்ரமிப்பு நின்றது. அமைதி நிலவியது.

★ ★

எந்தெந்த வகையிலெல்லாமோ முயன்றும் தென்புலத்தின் திருவிளக்காம் தி. மு. கழகத்தை அழிக்க முடியாமல் அலண்டு போயிருந்த காங்கிரசுக்காரர்கள் புது 'அவதார'மெடுத்தனர்.

எந்தப் போருக்காக தி. மு. கழகம் தன் நினைப்பை-நேரத்தை — நெஞ்சார்ந்த ஒத்துழைப்பை நல்கியதோ அந்தப் போரையே காரணமாகக் கொண்டு, அந்த அமைப்பையே அழித்திட, ஆட்சியாளர்கள் புதிய திட்டமிட்டனர். 'பிரிவினை' என்று பேசவே கூடாது' என்று பேச்சுரிமையையே பறிக்கும் வகையில் சட்டம் தீட்ட முற்பட்டனர்.

12-11-1962-ல் சீன ஆக்ரமிப்புக்கு எதிராக—இந்திய அரசுக்கு ஆதரவாக—மாநிலங்களவையில் உரையாற்றிய அண்ணா அவர்கள் 25-1-1963-ல் 'பிரிவினைப் பிரச்சார தடை மசோதா'வை எதிர்த்து முழக்கமிட்டார்.

எண்ணங்களோடு எண்ணங்களை வைத்து மோத முடியாதவர்கள்—வாதங்களோடு வாதங்களை வைக்க வக்கற்று—வகையற்றுப் போனவர்கள் அதிகாரத்தின் ஆசியோடு பெரும்பான்மையின் துணைக்கொண்டு பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

வல்லூறு தன் வலிமையால் வானம்பாடியின் சிறகொடிப்பது போன்ற அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அந்தச் சட்டத்தின் மூலம் பிரிவினை பேசும் எந்த இயக்கமும் இனி இந்த நாட்டில் இருக்க முடியாது என்பதைவிட, இனி தி. மு. கழகம் இருக்காது என்றெண்ணிய அதன் எதிரிகள் அமோகமாய் மகிழ்ந்து போயினர்;—முன்புறம் நின்று சமாளிக்க முடியாத முடக் கோமாளிகள் முதுகுப்புறம் வந்து சிரித்து நிற்பதே போல்!

பிரிவினைத் தடைச் சட்டத்தின் மூலம் தேச ஒற்றுமை

அந்த நாட்டு மக்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; உரிய காலத்தில் ஒன்றுபட்டு நிற்பார்கள் என்பதை உலகம் கண்டது.

உணர வேண்டிய ஊடுருவல்காரர்களும் உணர்ந்தார்கள்.

ஆக்ரமிப்பு நின்றது. அமைதி நிலவியது.

★ ★

எந்தெந்த வகையிலெல்லாமோ முயன்றும் தென்புலத்தின் திருவிளக்காம் தி. மு. கழகத்தை அழிக்க முடியாமல் அலண்டு போயிருந்த காங்கிரசுக்காரர்கள் புது 'அவதார'மெடுத்தனர்.

எந்தப் போருக்காக தி. மு. கழகம் தன் நினைப்பை-நேரத்தை — நெஞ்சார்ந்த ஒத்துழைப்பை நல்கியதோ அந்தப் போரையே காரணமாகக் கொண்டு, அந்த அமைப்பையே அழித்திட, ஆட்சியாளர்கள் புதிய திட்டமிட்டனர். 'பிரிவினை என்று பேசவே கூடாது' என்று பேச்சுரிமையையே பறிக்கும் வகையில் சட்டம் தீட்ட முற்பட்டனர்.

12-11-1962-ல் சீன ஆக்ரமிப்புக்கு எதிராக—இந்திய அரசுக்கு ஆதரவாக—மாநிலங்களவையில் உரையாற்றிய அண்ணா அவர்கள் 25-1-1963-ல் 'பிரிவினைப் பிரச்சார தடை மசோதா'வை எதிர்த்து முழக்கமிட்டார்.

எண்ணங்களோடு எண்ணங்களை வைத்து மோத முடியாதவர்கள்—வாதங்களோடு வாதங்களை வைக்க வக்கற்று—வகையற்றுப் போனவர்கள் அதிகாரத்தின் ஆசியோடு பெரும்பான்மையின் துணைக்கொண்டு பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

வல்லூறு தன் வலிமையால் வானம்பாடியின் சிறகொடிப்பது போன்ற அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அந்தச் சட்டத்தின் மூலம் பிரிவினை பேசும் எந்த இயக்கமும் இனி இந்த நாட்டில் இருக்க முடியாது என்பதைவிட, இனி தி. மு. கழகம் இருக்காது என்றெண்ணிய அதன் எதிரிகள் அமோகமாய் மகிழ்ந்து போயினர்;—முன்புறம் நின்று சமாளிக்க முடியாத முடக் கோமாளிகள் முதுகுப்புறம் வந்து சிரித்து நிற்பதே போல்!

பிரிவினைத் தடைச் சட்டத்தின் மூலம் தேச ஒற்றுமை

அந்த நேரத்தில் இந்த முடிவு 'திடுதிப்'பென அறிவிக்கப் பட்டதாக பலர் கருதினாலும், உண்மையில் இந்த முடிவினை மேற்கொள்ள அவர் பல இரவுகள் விழித்திருந்து சிந்தித்து, பல பகல்கள் பலருடன் விவாதித்து எடுக்கப்பட்டதேயாகும்.

எனவேதான் அந்த முடிவு இயக்கத்தவர் எல்லோராலும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

"தி. மு. கழகம் பிரிவினை கேட்பதைக் கை விடுகிறது, பிரிவினைக் கேட்டதற்கான அடிப்படைக் காரணங்களை அல்ல"

அண்ணாவின் ஆற்றல் ஒரு சில சொற்களிலேயே தி. மு. கழகத்தின் தத்துவ விளக்கத்தைத் தந்து விட்டது.

நாட்டுப் பிரிவினையை நாடியபோது அதனை 'வீரம்' என்று விளம்பிட முன் வராதவர்கள் அதனை வேண்டாமென்று விட்ட போது 'கோழைத்தனம்' என்று கொக்கரிக்காமல் இருக்க முடியவில்லை.

—இந்தக் 'கோழிக'ளின் கூவலைக் கேட்டா பகலவன் பவனிவருகின்றான்?

அண்ணாவின் அற்புத முடிவால் தி. மு. க. அழிக்கப்பட முடியாத ஒரு சக்தியாகவே நிலைத்துவிடுகிறதே என்ற ஆத்திரம் பலரைப் பலவாறு பேச வைத்தது; பதறவைத்தது.

பதட்டமின்றி தன் பாதையைத் தொடர்ந்தார் அண்ணா.

ஒரு முதிர்ந்த அறிவின் முத்தான முடிவைப் புரிந்து கொண்ட முன்னேற்றக் கழகத்தின் தோழர்கள் கட்டுப்பாடு குன்றாமல் கடமையாற்ற முனைந்தனர்.

★ ★

அண்ணாவின் அறிவொளிப் பாய்ச்சலுக்கும்—பாங்குக்கும் —அடையாளமாய்த் திகழ்ந்தது அறிவியக்கமாம் கழகம். அதனை ஆத்திரத்தின்பாற்பட்டும் அதிவேகத்திற்கு ஆட்பட்டும் அழித்திட அதிகாரத்தின் சாணைக்கல்லில் சட்டம் எனும் கட்டாரியைத் தீட்டினர் காங்கிரசார். அவர்களின் திட்டமும் தீவிரமும் விழலுக்கிறைத்த நீரானது; —நீர்த்து வெடித்து வினையானது, விதையற்று வீணான நிலமானது.

★ ★

தன்னலங் கருதா பொதுநலக் காவலராம் அண்ணாவுக்கு பிள்ளைச்செல்வம் இல்லாமல் போனது கூட அவரது அறிவும் திறனும் நேரமும் நினைப்பும் முழுக்க முழுக்க நாட்டிற்கே பயன்பட வேண்டுமென்று இயற்கையே விரும்பியதன் வினைப் பாடோ என்று வியக்கவே வேண்டியிருக்கிறது!

அவருக்கு வளர்ப்புமகன்கள் இருந்தனர். அவர்கள் வழிப் பேரனும் பேத்தியும் அவரின் செல்லத்திற்குரிய செல்வங் களாக இலங்கினர்.

ஆயினும் அனைத்துக்கும் மேலாக அருந்தமிழ்நாடே அவரது அன்பு வீடாக இருந்தது. அந்தத் தாய்த் திருநாடே அவரது ஆசைச் சொத்தாகத் திகழ்ந்தது.

அவரால் நெஞ்சாரயோசிக்கப்பட்டது தமிழரின் எழுச்சி!

அவரால் நேர்த்தியோடு நேசிக்கப்பட்டது தமிழின் மறு மலர்ச்சி!

—அவற்றுக்காக,

அவசியங்கருதி,

சில பிரச்னைகளில் நாணலைப்போல் வளைந்து நிமிர்ந்திருக் கிருரேயன்றி நடுங்கிப் போனதில்லை.

சில நேரங்களில்—சூழ்நிலையைக் கருதி தொட்டாற் சுருங்கியைப்போல் குவிந்து விரிந்திருக்கிருரேயன்றி துவண்டு போனதில்லை.

அவரது அரசியல் நுட்பத்திறன், தன்னைச் சரணடைய வைக்க நினைத்த சட்டத்தைச் சாரமற்றுப் போகச் செய்தது.

தங்களைச் சரணுகதியடைய வேண்டுமென்று எதிர்பார்த் தவர்களால் எடுக்கப்பட்ட திட்டங்களை அவர் தம்மிடம் சரணு கதியுடைய வைத்தார்.

கிளிவண்ணக் கல்லைக்கண்டு—அந்த

கல்லிலே நார் உரித்து—அந்த

நாரிலே கயிறு திரித்து—அந்த

கயிற்றிலே ஊஞ்சல் பின்னி—அந்த

ஊஞ்சலிலே உல்லாசமாய் ஆடுவதாய்

கற்பனைத் தேரிலேறி களிப்புடன் கனவுகாணும் மனப் பாங்கினர்—டில்லித் திருக்குமாரர்கள்—விரித்த வலையில் விழா மல் விலகிய கழகத்தை நோக்கி மற்றொரு அறைகூவல் விழுந் தது. 1963 ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் 13 ஆம் நாள் நாடாளு மன்றத்தில் ஆட்சிமொழி குறித்து புதிய மசோதாவொன்று வைக்கப்பட்டது.

அதே நாடாளுமன்றத்தில் 4-8-1959 அன்று "இந்தி பேசாத மக்கள் விரும்புகின்றவரை ஆங்கிலம் நீடிக்கும்" என்று பிரதமர் நேரு அவர்கள் வழங்கிய உறுதிமொழிக்கு மாறாக, "1965 சனவரி 26 முதல் இந்தி மட்டுமே ஆட்சி மொழியாகும். அதற்குத் துணையாக ஆங்கிலத்தைப் பயன் படுத்தலாம், பயன்படுத்தாமலும் இருக்கலாம்" என்பது அந்த மசோதாவின் உள்ளடக்கம்.

அந்த உள்ளடக்கத்துள் ஊடுருவிக்கிடந்த உள்நோக்கத் தைப் புரிந்து கொண்ட கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் கள் கண்டனக்குரல் எழுப்பினார்கள்.

உத்திரப்பிரதேசத்தை சார்ந்த ஒரு இலால்பகதூர் சாஸ் திரியார் உள்துறை அமைச்சராக இருந்து கொண்டு, ஒட்டு மொத்தமாக எல்லா மாநில மக்களின் மொழிகளையும் ஒடுக்கும் விதமாக கொண்டுவந்ததுஅந்தத் தீர்மானம்.

வஞ்சகத்தை நெஞ்சில் வைத்து, வார்த்தைகளில் தேனைத் தடவி, குரலில் கொஞ்சுதலைக் காட்டி கொண்டு வரப்பட்ட அந்தத் தீர்மானம் 'ஏக இந்தியா' என்பதன் பேரால் இந்தி பேசாத மக்களை இரண்டாந்தரக் குடிகளாக்கும் தந்திரமே யாகும்.

—புரிந்து கொண்டவர்கள் எதிர்த்தனர். மானமும் மரியா தையும் சூடும் சொரணையுமுள்ளோர் அந்த மசோதாவை ஒரு போதும் ஒப்புக் கொள்ள முடியாதென மறுத்தனர்.

அண்ணா அந்தத் தீர்மானத்திற்கெதிராக பல கருத்துக் களை வைத்தார். அதனால் ஏற்படக் கூடிய எதிர்கால விளைவு களை எடுத்துரைத்து —ஆட்சியாளர்களை இடித்துரைத்து—எச் சரித்து—அறிவுரைகளைத் தந்தார்.

அனைத்தும் செவிடன் காது சங்காயிற்று.

மூர்க்கனும் முதலையும் மட்டுமல்ல, நாங்களும் பிடித்ததை விட மாட்டோம் என்பது போல்; இருக்கவே இருக்கிறது இந்தி யாதிக்கப் பெரும்பான்மை எனும் போக்கால் அந்தத் தீர்மா னத்தை எதிர்ப்புக்கிடையிலேயே நிறைவேற்றினார்கள்.

நல்லமாட்டிற்கு ஒரு சூடு. சண்டி மாட்டிற்கு?

சரியான பாடம் தந்தால் தானே சரிப்பட்டுவரும்!

அந்தப் பொறுப்பு தமிழகத்தின் தலையில் விழுந்தது.

தலைமைக் கழகத்தின் செயற்குழுவும் அதனைத் தொடர்ந்து பொதுக் குழுவும் கூட்டப்பட்டன.

இந்தித் திணிப்பை எதிர்த்தும், தமிழையும் நடுவண் அரசின் ஆட்சி மொழியாக்க வற்புறுத்தியும், மற்ற மாநிலங்களின் மொழிகளும் மத்ய ஆட்சி மொழிகளாக ஆகும் வரை ஆங்கிலத்தை நீடிக்கச் செய்ய வற்புறுத்தியும் தி. மு. கழகம் நேரடிப்போராட்டத்தில் ஈடுபடுவதென 1963 சூன் திங்கள் 7, 8, 9, 10 ஆகிய நாட்களில் கலந்துரையாடிய கழகமறவர்கள் முடிவெடுத்தனர்.

களங்காண கலைஞர் கருணாநிதி தலைமையில் அப்போதைய அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் மற்றும் மாநில அமைப்பாளர்கள், மாவட்டச் செயலாளர்களைக் கொண்ட போராட்டக் குழுவும் அமைக்கப்பட அண்ணா வழிவகுத்தார்.

மிரட்டல் தொடர்ந்தது. பள்ளிப் பருவத்து பிள்ளைகளிடம் பயங்காட்டுவதுபோல், போராட்டம் நடத்தினால் பாதுகாப்புச் சட்டம் பாயுமென பயமுறுத்தலைச் செய்தார் இலால்பகதூர்.

—பாவம்! இடம் மாறி, தடம்மாறி இதனைச் செய்கிறோம் என்பது அவருக்குப் புரிந்திருக்க நியாயமில்லைதான்!

புரிய வைத்தார், பூனைகளென்று நினைத்தவர்க்கு புலிக் கூட்டத்தலைவன் அண்ணா!

நெருப்பைத் தொடுவானேன், பின்னர் கையைச் சுட்டதென்று சொல்வானேன்?—முன்னதாகவே எச்சரிக்கிறோம்; ஏற்பதும் ஏற்காததும் உங்கள் விருப்பம்.

நாங்கள் மதிக்கக்கூடியதை மதிப்பவர்கள்; மறுக்க வேண்டியதை மறுப்பவர்கள்.

மத்ய அரசு ஒரு மகாராஜாவுமல்ல; மாநிலங்கள் அதன் ஏவலாளிகளுமல்லர்.

எதேச்சதிகார சீனாவை எதிர்ப்பதில் முன்னின்றது போல் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாதிக்கத்தையும் எதிர்த்தே தீரும்.

எதுவரினும் சரியே!

ஆட்சி மொழித் திருத்த அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவு கொளுத்தப்படும்!

சட்டம் மக்களை எட்டியுதைக்கும் என்றால் அதனை முத்த மிட்டுக் கொண்டிருப்பது மூளையுள்ளவர்கள் செயல் அல்ல.

மொழி காக்கும் இந்தப் போராட்டம் எவ்வளவு நாள் நீடிக்கும்?

இந்தித் திணிப்பு—நீடிக்கும் வரையில்—நீங்கும் வரை யில்—நீடிக்கும்.

செந்தமிழர் உடலில் உயிரணுக்கள் உள்ளவரை நீடிக்கும்.

—கிளர்ந்தெழுந்தார் அண்ணா! கீழ்த்திசை வானின் கதி ரவனைப் போல்!!

13-10-1963-ல் சென்னையில் நடத்திய இந்தியெதிர்ப்பு மாநாட்டில் அறிவித்த போராட்டத் திட்டத்தின்படி செய லாற்ற சிலிர்த்தெழுந்தனர் கழக வீரர்கள்.

தமிழகம் ஒரு வீர வரலாற்றைப் பதித்துக் கொள்ள தன் விழியை விரித்தது; ஒரு பொன்னேட்டைப் பெருமிதத்தோடு பிரித்தது.

★ ★

தொண்டனைத் தூண்டி களத்தில் இறக்கிவிட்டு தொலை வில் நின்று வேடிக்கைப் பார்ப்பது தண்டத் தலைமை தொண் டனுக்கும் முன்னால் தோளுயர்த்தி தன்னையே பணயமாக முன் வைத்து போராட்டத்தில் ஈடுபடுவதே தங்கத் தலைமை.

தகுதிமிக்க தலைமையாளராம் அண்ணா, அநீதிக்கு நடை பாவாடை விரிக்கும் அரசியல் சட்டத்தின் 17 வது பிரிவை எரிப்பதை தானே தொடங்கி வைக்க நவம்பர் 17 ஆம் நாள் காஞ்சிபுரத்திலிருந்து சென்னை நோக்கிப் புறப்பட்டார். வரும் வழியிலேயே உடன்வந்த டி. எம். பார்த்தசாரதி, டி. கே. பொன்னுவேலு, கே. பி. சுந்தரம், வெங்கா உட்பட கைது செய்யப்பட்டு சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

—இப்படி செய்யப் பட்டதன் மூலம் அன்று சட்ட எரிப்பு தடுக்கப் பட்டது உண்மை.

—இப்படிச் செய்ததன் மூலம் மக்களின் மனக்கொதிப்பு முடுக்கிவிடப்பட்டதும் உண்மை.

அண்ணாவை கைது செய்துவிட்டு அதோடு பொதுக் கூட் டங்கள் நடத்தக்கூடாது என்றும் தடைவிதிக்கப்பட்டது.

தடை உடைக்கப்பட்டது தன்னலமற்றவர்களால்!

தன்னிலையிழந்த ஆட்சி மாவட்டந்தோறும் கழகத்தவர் களைக் கைதுசெய்து ஆயிரக்கணக்கில் சிறையிலடைத்தது.

குற்றவாளிக் கூண்டிலே அண்ணா!

குறுக்கு விசாரணை செய்ய அரசாங்க வக்கீல்.

தான்செய்தது சட்டப்படி எப்படியாயினும் தமிழர்தம் நலனை காப்பதின்படி சரியே என்று வாதாடினார் அண்ணா!

சிறைச்சாலையிலிருந்தபடியே தன்னையொரு வழக்கறிஞரா கவும் தயார்ப்படுத்திக் கொண்டு விட்டாரோ என்று வழக்கறி ஞர்களே வியக்கும் வகையில் அவரது வாதத்திறன் அமைந் திருந்தது.

வக்கும் வகையுமற்ற ஆட்சித்திறனுக்கு வகையான பாடம் தருவதான வாக்கு மூலமாகயிருந்தது.

செவியாரக் கேட்டும் நீதிமன்றம் செறிவான தீர்ப்பைத் தர முடியவில்லை,

அண்ணாவுக்கும் அவர் உடன் கைதானவர்களுக்கும் ஆறு திங்கள் கடுங்காவல் என கொடுந்தீர்ப்பு வழங்கப்பட்டது.

தீங்குதரும் சட்டப்பிரிவை தீக்கிரையாக்குவதன் மூலம் தங்களதுமறுப்பைத் தெரிவிக்கவும், அரசு அலுவலகங்கள்-இந் திப் பிரச்சார அமைப்புக்கள் முன் மறியல் செய்வதெனவும் எடுக்கப்பட்ட முடிவுக்கிணங்க கழக முன்னணியினர் அணிய ணியாகப் போராட்டத்திலீடுபட்டு மாதக் கணக்கில்—ஆண்டுக் கணக்கில் தண்டனைபெற்று சிறைச்சாலை ஏகினர்.

இந்தியெதிர்ப்புக் கனல் கொழுந்து விட்டெரிய அந்த ஆண்டைய கழகத்தின் நடவடிக்கைகள் பெருங்காற்றாயின.

அந்த நடவடிக்கைகளின் பார்வையாளர்களாய் மட்டுமேயி ருந்த பலருக்கும் கூட தாங்களே அதில் பங்கேற்க வேண்டும் என்ற எண்ணத்தையும் துடிப்பையும் அவை தோற்றுவித்தன.

அண்ணாவின் எதிர்பார்ப்பும் அதுதானே!

கழகத்தவர்களிடமிருந்த மொழிப்போராட்ட உணர்வுகள் இயக்கத்தின் இடையறாத பிரச்சாரத்தினால் பொதுமக்களிடமும் ஊடுருவின.

இந்தி எதிர்ப்பில் எவரோ சிலர் ஈடுபடுவர்; இரண்டொரு நாட்களில், மிஞ்சிப்போனால் இரண்டொரு வாரங்களில் எல் லாமே அடங்கி முடிந்துவிடுமென்று எதிர்பார்த்த ஆட்சியாளர் கள் ஏமாற்றத்திற்காளானார்கள்.

மூங்கில் காடாக எதிர்ப்புணர்வு எரிந்து முடிந்து விடு மென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதுவோ தழைத்து வளரும் தருவாக காட்சி தந்தது.

வடிந்து முடிந்துவிடும் எதிர்ப்பு வெள்ளம் என்று எண் ணப்பட்டது. ஆனால் அதுவோ வற்றாத ஊற்றாகப் பீறிட்டு திகைப்பைத் தந்தது.

இந்தியெதிர்ப்பு என்பது 'எவரோ...' 'ஏதோ தாதேக்கள்' என்னும் படியான ஏழெட்டுப்பேர்களின் கோரிக்கையில் உருவானது அல்ல அது கொள்கைரீதியில்—ஒரு இனத்தின் இதய எரிவில் மூண்ட தீ!

அது அணைக்கப்பட வேண்டுமானால் முதலில் அடைக்கப் பட வேண்டியது ஆதிக்க சக்திகளின் ஆசை மண்டபங்கள்!

புற்றுமிருக்கும் அதில் பாம்புமிருக்குமென்றால், தடியுமிருக்கும் அதைத் தாங்கிய கரமுமிருக்குமென்பதில் தவறென்ன?

அண்ணா அவர்கள் 1963 நவம்பரில் தொடங்கிய அந்தப் போராட்டம் நாடு முழுக்க மாதந்தோறும் நடந்து 1964 ஆம் ஆண்டு அக்டோபர் வரையிலும் தொடர்ந்தது.

அந்த 1964 ஆம் ஆண்டு சனவரி திங்கள்—24 ஆம் நாளன்று தான் ஆட்சி மொழிச்சட்டம் நிறைவேற்றப்பட்ட அலங்கோலத்தை எதிர்த்து எலும்புகள் வெடிக்கவும் இளமையுடல் துடிக்கவும் தீராதி தீரன் சின்னச்சாமி தீக்குளியலில் மூழ்கினான்.—கருகிச் சாம்பலானான்.

இயக்கத்தின் மறவர்கள் எவ்வளவோ பேர் போராடியும், சிறையில் அடைபட்டும், எண்ணிறந்த கொடுமைகளுக்கு ஆளாகியும் கூட காங்கிரசார் கண்டும் காணாதவராய் களிமண்ணைப்போல் 'திம்' மென்று இருந்தனர்.

ஊமைகளின் மௌனத்திற்காக ஏழிசைவல்ல எழுச்சிப் பாடகன் ஏதுமறியாதவனைப் போல் இருந்துவிடவா முடியும்?

1965 சனவரி 5 ஆம் நாள்.

ஆணையிட்டார் அண்ணா!

புரட்சிகீதம் முழங்கியது!!

'வரும் சனவரி 26 குடியரசுநாள். எல்லோருக்கும் பொதுவான குடியரசு நாளில் எவரோ சிலருக்கு சொந்தமான மொழியை எல்லோருக்கும் பொதுமொழியாக்கும் சட்டத்தை ஏற்பதற்கில்லை. கோலாகலமாய்க் குடியேறிக் கொலுவிருக்கப் பார்க்கும் இந்திக்கு அது திருநாள் என்றால் அந்தநாள் நம்முகத்தில் கரிபூசும் துக்கநாளே! ஆகவே அன்றைய தினம் வீடெங்கும் வீதியெங்கும் நகரெங்கும் நாடெங்கும் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு நம் கண்டனத்தைக் காட்டுவோம்' — என்றார் அண்ணா!

'கறுப்புக்கொடி பறப்பதை அனுமதிக்கமாட்டோம்' என்று கங்கணம் கட்டிநின்றனர் காங்கிரசார். அவர்களின் முதுகில் தட்டிக்கொடுப்பதுபோல் 'கறுப்புக் கொடி காட்டப்படுவதை அரசாங்கம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது' என்று கழகத்தவரை நோக்கி எச்சரிக்கையும் விடுத்தார் அன்றைய முதல்வர் பக்தவத்சலம்.

வேதனைத் தீயில் வீழ்த்தப்படுவோமாயினும் சரி; வெற்றி மாலையின் விலை உயிரென்றாலும் சரியே! எங்கள் அண்ணனின் ஆணையை நிறைவேற்றியே தீருவோமென்று ஆர்ப்பரித்தெழுந்தது அரிமாக்களின் திருச்சபை!

அந்த நாளும் வந்தது.

அதிகார பீடாதிபதிகள் எட்டடிப் பாய்ந்தால் அதன் ஏகப் பிரதிநிதிகள் பதினாறடி மாய்வார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகவிளங்கிய-இந்தியின் வரவுக்கு வெண்சாமரம் வீசிய-முதலமைச்சர் கட்டவிழ்த்து விட்டார் அடக்கு முறையை!

அண்ணாவுடன் கலைஞர், பேராசிரியர், நாவலர் போன்றோரும் ஈராயிரத்திற்கு மேற்பட்ட கழகத்தவர்களும் முன்னதாகவே கைது செய்யப்பட்டனர்.

காவலர்தம் கெடுபிடி அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தது.

அத்தனையையும் பொருட்படுத்தாத கழக அடலேறுகள் தத்தமது வீடுகளில் கறுப்புக் கொடியைக் கட்டுவித்தார்கள். கறுப்புச் சின்னத்தை அணிந்தார்கள்.

இதனைப் பொறுக்கமுடியாத காலிகள் பலர் கழகத் தோழர்களை தாக்கினார்கள்; கறுப்புக் கொடிகளைக் கிழித்தெறிந்தார்கள்; மாணவர்களின் மண்டைகளை உடைத்தார்கள்.

—இத்தனையும்காவலர் துறையின் கண்முன்பாகவே நடைபெற்றன.

—இருந்தாலல்லவா இதனையெல்லாம் பார்க்க வேண்டுமென்று எண்ணியோ என்னவோ...

—பிறரை வஞ்சித்து—வதைத்து—வளர்ந்த இயக்கத்தவர்கள் அல்லர்; ஏற்றுக் கொண்ட இலட்சியத்திற்காக எங்களையே வருத்துக் கொள்ளக் கூடியவர்கள் என்பதை வலியுறுத்தவோ என்னவோ...

—எங்கள் உரிமைகளின் காப்பிற்காக எங்கள் இன்னுயிரையே தானமாகத் தருவோமென்று—வாய்வழியே அல்ல—செயல் வழியே நிருபித்திடவோ என்னவோ...

அந்த கருப்பு நாளாம் சனவரித் திங்கள் 26 அன்று அதிகாலையிலேயே சென்னை மாநகரில் சிவலிங்கம் என்ற வீரத்திருமகன் வெந்தணலில் வீழ்ந்து முடிந்தான்.

இரண்டொரு நொடியினில் அணைந்துவிடும் எரிகின்ற தீக்குச்சியைத் தொடுவதற்கும் தயங்குகின்ற மனித வர்க்கத்திலே தான் இதயத்தோடு இயைந்து போய்விட்ட ஒரு கொள்கைக்காக அந்த சிவலிங்கத்தைத் தொடர்ந்து அரங்கநாதன், அய்யம் பாளையம் வீரப்பன், சத்யமங்கலம் முத்து, சாரங்க பாணி என்ற மாணவ மணிவிளக்கு ஆகியோர் தமக்குத் தாமே

தீ வைத்துக் கொண்டு தியாக தீபங்களாயினர். அந்த வீர மற வர்களுடன் விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து ஆகி யோரும் தம் பெயரை இணைத்துக் கொண்டனர்.

இந்திக் கெதிராக எங்கு பார்த்தாலும் ஊர்வலம், கண்ட னம்; இரயில் நிறுத்தம் அஞ்சல் நிலையங்களின் முன் மறியல் எனத் தொடர்ந்தன.

அதிகாரிகளின் கண்மூடித்தனமான தாக்குதல் தர்பாரின் எதிரொலியாக ஆத்திரம் கொண்ட பொதுமக்களால் இரண்டு காவல்துறை அதிகாரிகளும் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவ மும் நடைபெற்றது.

விழிபோன பின்னே காட்சியா? மொழி போன பின் கல் வியா?—என் தெளிவுடைய எவரும் திரும்பிப் பாராத நிலையில் கல்விச் சாலைகள் அனைத்தும் மூடப்பட்டன.

காவல் துறையினரால் கட்டுப் படுத்த முடியாதென்ற கருத் தில் ஆட்சி இராணுவத்தை சில ஊர்களில் ஏவி விட்டது. அந்த இராணுவமோ எதிரிகளின் நாட்டில் நுழைந்தது போல் யந்திரத் துப்பாக்கிகளை சுழற்றியபடி சுற்றி வந்தது.

நகரம், பேரூர், சிற்றூர், பட்டி தொட்டியெங்கும் பயங்கர மான பதட்டமான நிலை நிலவியது.

சிட்டுக் குருவிகளைப் போல் நூற்றுக் கணக்கானவர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

தங்களது நாட்டில் தங்களது மொழிக்காக தங்களது உயி ரையே தரவேண்டிய விபரீதமான—வேதனையான—நிகழ்ச்சி நடந்தது.

நாடு முழுவதும் இரத்தக் களறியானது.

அடிமைப் பட்டிருந்த இந்தியாவில் ஜெனரல்—ஓ. டயர் நடத்திய படுகொலையைப் போல் 'சுதந்திர இந்தியா'வில் மற்றுமொரு கோரக் கொலைக் கூத்தாட்டம் நடந்தது.

விவசாயிகள் பிரச்னையா?-அதை விவசாயிகள்தான் தீர்த் துக் கொள்ள வேண்டும்.

தொழிலாளர்கள் தொடர்பான விவகாரங்களா?-அவற்றை தொழிற் சங்கங்கள் தீர்த்து வைக்க வேண்டும்.

விலையுயர்வுக் கண்டனமா?—விபரமறிந்த பொது மக்கள் போர்க் கொடியுயர்த்தலாம்.

மொழிப் பிரச்னை?

பாதிக்கப் படுகின்ற சமுதாயம் முழுவதும் — குறிப்பாக வருங்கால சந்ததிகளாம் மாணவர்கள் — தீர்த்துக் கொள்ள வேண்டிய—தெளிவு பெற வேண்டிய பிரச்னை—என்ற எண் ணத்தில் அந்தப் போராட்டத்தில் மாணவர்கள் முன்னின்

னர். அதன் விளைவாக அண்ணா எதிர் பார்த்தது மட்டுமல்ல; எதிர் பாராத விபரீதங்களும் விளைந்து விட்டன. மனம் வெதும்பினார் அண்ணா!

எதற்கும் துணிந்தவர்கள் ஈடுபட்டிருந்த அந்தப் போராட்டம் கட்டு மீறியது.

கவனத்தில் கொண்ட அண்ணா கல்லும் கனியும் வண்ணம்—கண்ணீர் மல்க அறிக்கையொன்றின் மூலம் போராட்டத்தை நிறுத்திட வேண்டுகோள் விடுத்தார்.

அண்ணனின் வேண்டுகோளுக்கு சம்பந்தப் பட்டவர்கள் செவி கொடுத்தனர். பொறுமையுற்றனர். அமைதி நிலவத் தொடங்கியது.

போராட்டத்திற்குப் புதிய வரவுகளாம் மாணவர்கள் பொறுமையின் வார்ப்புகளாய் மாறினார்கள்.

ஆட்சிக் கெதிரான ஒரு அறை கூவலாய் அமைந்து விட்ட அந்தப் போராட்டத்தை தங்களது மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய பிரச்னையாக்கிக் கொண்டவர்கள் பாதுகாப்புச் சட்டத்தைப் பாய விட்டார்கள்.

வேண்டாதவர்களை விசாரணையின்றி சிறையில் தள்ள ஏதுவான அந்தப் பாதுகாப்புச் சட்டத்தின் துணைக் கொண்டு முதன் முதலில் கைது செய்யப்பட்ட கலைஞரை பாளையங்கோட்டைக்கு கொண்டு சென்று சிறையிலடைத்தனர். அவரைத் தொடர்ந்து மேலும் பலப்பலர் கைது செய்யப்பட்டனர்.

கழகத்தவர்களை மட்டுமல்லாமல் கழக ஆதரவு ஏடுகளாம் முரசொலி, மாலைமணி ஆகியனவற்றின் மீது மட்டுமல்லாமல், போராட்ட செய்திகளையும் படங்களையும் வெளியிட்ட பிற ஏடுகளின் மீதும் குற்றச்சாட்டுகள் தொடர்ந்தன.

அளவற்று ஆட்டம் போட்ட ஆட்சியை மாற்றியே தீர வேண்டுமென்று முடிவெடுத்தார் அண்ணா.

1962-ஆம் ஆண்டில் 58 இலட்சம் வாக்குகளை மட்டுமே பெற்றிருந்த காங்கரசு ஆளும் கட்சியாக அமரவும் காங்கிரசை எதிர்த்து 73 இலட்சம் வாக்குகள் பதிவாகியிருந்தும் பயனற்றுப் போனதையும் கவனத்தில் கொண்டார். கழகத்தை எதிர்ப்பதில் தீவிரம் காட்டிய கம்யூனிசுட்டுக் கட்சியினரையும், அந்தக் கம்யூனிசுட்டுக் கட்சியினரோடு முற்றிலும் மாறுபாடு கொண்டிருந்த இராசாசி அவர்களின் சுதந்திராக் கட்சியினையும்கூட ஓரணியில் கொண்டு வந்து நிறுத்தினார்.

தமிழகத்தில் பெயரளவிலோ பெருமளவிலோ ஆதரவைக் கொண்டிருந்த மற்ற காங்கிரசல்லாத கட்சியினரையும் அழைத்துப் பேசி ஒரு கூட்டணியினை உருவாக்கிய சாதனையைப் புரிந்தார். பல்வேறு முனை எதிர்ப்புச் சக்திகள் ஒரு முனைப் படுத்தப் பட்டது.

அண்ணாவின் சாதுர்யத்தால் சமைந்த அந்த கூட்டணியின் தலைவர்கள் அத்தனை பேரும் பங்கேற்க, அண்ணாவின் தலைமையில் 29-12-1966 முதல் நான்கு நாட்கள் சீரும் சிறப்புமுற மிகப் பெரும் மாநாடொன்று நடத்தப் பெற்றது.

வங்கக் கடலுக்குப் போட்டியாக உணர்ச்சிப் பேரலைகளை எழுப்பியவாறு மக்கள் கடல் திரண்டிருந்த அந்த விருகம்பாக்கம் மாநாடு வியக்கத்தக்கவொரு வரலாற்றுத் திருப்பத்திற்கு வலிகோலியது.

வேட்டுகளால் — வேண்டாத முறைகளால்—வெறியாட்டமாடிய ஆட்சி பீடத்திற்கு வாக்குகளால் — வலிவார்ந்த சனநாயக முறையால்—பாடம் புகட்ட மக்கள் ஒருமித்து நின்றனர்.

மாநாட்டில் தலைமையுரையாற்றிய அண்ணா அவர்கள் கூட்டணியின் வேட்பாளர்களை அறிவித்த போது எழுந்த ஆரவாரமும் வரவேற்பும் துருப்பிடித்துப் போன ஆட்சியைத் தூக்கியெறிய மக்கள் எந்தளவில் துடித்து நிற்கிறார்கள் என்பதை வெளிப்படையாக்கியது.

வந்தது தேர்தல்.

விடிந்தது; தமிழகத்தில் இருண்ட காலம் முடிந்தது.

'உதயசூரியன்' தன் கதிர்களை விரித்தான்.

62-ஆம் ஆண்டு தேர்தலில் 139 இடங்களில் வெற்றி பெற்று கோட்டையில் குடியேறிய காங்கிரசு அந்த 67-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 90 இடங்களைக் கோட்டை விட்டு வெறும் 49 இடங்களை மட்டுமே தக்க வைத்துக் கொண்டது. 51 இடங்களை மட்டுமே பெற்றிருந்த கழகம் 138 இடங்களைக் கைப்பற்றி வெற்றி முரசு கொட்டியது.

"I assure this house; that If you do not bring in legal Repressions we are the next ruling party In Madras"

—இந்த மன்றத்தின் முன் நான் உறுதி கூறுகிறேன். சட்டத்தின் துணையோடு எங்களை நீங்கள் அழுத்தி அடக்காமலிருந்தால் தமிழகத்தின் அடுத்த ஆளுங்கட்சி நாங்கள் தான்"

1963-ல் அண்ணா நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை 67-ல் நடைமுறையாகியது. அடக்கு முறைகளையும் தாங்கி தான் கண்ட இயக்கத்தை மக்களின் அணைப்பில் வளர்த்து—அவர் தம் ஆதரவில் ஆட்சியைக் கைப்பற்றச் செய்தார்.

வெற்றி பெற்றும் அண்ணா வீராப்பு பேசிடவில்லை. 'வெங்கலம்தான் ஒலியெழுப்பும் விலை மதிப்புடைய பொன்னல்ல' என்பதற்கு ஏற்றதொரு எடுத்துக் காட்டாக எளியர் அண்ணா இணையற்றவராய் உயர்ந்து நின்றார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினரான அண்ணாவை தமிழக முதல்வர் பொறுப்பை ஏற்க வற்புறுத்தினார்கள். ஆளுநர் ஆட்சிப் பொறுப்பை ஏற்க அண்ணாவை அழைத்தார்.

★ ★

அண்ணா திருச்சியை நோக்கிப் பயணமானார். அவருடன் காரில் கலைஞர் கருணாநிதி, அன்பில் தர்மலிங்கம் ஆகியோரும் சென்றனர்.

ஏறத்தாழ பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த பின்னர்—தங்கள் மீது எவ்வளவோ தாக்குதல்களைத் தொடுத்திருந்த போதும்; அப்படித் தொடுத்த அவரே தங்கள் கொள்கை கோட்பாடுகளின் மூலவர் என்பதை எள்முனையளவும் மறக்காமல்; தாக்கிய அவரே தங்களைத் தாங்கக் கூடியவர், தி. மு. கழகத்தின் வெற்றி திராவிட இனத்தின் வெற்றி—இந்த வெற்றியை தந்தை பெரியாருக்குக் காணிக்கையாக்குவோம் என்ற கருத்தில் அண்ணா, பெரியாரது திருச்சி இல்லத்திற்குச் சென்றார்.

அளவற்று—தங்கு தடையின்றி எதிர்ப்புக்களைக் காட்டியும் அன்புடன் தன்னிடமே நாடி வந்திருக்கும் அந்த நல்லோனைக் கண்டதும், என்றும்—எதற்கும் நாணமுறாத பெரியார், நாணமுற்றார். தடியூன்றித் தள்ளாடும் வயதிலும் தள்ளாடாத கொள்கைகளுக்குரிய தந்தை பெரியார்—ஆயிரக்கணக்கான மேடைகளில் இலட்சக்கணக்கான சொற்களை வாரியிறைத்த பெரியார்—நா தழு தழுக்க, வார்த்தைகள் வெளிவராமல், கண்ணீர் கண்களைத் திரையிட, உவகை உள்ளத்தில் ஊஞ்சலாட எதிர்கொண்டு வரவேற்றார்.

இருபெரும் நதிகள் இணைந்தது போல் இருபெரும் நன்மைகள் இழைந்தன.

இருபெரும் நன்மைகள் இழைந்தது போல் இருபெரும் சக்திகள் ஒன்றாயின.

இருபெரும் சக்திகள் ஒன்றானது போல் இருபெரும் உறவுகள் பின்னின.

★ ★

வாக்குச் சீட்டில் முத்திரையிட்டதன் மூலம் கழகத்திற்கு ஆட்சிப் பொறுப்பை வழங்கிய பெருமக்களுக்கு வணக்கமுடன் கூடிய நன்றியைக் கூறி, சித்திரத் திருநாட்டின் செந்தமிழ்க் குடிமகன் அண்ணு ஆட்சிப் பொறுப்பை அடக்கத்துடன் ஏற்று செயின்ட் ஜார்ஜ் கோட்டையினுள் நுழைந்தார்.

வாக்களித்த பெருமக்கள் வளமான வாழ்வு பெற வழிவகை யறிந்த பல தம்பியருள் எண் மரை தன் அமைச்சரவையில் இணைத்துக் கொண்டார்.

செறிவான திட்டங்கள்—செம்மையான முடிவுகள்.-செயல் வடிவம் பெறத் தொடங்கின!

தி. மு. க. எதிர்க்கட்சியாய் இருந்த போது எதையெதை வலியுறுத்தியதோ அதையதை வாய்ப்புக் கிடைத்த போதெல் லாம் நடைமுறைக்குக் கொண்டு வரும் வழிகளில் நாட்டமதைச் செலுத்தினுர் அண்ணு!

அமைச்சர் குழாம் சூழ அன்பு அண்ணு 6-3-1967 அன்று பதவியேற்ருர். அடுத்து வந்த தமிழ்ப் புத்தாண்டு முதல் எங் கும் தமிழ் மணம் தவழத் தொடங்கியது.

'செயின்ட் ஜார்ஜ் கோட்டை' 'தமிழக அரசு தலைமைச் செயலகமாக மாற்றப்பட்டது.' கவர்ன்மென்ட் ஆஃப் மெட் ராஸ்' தமிழக அரசு என்று தனித்தமிழ் சொல்லாகியது. அரசு முத்திரையிலிருந்த 'சத்யமேவ ஜெயதே' வாய்மையே வெல் லும் என்ருனது.

'ஸ்ரீ' 'ஸ்ரீமதி' 'குமாரி' போன்ற வடமொழிச் சொற்களுக்கு விடை தரவும் 'திரு' 'திருமதி' 'செல்வி' ஆகிய சொற்களைப் பயன் படுத்தவும், அரசாங்க அலுவலகங்களில் தமிழில் பெயர்ப் பலகை வைக்கப்படவும் முடிவெடுக்கப்பட்டு ஆணையும் பிறப் பிக்கப்பட்டது.

துடைத்து வைக்கப்பட்டிருந்த நிதி இலாகா, இருப்பில்லா மல் ஆக்கப்பட்டிருந்த அரசாங்க உணவுக் கிடங்குகள் காங்கிரஸ் சின் கடைசி கால சாதனைகளாகும்.

அண்ணு அந்த ஆண்டு சூன் திங்கள் 20 ஆம் நாள் தாக் கல் செய்த முதல் வரவுசெலவு திட்டமே ஏழையர்தம் நலனைக் கருதியதாக இருந்தது.

அண்ணு அந்த திட்டத்தில் ஏழையர் எல்லோர்க்கும் பி. யூ. சி. வரை இலவசக் கல்வி வழங்கப்படுமென்று அறிவித் தார். கல்விக்காக கடந்த ஆண்டு காங்கிரசாட்சி ஒதுக்கிய தொகை 42 கோடி மட்டுமே. அண்ணு அதனை 54 கோடியாக உயர்த்தினுர். முதல் கட்டமாக 32 இலட்சம் மக்களுக்கு படி யரிசி வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்து தொடர்ந்து

அதனை வழங்குவதற்கான சாத்யக்கூறுகளைக் கண்டறிய வழி செய்தார்.

சாலைகளைச் செப்பனிடுதல், கட்டாந்தரையாய்க் கிடக்கும் நிலங்களை விளைச்சலுக்கேற்ற நிலமாக்குதல், முதியோருக்கு கல்வி கற்பித்தல் முதலான பணிகளைச்செய்ய அரசாங்கத்தின் கருவிகளையும்—ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் பெற்று எந்தவித ஊதியமும் பெருமல் பணியாற்றக் கூடியவர்களைக் கொண்டு 'சீரணி' என்றவொரு செயல் அமைப்பையும் ஏற்படுத்தினுர்.

வாழ்ந்து கெட்டவர்கள் வயிற்றெரிச்சலில் பிதற்றுவதைப் போல் மக்களால் ஒதுக்கப்பட்டிருந்த காங்கிரசின் தலைமைப் பீடங்கள் கழக அரசோடு ஒத்துழையாமையில் ஈடுபட்டனர். 'நெல்லை விதைக்காதே வாழையைப் பயிர் செய்; கரும்பு போடு காசு பார்க்கலாம்' என்றெலாம் பிரச்சாரங்களைத் தொடர்ந்தனர்.

அண்ணு விவசாயிகளுக்கு வேண்டிய துணைப்பொருட்களையெல்லாம் தொய்வின்றி வழங்கியதால் அவாகள தாராளமாக அண்ணுவின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பை நல்கினுர்கள்.

மத்ய அரசின் போக்கால் மோட்டார் கார் வாகனங்களின் உறுப்புக்கள் விலையுயர்ந்து நின்றபோதும், பெட்ரோல், டீசல் விலை கூடியிருந்தபோதும் நடுத்தர மக்கள் பயன் படுத்தும் பேருந்துகளின் போக்குவரத்து கட்டணத்தைக் குறைத்திட வழி செய்தார்.

பதவி கிடைத்தால் போதும் டில்லிக்குப் பல்லக்கு தூக்குபவர்களாக நிற்போம் என்ற நிலையைமாற்றி நடுவணரசுக்கு எதிராக 67 ஆம் ஆண்டு சூலை 23 ஆம் நாள் தூத்துக்குடி சேலம் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று 'எழுச்சி நாள்' முழக்கமிட்டார். காங்கிரசல்லாத எல்லா எதிர்க்கட்சியினரும் ஒன்ருய் நின்று குரல் கொடுத்தனர்.

ஏழையர்தம் துணைவராக அண்ணு இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாத எரிச்சலாளர்கள் குடிசைகளை எரித்து கும்மாளமிட்டனர்.

அண்ணு அந்த ஏழையர்தம் இன்னலைப் போக்கும் விதமான நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தர ஒரு கோடி ரூபாய்க்கு திட்டம் வகுத்து அதற்குப் பொதுமக்களிடமிருந்தே நாற்பது இலட்சத்திற்கும் மேல் நிதியினையும் திரட்டுவித்தார்.

'வேதபுரத்து வித்தூஷகர்க'ளின் எதிர்ப்புக் கிடையிலேயும் சாதிபேதம் ஒழிக்க கலப்புத் திருமணம் செய்து கொள்வோருக்கு தங்கப் பதக்கம் வழங்கப் படுமென்று அறிவித்தார். சுய

மரியாதை இயக்கம் கண்ட திருமணங்களுக்கு சட்டப் பாது காப்பையும் வழங்கி தந்தை பெரியாரின் மனங்குளிர வைத் தார்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை எழிலுற நடத்திக் காட்டினர். கண்டோர் வியக்கும் வகையில் நடந்த அந்த மாநாட்டிற்கு பல்வேறு நாடுகளைச் சார்ந்த 400க்கும் மேற் பட்டவர்கள் கலந்துகொண்டு பாராட்டுக்களை வழங்கினர். இலட்சக் கணக்கானவர்கள் கண்டு மகிழ்ந்த அந்த மாநாடு அண்ணாவின் அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஏற்றவொரு சாட்சிய மாக விளங்கியது!

மீண்டும் 'இந்தி ஆட்சி மொழி' யென நாடாளுமன்றத்தில் ஒரு திருத்த மசோதா கொண்டு வரப்பட்டது.

தமிழகம் மீண்டும் குமுறத் தொடங்கியது.

அந்த தீர்மானத்தை தமிழகம் ஏற்க முடியாது எனவும் அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாகும்வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்றும் அது வரை தமிழகம் தமிழ்—ஆங்கிலம் இரண்டையே ஏற்குமென வும் சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றினர். இனி என். சி. சி. பயிற்சியிலும் இந்திச் சொற்கள் கிடையாது என்று மாணவர்களுக்கும் அறிவித்தார் அண்ணா.

15—4—1968.

அண்ணா அயல் நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். ஆர்வத்தோடு தமிழக மக்கள் திரண்டுவந்து வழியனுப்பி வைத்தனர்.

, எழில்மிகு இத்தாலியை அடைந்தார். வரலாற்று ஏட்டில் அதன் ஏற்றத்தையும்—இன்றைய நிலையையும் ஒப்பிட்டு நோக்கினர்.

வாடிகன் நகரம் சென்று போப்பாண்டவரைச் சந்தித்து அவருக்கு ஏலக்காய் மாலையணிவித்து தொல்காப்பியத்தை யும், திருக்குறளையும் பரிசாக வழங்கினர்.

17 ஆம் நாள் பாரின் மேம்பாடுமிக்க நகரங்களில் ஒன்றுன பாரிஸ் நகரம் சென்று பல இடங்களைப் பார்வையிட்டார்.

அங்கிருந்து அமெரிக்கா சென்றார். அங்கே பலநகரங்களில் தரப்பட்ட வரவேற்பை ஏற்று, பத்திரிகை நிருபர்களின் சரமாரி யான கேள்விகட்கு சரளமான—தெளிவான பதில்களைத் தந்து வானொலி—தொலைக்காட்சி—கருத்தரங்கு நிகழ்ச்சிகளிலும் பங் கேற்று பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களிடம் கலந்துரை யாடி அவர்களுக்கு திருக்குறள் வகுப்பை நடத்தி, அந்த ஏல் பல்கலைக் கழகம் தந்த சிறப்புக்குரிய 'சப் ஃபெல்லோ ஷிப்' பட்டத்தையும் ஏற்றுக் கொண்டார்.

அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட அண்ணா சப்பான் சென்றார்.

விஞ்ஞானத்தின் துணையோடு வெகு துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கும் அந்த நாட்டைக் கண்டு தமிழகமும் அதுபோன்று ஆகவேண்டுமென்ற எண்ணங் கொண்டார். அந்த நாட்டு வெளி விவகார அமைச்சராயிருந்த இடகோமாவையும் மற்றும் பல தொழில் நிபுணர்களையும் கண்டு உரையாடினார். அங்கிருந்து ஹாங்காங் பயணமானார்.

ஹாங்காங் விமான நிலையத்தில்கூட 'அண்ணா வாழ்க' என்ற முழக்கம் எதிரொலித்தது. அங்கே கூடியிருந்தவர்களின் குதூகல வரவேற்பையேற்று நல்லுரையாற்றினார் அண்ணா.

ஹாங்காங்கிலிருந்து சிங்கப்பூருக்குச் சென்றார். அரசாங்கம் அங்கே இயங்குகின்ற சீரான முறையைக் கண்டு சிந்தை மகிழ்ந்தார்.

உலகின் பல நாடுகளில் அண்ணா கண்ட உன்னத வளர்ச்சியை தமிழகத்திலும் உருவாக்க வேண்டுமென்ற உறுதியோடு பிறந்த பூமிக்குத் திரும்பிய அண்ணாவை பெருமிதத்தோடு வரவேற்று மகிழ்ந்தது தாயகம்.

★ ★

அண்ணாவின் ஆட்சியில் வேளாண்மைக்கு முதலிடம் தரப்பட்டது. ஆயினும் காங்கிரசின் ஆட்சியில் உருவான தொழிற்சாலைகளைவிட 67 ல் கழக ஆட்சியில் தோற்றுவிக்கப்பட்ட தொழிற்சாலைகள் அதிகமே.

மாநில அரசின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பல நல்ல திட்டங்களை அனுமதிவேண்டி மத்ய அரசின் முன்வைத்தார் அண்ணா.

மின்னணுக் கருவிகள் உற்பத்தி தொழிற்சாலை, கனரகத் தகடுகள் தயாரிப்புத் தொழிற்சாலை, செயற்கைப் பட்டு நூல் உற்பத்தி போன்ற பலவும் அவற்றில் அடங்கியனவாகும்.

இப்படி சாதனைகளின் சிகரத்தில் அந்த சரித்திர நாயகன் ஏறிக்கொண்டிருந்த நேரத்தில்தான் சதிசெய்ய வந்தது புற்று நோய் எனும் கொடுமை!

மருத்துவர்கள் சோதனைக்குப் பிறகு அறுவைச் சிகிச்சைக்கு அண்ணா அமெரிக்கா செல்ல வேண்டுமென வேண்டுகோளையும் விடுத்தனர்.

விருப்பமில்லாத போதும் வேறு வழியில்லா நிலையில் அண்ணா சம்மதித்தார்.

9—10—68.

கழகத் தோழர்களும், தலைவர்களும், பொதுமக்களும் விமான நிலையத்தில் கூடி அண்ணாவை அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்துவிட்டு கண்களில் வடிந்த கண்ணீரைத் துடைத்தபடி நின்றனர்.

கலைஞரும், நாவலரும் அண்ணாவுடன் பம்பாய்வரை சென்று வழியனுப்பிவிட்டு வாட்டமுடன் திரும்பினர்.

தனது துணைவியார், செல்வன் பரிமளம், மருத்துவர் சதாசிவம், இரா. செழியன், இராசாராம் போன்றோர் உடனிருக்க அண்ணா மருத்துவமனையில் சேர்ந்தார். அங்கே மிகச் சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணராகத் திகழ்ந்த டாக்டர் மில்லர் சிகிச்சையை வெற்றிகரமாக முடித்தார்.

அன்றைய பிரதமர் இந்திரா, நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் ஆகியோரும் மருத்துவமனைக்குச் சென்று அண்ணாவின் நலம் விசாரித்தனர்.

என்னவாகுமோ, எது நேருமோ என்று இதயம் துடிக்கக் காத்திருந்த மக்கள் அண்ணா உடல் நலம் தேறிவரும் சேதி கேட்டு தேறுதல் பெற்றனர்.

அறுபதாம் ஆண்டு பிறந்த நாளிலே அமெரிக்க மருத்துவமனையில் அண்ணா.

அந்த பொங்கு தமிழ்க் காவலன் புனிதத் திருநாளை தமிழகமெங்கும் பூரிப்புடன் கொண்டாட ஏற்பாடுகள் நடந்தன.

பேராசிரியர் அன்பழகன் நியூயார்க் நகரம் சென்று அண்ணாவின் நலமறிந்து ஆறுதல் பெற்றுத் திரும்பினர்.

நவம்பர் திங்கள் ஆறும் நாள். நாடு நலம்பெற்றுத் திரும்பிய அந்த தனிசிறந்த தலைவனை வரவேற்று மகிழ்ந்தது.

★ ★

மருத்துவ சிகிச்சை பெற்று திரும்பியுள்ள அண்ணாவுக்கு நிரம்ப ஓய்வு தேவையென்னும், நல்ல காற்றோட்டமுள்ள இடத்திலிருக்க வேண்டுமென்றும், 'ஏர்கண்டிசன்' அறையிலிருக்க வேண்டுமென்றும் உணவு முதலானவற்றை உரிய நேரத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், உரையாற்றுவதை சிறிது காலம் தவிர்க்க வேண்டுமென்றும் மருத்துவர்கள் ஆலோசனை வழங்கினர்கள்.

தன்னலத்தை அந்தத் தமிழர்தம் தானைத் தலைவன் எப்போது கொண்டார் இப்போது மட்டும் கொண்டுவிட?

வாழ்நாளெல்லாம் வண்ணத் தமிழகம் வையகத்தின் முன் னணியில் நிற்கவே எண்ணங்களை ஓடவிட்டு ஓயாதுழைத்த அந்த உத்தமன் ஓய்வெடுத்துக் கொள்ள ஒப்புக் கொள்ள வில்லை.

'தமிழ்நாடு' பெயர் மாற்றத்திற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்தது. அகமிக மகிழ்ந்து போனார் அண்ணா.

1-12-68 அன்று நாடு முழுவதும் அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட வேண்டுகோள் விடுத்தார்.

இடைவிடாத அரசாங்க அலுவல்களால் அவரது உடல் நிலை மீண்டும் பாதிக்கப்பட்டது.

அந்தநிலையிலும், — மருத்துவர்கள் மறுப்பு தெரிவித்தும், "தமிழ்நாடு' பெயர் மாற்ற மகிழ்ச்சித் திருநாளில்கூட நான் பங் கேற்க முடியாதென்றால் இந்த உடல் இருந்துதான் என்ன பயன்? " என்றவராய் அந்த விழாவில் பங்கேற்று உரையாற் றினார்.

ஐக்ய நாடுகளின் பிரகடனத்திற்கேற்ப 'மக்கள் உரிமை நாள்' குறித்து வானொலியில் உரையாற்றவும் செய்தார்.

பழி சொல்வதற்கென்றே காத்துக்கிடந்த கூட்டம் அண்ணாவின் மருத்துவச் செலவு குறித்து அர்த்தமற்று பேசத் தொடங்கியது.

விரலசைத்தால் இலட்சக் கணக்கில் கொட்டிக் கொடுக்கும் தம்பியர்க் கூட்டத்தைக் கொண்டிருந்த அண்ணாவுக்கான செலவுத் தொகையாம் ஒன்றரைலட்சம் ரூபாயை தி. மு. கழகம் திரட்டி அரசாங்கத்திடம் தந்தது.

1969. தைத்திருநாள். 'காஞ்சி' பொங்கல் மலரில் அண்ணா தன் எண்ணங்களை எழிலுற வடித்திருந்தார். அந்தக் கட்டுரை யிலேயே தன் உடல் நலம் கெட்டிருக்கும் சேதியினையும் சுட்டிக் காட்டியிருந்தார். தன் தங்கத் தம்பிகளுக்காக அண்ணாவின் சித்திரத் தூவல் திறந்து முத்திரைக் கடிதம் தீட்டியது அதுவே கடைசி.

அதற்குப் பின்னரும் தன்னுடன் அன்போடு பழகி மறைந்து விட்ட கலைவாணர் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசினார்.

உடல் நிலை மோசமானது. உணவை உட்கொள்ளவே முடி யாத நிலைமை ஏற்பட்டது.

அடையாறு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்

அங்கே இருபதுக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கூடி அண்ணாவைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்தனர்.

அமெரிக்காவுக்கு தகவல் பறந்தது. அங்கிருந்து டாக்டர் மில்லரும் டாக்டர் ஹன்ஸ்கே எனும் 'ரேடியம்' சிகிச்சை நிபுணரும் விமானத்தில் விரைந்து வந்து சேர்ந்தனர்.

அண்ணா நினைவிழந்தார்!

ஆம்; தமிழர் சமுதாயத்தின் நிலையுயரவே தன் நினைவுக் கொடிகளை எங்கும்—எந்நாளும்—படரவிட்ட அண்ணா நினைவையிழந்தார்.

சிகிச்சைகள் நொடிகள் தோறும் தொடர்ந்தன.

மருத்துவர்கள் தங்கள் ஆற்றல் முழுவதையும் பயன் படுத்தி இரவும் பகலுமாய்க் கண் சிவக்க நின்றனர்.

வானொலியில் அண்ணாவின் உடல் நிலை குறித்து அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

அதிர்ச்சியும் அமைதியும் தமிழக மக்களை அவ்வப்போது மாறி மாறித் தாக்கியும் தளர்வித்தும் கொண்டிருந்தன.

நவீன மருந்துகள் விமானத்தில் வந்து சேர்ந்தன.

தங்களின் நாடித் துடிப்பாகவே அண்ணாவை எண்ணியிருந்த நாட்டு மக்கள் ஊண் உறக்கமின்றித் தவித்தனர்.

இந்து மத நம்பிக்கையாளர்கள் அண்ணா பிழைத்து வர வேண்டுமென்று ஆலயங்களில் வழிபாடுகள் நடத்தினர்.

'தேவனே எங்கள் திருப்புதல்வனைத் திருப்பித் தாருங்கள்' என்று கிறித்தவ தேவாலயங்களில் மணியோசைகள் முழங்கின.

'எல்லாம் வல்ல அல்லாவே! எங்கள் இதயங் கவர்ந்த நல்லோனைக் காத்திடு' என்று 'திருக்குரான்' சமுதாயம் வேதம் பாடியது.

சீக்கியர்கள் 'கிரந்த சாகிப்' படித்தார்கள். பௌத்தர்களும், ஜைனர்களும் வேண்டுதல்களை விருப்பங்களாகக் கொண்டிருந்தார்கள்.

எந்த மதத்தையும் சார்ந்திராதவராயினும், எல்லா மதத்தவரிடமும் அன்பு கொண்டிருந்த அண்ணாவின் பண்புக்கு அந்தப் பாச நெஞ்சங்களின் வேண்டுகோள்கள் முத்தான முத்திரையிட்டன.

எது நடந்தென்ன?

இலட்சக் கணக்கான தம்பியர்கள் தேம்பித் தேம்பியழ—கோடிக் கணக்கான இதயங்கள் குமுறக் குமுற—1969 ஆம்

ஆண்டு பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் நள்ளிரவுக்குப் பின்—12 - 22 மணிக்கு—நெஞ்சுயர்த்தி நின்ற கொஞ்சு தமிழ் வடிவம் மீளாத்துயிலில் ஆழ்ந்து விட்டார்.

நியாயங்களின் பயணத்தைத் துவக்கி வைத்தவொரு தருமதேவன் ஓய்ந்துவிட்டான்.

'இன்னுமொரு இருபதாண்டுகளாவது வாழ்ந்திருந்தால் எப்படிப்பட்டவொரு தங்கத் தமிழகம் பூத்திருக்கும்' என்று எல்லோரது இதயங்களும் ஏக்கப் பெருமூச்சு விட அந்த இமயம் இயற்கைக் கனலில் கரைந்தது.

பிறக்கின்றவர்கள் அனைவருமே ஒருநாள் இறக்கின்றவர்களே!—விதி விலக்கேயில்லாத விபரம் இது.

ஆனால், அப்படிப்பட்ட மனிதர்களுள் இருக்கின்ற போது இந்த சமுதாயத்திற்காக வாழ்ந்தவர்கள் எத்தனை பேர்?—இதனைத் தான் உலகம் கணக்கிடுகிறது.

அந்தக் கணக்கேட்டில் பெயர் பொறித்துக் கொள்ளும் பேராளர்கள் வெகு சிலரே! விரல் விட்டு எண்ணிவிடக் கூடியவர்களே!

அத்தகையோருள் '**அறிவுப் புனல் அண்ணா**' முதன்மையானவர்!

ஞாலமுள்ள வரையில் காலத்தை வென்ற அந்தக் கோலத் திருமகன் வாழ்வார்!

**ஆம்; வாழ்வார்!**

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1

கோபி பிரிண்டர்ஸ், சென்னை - 1.